# வைஷ்ணவி சந்நிதி முறை

தொகுதி—1



சன்மார்க்க சங்கம்
வைஷ்ணவி ஆலயம்
திருமுல்லைவாயில் : ஆவடி வழி

# வைஷ்ணவி சந்நிதிமுறை

தொகுதி—1

சன்மார்க்க சங்கம்
(பதிப்பாளர்)

வைஷ்ணவி ஆலயம்

திருமுல்லைவாயில்
ஆவடி (வழி)


உ

ஆதிபராசக்தியின் அருட் ப்ரபாவத்தாலும்
காஞ்சிகாமகோடி பீடாதிபதி
**ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகளின்**
அநுக்ரஹ சக்தியாலும்
இந்நூலை
ஆக்கி, அச்சேற்றி, விரைவில் வெளிவர உதவிய
மெய்யன்பர்களின் உளமார்ந்த நற்பணிக்கு
எமது மனமார்ந்த

**நன்றி வணக்கம்**

**—பதிப்பாளர்**

Printed at Sri Rajah Power Press, Madras-14.



ஸ்ரீ வைஷ்ணவி
திருமுல்லைவாயில்

# அஞ்சலி

அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான
ஆதியை அநாதி யேக
தத்துவ சொருபத்தை மதசம்ம தம்பெருச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தில் நின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை அஞ்சலி செய்வாம்.

—தாயுமானவர்.

|| श्री ||

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः ।

திருமுல்லை வாயிலில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ வைணவி தேவியின்பேரில் இயற்றப்பட்ட "தேவி அனுபூதி", "தேவி அலங்காரம்", "தேவிப் பத்து" என்னும் நூல்கள் எளிய தமிழ் செய்யுள் நடையில் அருணகிரிநாதருடைய கந்தரனுபூதி, கந்தரலங்காரம் இவைகளைத் தழுவி எழுதப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து சந்தோஷப் படுகிறோம்.

இதனை அச்சிட்டோர், பிரசுரப்படுத்தியோர், அனுபவிப்போர் எல்லோரும் அம்பிகையின் நல்லருளுக்கு பாத்திரமாகுவார்களாக!

நாராயண ஸ்ம்ருதி :

விஜய யாத்ராஸ்தானம்
மாம்பலம்—சென்னப்பட்டினம்
விளம்பி கார்த்திக சுத்தத்வாதசி



ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்
காஞ்சி காமகோடி பீடம்

# அன்னையின் பாதசேவை

ஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அருள்வாக்கு

எல்லாச் சக்திகளுக்கும் காரணமாக, ஆதார சக்தியாக இருப்பது பராசக்தி; அம்பிகை, அன்னை, அம்பாள், ஆதிசக்தி என்ற பதங்களெல்லாம் இந்த முதற் பொருளைத்தான் குறிக்கின்றன. எல்லோரும் தங்கள் க்ஷேமத்துக்காகவும், லோக க்ஷேமத்துக்காகவும் அம்பாளைத் தியானம் பண்ண வேண்டும். எனக்கு முக்கியம் அம்பாள். அம்பாளின் சரணாரவிந்தத்தைத்தான் நான் தியானம் செய்து கொண்டிருக்கிறேன்; உலக க்ஷேமத்துக்காக.

அம்பாளும் ஸ்வாமியும் சேர்ந்து அர்த்தநாரீச்வரராக இருக்கிறார்கள். லோக க்ஷேமத்தின் பொருட்டு ஒரே பிரம்மம் பரமசிவனாகவும், மகாவிஷ்ணுவாகவும், பிரம்மாவாகவும் இருந்தாலும் இவையெல்லாம் ஒரே ஸ்வரூபம். ஒரே பரமாத்மா மூன்று ரூபத்தை எடுத்துக்கொண்டு இவ்வாறு லோகத்துக்கு அனுக்ரஹம் செய்வதற்காகவே செயல்படுகிறது. "பிரம்ம விஷ்ணுசிவாத்மிகாயை" என்று அம்பாளுக்கு ஒரு பெயர். இது ஸரஸ்வதி அஷ்டோத்தரத்தில் வருகிற ஒரு நாமா. இதே போலத்தான் லக்ஷ்மி அஷ்டோத்தரத்திலும் ஒரு நாமா இருக்கிறது. லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் அம்பாள் தான் பிரம்ம ரூபமாக சிருஷ்டித்தொழிலைச் செய்பவளாகவும், கோவிந்த ரூபிணியாகக் கோப்த்ரீயாகவும், ருத்ர ரூபமாக ஸம்ஹாரரூபிணியாகவும் விளங்குகிறாள் என்ற கருத்து காணப்படுகிறது. அவள் ஒருத்திதான் இப்படி விளையாடுகிறாள். இதைப் புரிந்து கொண்டு அவளுடைய சரணாரவிந்தத் தியானம் பண்ணி நம் மதத்தை ரட்சிப்பது நமது கடமை.

நாம் எல்லோரும் சகோதர சகோதரிகள் என்று வெறும் பேச்சளவில் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. இந்த

உணர்ச்சி உண்மையிலேயே வரவேண்டும். இது ஏற்பட வேண்டுமானால் நம் எல்லோருக்கும் ஒரே தாய்தகப்பன் தான் என்ற உண்மை தெரிய வேண்டும். இது எப்படி உண்டாகும்?


"ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ" என்று காளிதாசன் சொன்னான். எல்லோருக்கும் அம்மா அப்பா யார்? பார்வதி பரமேச்வரர்கள் தாம் என்பதை உண்மையாகப் புரிந்து கொண்டு விட்டால் நாம் எல்லோரும் அவர்களுடைய குழந்தைகள், சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் வந்து விடும். சாட்சாத் ஜகன்மாதாவைத் தெரிந்து கொள்ளுகிறவரையில் துவேஷம், விரோதம், வெறுப்பு முதலியவை இருக்கும். அவளைத் தெரிந்து கொண்டு விட்டால் நமக்குள் துவேஷம் வராது.

நினைக்கிறபடியே நினைப்பதையெல்லாம் செயலாக்க வேண்டும் என்று அம்பாளைப் பிரார்த்திக்கிறேன். எப்போதெல்லாம் குறை தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் அம்பாளிடத்தில் முறையிட்டு அந்தக் குறை இல்லாமலிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன். முதலில் நாம் தப்பு பண்ணாமலிருந்தால் போதும். அனுஷ்டானங்களை விடாமல் செய்து கொண்டு அவளுடைய சரணாரவிந்தங்களைத் தியானம் செய்து கொண்டிருந்தால் போதும். ஒருத்தருக்கும் கஷ்டம் வராது.

எல்லோரும் காளிதாசனைப் போல் ஜகத்துக்கெல்லாம் மூலமாக இருக்கிற சக்தியைத் தாய் தந்தையாகக் கொண்டு விட்டால் ஆயிரம் மதங்கள் வேண்டாம்; ஆயிரம் சச்சரவுகள் வேண்டாம். அந்த அம்பாளுடைய சரணாரவிந்தத்தைத் தியானம் செய்தாலே போதும்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| (i) அஞ்சலி | | |
| (ii) ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம் | | |
| (iii) ஸ்ரீ சங்கராச்சாரியார் அருள் வாக்கு | | |
| வைணவி ஆலய வரலாறு | .. | i-xvi |
| தேவி அநுபூதி | .. | 1-35 |
| வைணவித் துதிக் குறட்பா | .. | 36 |
| தேவி அலங்காரம் | .. | 37-104 |
| தேவிப்பத்து I | .. | 105-110 |
| ,, II | .. | 111 |
| ,, III | .. | 117 |
| தனிப் பாடல்கள் | .. | 123 |



வைஷ்ணவி ஆலயத் தோற்றம்

உ



# வைஷ்ணவி ஆலய வரலாறு

## I. தோற்றுவாய்

“ वैष्णवीं लोकइह मादयन्तीं ” (வைஷ்ணவீம் லோக இஹ மாதயந்தாம்) என்பது வேதவாக்கு (தைத்திரியம்). அன்னை பராசக்தியின் கருணை, மஹிமைகள் தேவீமாகாத்ம்யத்திலும், புராணங்களுள் சிறந்துவிளங்கும் பகுதிகளுள் பரம்மாண்ட புராணத்துள் லலிதாஸஹஸ்ரநாமம் ஆதிய துதிநூல்களிலும், ஆதிசங்கரபகவத்பாதர் அருளிய ஸௌந்தர்ய லஹரி முதலிய மந்திர நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. “ அரியலால் தேவி இல்லை ” என்பது அப்பர் சுவாமிகளது அருள்மொழி. அகில தலத்திலும் வ்யாபித்திருக்கும் விஷ்ணு சக்தியே, வைஷ்ணவி என வழங்கப்பெறும் லோகமாதா. இப்பரதேவதாம்பிகை, வடதிருமுல்லை வாயிலுக்கடுத்த பாகோ பார்மில் (Bago Farm) கோயில் கொண்டருளியுள்ள அற்புத வரலாறு வருமாறு :—

## II. கலைச்செல்வம்

பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட தெய்வச்சிலைகளின் அழகில் ஈடுபட்டார் அன்பர் ஒருவர். பல விக்கிரகங்களைப் பெரும் பொருட்செலவில் வாங்கித் தமது வீட்டில் வைத்து மகிழ்ந்தார். அது அவருடைய உல்லாசப் பொழுதுபோக்கு (hobby). சென்னை மயிலையில் அவருடைய இல்லம் தெய்விகக் கலைக்கோயிலாய் விளங்கிவந்தது.

அவருக்கு விக்கிரகங்களை விற்பனை செய்தவர், பார்த்திப ஸ்ரீ ஐப்பசி மாதம் (அக்டோபர், 1945) தீபாவளிக்கு மூன்று தினங்கள் முன்னர், ஓர் இரவு 10 மணிக்கு ஒரு மோட்டார் காரில் அவர் இல்லத்திற்கு வந்து எழுப்பினர். விழித்து எழுந்து அவரைச் சந்தித்தவுடன், அவ்வியாபாரி, "நான் உங்களுக்கு ஓர் அழகிய கற்சிலையைக் கொண்டு வந்திருக்கிறேன்; அதைத் தங்களுக்கு இலவசமாகக் கொடுக்க விரும்புகிறேன்" என்று சொன்னர். சிலை வைக்கோல்சுற்றி மூடப்பட்டிருந்தது. அன்பரும் வியாபாரியும் அச்சிலையை வண்டியிலிருந்து இறக்கி வீட்டின் முன்புறத் தோட்டத்தில் வைத்தனர். வியாபாரி உடனே விடைபெற்றுச் சென்று விட்டார். இறக்கியவுடன் அன்பர் அச்சிலையைப் பிரித்துப் பார்க்கவில்லை. ஏனென்றல், அந்த விற்பனையாளர் அதிக விலை வைத்தே வ்யாபாரம் செய்பவர்; சொன்ன விலைக்குக் குறைத்துக் கொடுப்பவரல்லர். சிலையை இலவசமாகக் கொடுத்ததால், அது அவ்வளவு நன்ருகவும் உயர்ந்ததாகவும் இராது என அன்பர் கருதினர். என்ன சிலை என்பதையும் கவனிக்கவில்லை.

மறுநாள் காலை கட்டுகளைப் பிரித்துப் பார்த்ததில், அச்சிலை அழகியதும், வெகுபுராதனமானதுமான ஒரு தேவி விக்ரஹமாக இருக்கக்கண்டு ஆச்சர்யமடைந்தார். அச்சமயத்தில் அவருடன் சிறந்த தெய்வபக்தராக விளங்கும் நெருங்கிய நண்பர் ஒருவர் அருகில் இருந்தார். நிரம்பச் செல்வமும், பரந்த தொழிலும், சிறந்த செல்வாக்குமுடைய அப்பெருந்தகை, தமது தொழில் பொருள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டுத் தெய்வ வழிபாட்டைச் சிக்கெனப்பிடித்துத் துறவிபோல் வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீ அரவிந்தமகரிஷியிடமும் ஸ்ரீ ரமணபகவானிடமும் மிக்க அன்பு பூண்டு தம் வாழ்நாளைத் தெய்வத் தொண்டுக்கே அர்ப்பணம் செய்தவர்.

அப்பெரியாரையும் அன்பரையும் உளங் குளிரச் செய்தது அச்சிலை. அதன் வசீகரத் தோற்றமும், தெய்விக அழகும், எழிலார்ந்த அமைப்பும் எல்லையற்ற வியப்பை ஊட்டின. உடனே அப்பெரியார் "ஏனைய விக்ரஹங்களைப்போல் தனி அறையில் வைத்து அழகு பார்க்கக்கூடிய விக்ரஹம் அல்ல

இது'' எனக்கூறி, "இதை ஓரிடத்தில் ப்ரதிஷ்டை செய்து பூசிக்க வேண்டும்'' என்றும் கட்டளையிட்டார். வயதிலும், அநுபவத்திலும், ஆற்றலிலும், தெய்வ பக்தியிலும் உயர்ந்த அப்பெரியாரின் வார்த்தைக்கு இணங்கி, அச்சிலையைப் பிரதிஷ்டை செய்வதாக அன்பரும் ஒப்புக்கொண்டார்.

## III. முதல் பிரதிஷ்டை

அன்பர் வீட்டின் முன்புறத் தோட்டத்தில் உள்ள மகிழ மரத்தடியைச் சிறந்த இடமாகத் தேர்ந்தெடுத்துச் சிலையைப் ப்ரதிஷ்டை செய்யத் தீர்மானித்தார்கள். அன்று தீபாவளி நன்னாள். ஒரு சிறு சிமெண்ட் மேடை கட்ட ஒரு கொத்தன்கூட அகப்படவில்லை. நன்று எனத் தோன்றியதை அன்றே செய்யவேண்டுமாதலின், அன்பரும் அவரது புதல்வியும் தாமே கடைக்கால் தோண்டி ஜல்லிக் கற்களைப் பரப்பி, பீடம் கட்டத் துவக்கினார்கள். அவ்வமயம் ஒரு மார்வாடி நண்பர் வந்து, கொத்து வேலையையும் மனமுவந்து செய்யும் தனவந்தர்களைக் கண்டு அதிசயித்து, உடனே சென்று ஒரு மார்வாடிக் கொத்தனைத் தமது காரில் அழைத்து வந்து இமைப்பொழுதில் பீடம் அமைத்துக் கொடுத்தார். ஆனால் பிரதிஷ்டை செய்யவேண்டிய நேரம் நெருங்கி விட்டதால் பூசு வேலை செய்ய அவகாசம் இல்லை.

விக்ரகத்தை முறைப்படி நிறுவி ஆராதிக்க வேண்டுமென்ற கருத்தைத் தோற்றுவித்த பெரியார், தாமே நேரிற் சென்று திருவல்லிக்கேணியில் வசித்துவந்த மகாலக்ஷ்மி உபாஸகர், ஸ்ரீ P. A. சுப்ரமண்ய அய்யரை, விக்ரகப் பிரதிஷ்டைக்காக அழைத்துவந்தார். அவரும் விக்ரகத்தின் அழகிலும், தெய்விகப் பொலிவிலும் ஈடுபட்டு, அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தூப, தீப, நைவேத்யாதிகள் செய்து தீபாராதனையை முடித்துப் பிரதிஷ்டையைப் பூர்த்தி செய்தார். அன்று மகாலக்ஷ்மி அஷ்டோத்ரம் அருச்சனை மட்டும் செய்யப்பட்டது. இவ்வாறு **பார்த்திப ஹு ஐப்பசி மீ க்ருஷ்ண சதுர்த்தசி கூடிய சுபதினத்தில் தீபாவளி யன்று (அக்டோபர் 1945) மாலை** தேவி விக்ரஹப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிறகு, வந்திருந்த லக்ஷ்மி உபாஸகர் அன்பரைப் பார்த்து "தாங்கள் நாள்தோறும் பூஜை செய்ய அவகாசமிராது என்பது எனக்குத் தெரியும். அடியேன் ப்ரதிஷ்டை செய்ததால் ஒரே ஒரு விஷயம் மட்டும் தங்களிடம் கூற விரும்புகிறேன். அதாவது வெள்ளிக்கிழமைகள் தோறும் சுத்தோதக (அதாவது தண்ணீர்) அபிஷேகமாவது செய்து புஷ்பங்களால் அலங்கரித்து, லக்ஷ்மி அஷ்டோத்ரம் பாராயணம் செய்து, பால் அல்லது பழம் நிவேதனம் செய்ய வேண்டும். இவ்வழிபாடே போதுமானது; எனக்கும் திருப்தி யாக இருக்கும்" என்று கூறினர். அன்பரும் அவ்வாறே செய்து வருவதாக ஒப்புக் கொண்டார். அக் காலத்தில் அன்பருக்கு விக்ரக ஆராதனையில் அவ்வளவாக நம்பிக்கை இருந்ததில்லை. ஆனாலும் "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றபடி பெரியோர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அதனை நடத்திவந்தார். என்னே தேவியின் கருணை! அக் கணத்திலேயே, அன்னை அன்பரைத் தடுத்தாட்கொண்டு தனது பணிக்கு ஆளாக்கிக் கொண்டு விட்டாள். ஆரம்பத்தில் பூஜை மிக எளிய முறையில் இருந்தது. நாளடைவில் பூஜை வெகு விமரிசையாகவும் விரிவாகவும் நடந்தது. நண்பர்களும், வழிப்போக்கர்களும், அக்கம் பக்கத்து வீட்டாரும் வெள்ளிக்கிழமை பூஜையில் கலந்துகொண்டு களித்தனர். சில நாட்களில் லலிதா ஸ்ஹஸ்ர நாம பாராயணம் முதலிய விரிவான முறைகள் மேற்கொள்ளப்பட்டன. பூஜை மட்டும் தவருது நடந்து வந்தது.

## IV. வைஷ்ணவி

அன்பரது இல்லத்துக்கு மகான் ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள் சென்னை வரும் சமயங்களில் அடிக்கடி விஜயம் செய்வார். சுவாமிகள் அன்பரிடம் பேசும் சமயங்களில் மகிழ மரத்தடியில் வீற்றிருக்கும் தேவியின் சௌந்தர்யத்தையும் சாந்நித்யத்தையும் குறித்து மிக மிகப் புகழ்ந்து பேசுவார். "வைஷ்ணவி அழகாய் இருக்கிருள்" என்றும் சொல்லுவார். அத் தெய்வத்திற்கு 'வைஷ்ணவி என்று ஏன் பெயரிட்டீர்கள்?' என அன்பர் வினவியதற்கு, "இம் மூர்த்தி போல ஒரு தேவி விக்ரஹத்தை நான் வடதேச யாத்திரையில் காஷ்மீரத்தில் கண்டிருக்கிறேன்; அதனை

வைஷ்ணவி என வழங்கினுர்கள். அதைப் போலவே இச் சிலையும் பொலிவுடன் இருப்பதால் இந்த மூர்த்தியையும் அவ்வாறே பெயரிட்டழைக்க எண்ணினேன்'' என்று சுவாமிகள் கூறினுர். அன்று முதல் தேவிக்கு வைஷ்ணவி என்ற பெயர் வழங்கலாயிற்று.

## V. வள்ளிமலை சுவாமிகளின் ப்ரதிஷ்டை

பிறகு 1948-ஆம் ஆண்டு இறுதியில் ஒரு நாள் சுவாமிகள் உறுதியுடன், அன்பரிடம் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

''நான் உன்மீது ஒரு பாரத்தைப் போட அபிப்பிராயப் படுகிறேன். நீ என்ன சொல்லுகிருய்!''

''சுவாமீ! என்ஞல் தாங்கக் கூடிய பாரமாஞல் நான் எடுத்துக் கொள்கிறேன்.''

''ஏண்டா! உன்ஞல் தாங்க முடியாத பாரத்தை உன்மீது போடுவேஞ!'' என்று கூறிவிட்டுப் பேச்சை முடித்து விட்டார். அப் பாரம் என்ன என்று விளக்கிக் கூறவுமில்லை. அவ்விஷயத்தை அன்பரும் நாளடைவில் மறந்து விட்டார். 1949-ஆம் ஆண்டு நவராத்திரிக்கு முன்னதாக சுவாமிகள் ஒருநாள் வந்து பின்வருமாறு அன்பரிடம் கூறினுர்.

''நான் வள்ளிமலையில் இருந்த காலத்தில் என்னுடைய இஷ்ட தேவதையைப் பிரதிஷ்டை செய்து பூஜித்துவந்தேன். (வள்ளியம்மையை *'பொங்கி' என்று பெயரிட்டும் வழங்கினுர் அவர்.) அவ்வம்மையைச் சென்னையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் பின் பக்கத்தில் உள்ள சிறிய கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கின்றேன். ஆஞல் அந்த இடம் சுத்தமாக இல்லாததால் என் மனத்திற்குத் திருப்தியாக இல்லை. எனக்கு அந்தத் தெய்வத்தை இந்த வைஷ்ணவி மூர்த்தத்தில் ஆவாஹனம் செய்யலாம் என்ற விருப்பம் இருக்கிறது. என்ன சொல்லுகிருய்?'' என்று கேட்டார்.

''நான் வெள்ளிக் கிழமை தோறும் நடத்திவரும் பூஜையைப் பார்த்திருக்கிறீர்கள்! அந்த மாதிரி பூஜை செய்யத் தான் எனக்கு அவகாசம் உண்டு. எனக்குத் திருப்புகழ் பாடவோ, படிக்கவோ தெரியாது. மேற்கொண்டு ஏதாவது செய்ய வேண்டுமாஞல் என்ஞல் முடியாது'' என்று அன்பர் பதில் தெரிவித்தார்.

---

* வள்ளிமலை வள்ளல், பக்கம் 131–132.

"தற்சமயம் வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் பூஜையே போதும். அதுவே திருப்திகரமாய் இருக்கிறது. நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். 'பொங்கி' மிகவும் சௌம்யமான தெய்வம். கோடைக்காலத்தில் மட்டும் வெள்ளிக்கிழமை செய்துவரும் நைவேத்தியத்துடன் தயிர் அன்னம் நிவேதனம் செய்வாயாயின் பொங்கிக்குப் பரம திருப்தியாயிருக்கும்" என்றார்.

பின்னர், நவராத்ரியின்போது ஒருநாள் பிரதிஷ்டைக்கர்க சுவாமிகள் அன்பரையும் அவர் தாயாரையும் கலந்துகொண்டு ஏற்பாடு செய்தார். ஒரு குறிப்பிட்ட நன்னாளில் திருப்புகழ்பாடச் சில பெண்களையும் உடன் அழைத்து வந்தார். சிவப்பான புடவைவாங்கி வரும்படி உத்தரவிட்டார். அச் செலவைச் சுவாமிகள் தாமே மேற்கொள்ள வேண்டுமென்றும், அன்பர் கொடுக்கக் கூடாதென்றும் தெரிவித்தார். பிறகு ஒரு குறக்குலமங்கையை அழைத்துவரச் சொன்னார். தம்முடன் வந்த மற்றைய தாய்மார்களுடன் சேர்ந்து திருப்புகழ்ப் பாராயணத்தை நடத்தினார். பிறகு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தாமும் தனியாகப் பாராயணம் செய்தார். ஒரு திருப்புகழ்ப் பாடலை மட்டும் நெஞ்சு நெக்குருக மிக உரத்த குரலில் லயித்துப் பாடினார். அன்பர் கண்களினின்றும் ஆநந்த நீர் பெருகியது. பிறகு சுவாமிகள் வைஷ்ணவி தேவியை மூன்றுமுறை வலம் வந்து, தாம் அழைத்து வரச்சொன்ன குறத்திக்கு அந்தப் புடவையைக் கொடுத்துவிட்டு, 'என் பொங்கிப்பிரதிஷ்டை முடிந்துவிட்டது' என்றும் தெரிவித்தார்.

## VI. பகவான் ஸ்ரீரமணர்

வள்ளிமலை சுவாமிகள் 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீபகவான் ரமண மஹரிஷிகள் நோய்வாய்ப் பட்டிருந்த சமயத்தில் வைத்திய நிபுணர்கள் தந்த மருந்துகளைத் திருவண்ணாமலைக்கு எடுத்துப்போகும் விஷயத்தில் ஈடுபட்டிருந்த அன்பரை "இந்த வெள்ளிக்கிழமைப் பூஜைக்கு நீ இங்கே வரவேண்டாம். நான் அந்தப் பூஜையை முடித்து விடுகின்றேன்" என்று சொல்லி, "மஹரிஷிகளுடைய பெரிய நிலையை அறிந்தவர்கள் வெகுசிலரே; அவரைச் சாதாரண மஹான் என்று நினைக்கக்கூடாது. அவர் மறைவதனால் உலகத்திற்கே பெருத்த நஷ்டம். அவர் இன்னும்

நீடூழிகாலம் நம்முடன் வாழ்ந்து அவர் தம் பெயரும், புகழும், போதமும் என்றென்றும் நிலைத்திருக்கப் பொங்கியிடம் பூஜை செய்து நான் பிரார்த்தித்துக் கொள்ளப்போகிறேன்'' என்றும் தெரிவித்தார்.

திருவண்ணாமலையிலிருந்து வந்த அன்பரைப் புதன்கிழமை காலையில் வந்தவுடனேயே மறுபடியும் திருவண்ணாமலைக்குப் போகும்படி உத்தரவிட்டார். 14-4-1950-அன்றும் சுவாமிகள் அன்பரது வீட்டுக்கு வந்து அன்றிரவு பொங்கி பூஜை செய்தார். பூஜை முடித்ததும் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டு விட்டார். பிரதிஷ்டை செய்தபின் இந்த நாளில்தான் வள்ளிமலை ஸ்வாமிகள் பொங்கியின் பூஜையைத் தாமே செய்தார். இதே தினத்தில் தான் ஸ்ரீரமண பகவானும் விதேக கைவல்யம் எய்தினர்.

பிறகு வள்ளிமலை ஸ்வாமிகளின் ஸமாதிக்குப்பின்னரும் தேவி, அன்பரது இல்லத்தின் முன்புறத் தோட்டத்து மகிழமரத்தடியிலேயே காட்சியளித்துக்கொண்டு வீற்றிருந்தாள்.

## VII. செந்திரு வாழும் வடதிருமுல்லைவாயில்

அன்பர் தமது வாசஸ்தலத்தைப் பாடல் பெற்ற சிவஸ்தலமாகிய வடதிருமுல்லை வாயிலுக்கு அருகில் உள்ள ''பாகோ பார்மில்'' (Bago Farm) ஏற்படுத்திக் கொண்டார். 1945-ல் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு அன்புவழிபாடு தவருமல் நடந்து வந்த விக்ரஹத்தை மயிலையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் எண்ணம் வெகுகாலம் இருந்ததில்லை. ஆனால் தேவியே தனக்கென அமைதியான சூழ்நிலையில் மனோஹரமான ஆலயத்தை அமைத்துக் கொள்ள உளம் கொண்டாள் போலும். 1953-ஆம் ஆண்டு தீபாவளியன்று மயிலாப்பூரில் இல்லத்திலிருந்து தேவியை எடுத்துவந்து ''பாகோ பார்மில்'' ஒரு சிறு குடிலைக்கட்டி அதில் பிரதிஷ்டை செய்தார். அன்று வள்ளிமலைத் திருப்புகழ்ச் சச்சிதாநந்த சுவாமி சபையாரால் திருப்புகழ்வேத பாராயணம் நடைபெற்றது.

சென்னையிலிருந்து 12 மைல் மேற்கில் அம்பத்தூருக்கும் ஆவடிக்கும் மத்தியில் அமைந்துள்ள இம் மஹாசிவக்ஷேத்திரம் பண்டைக் காலத்தில் தொண்டைமான் என்னும் அரசன் ஆட்சிக்குட்பட்டிருந்

ஐது. ஆலயங்கள் பல நிறுவி ஈடுஇணையிலாத பரமசிவபக்தனை இவ் வேந்தன் ஒரு சமயம் கடம்பர் குறும்பர் என்பவர்களோடு போர் செய்து, தோற்றுத் தன் யானை மீதேறிக்கொண்டு உயிர்தப்ப ஓடி வரும்பொழுது, யானையின் கால்களை 'முல்லைக்கொடிகள் சுற்றிக் கொண்டு மேலே செல்ல வொட்டாமல் தடைப்படுத்தின. அரசன் அக்கொடிகளைத் தனது வாளினால் வெட்டி அகற்றினான். வெட்டிய இடத்தினின்றும் இரத்தம் பெருகியது. அரசன் திடுக்கிட்டுக் கொடிகளைப் புரட்டிப்பார்க்க, அங்கு ஓர் சிவலிங்கத்தையும் அதன் உச்சியில் தனது வாளின் வடுவினையும். அதனின்று குருதிபெருகு வதையும் கண்டு உளம்நொந்து, அதே வாளினால் இவ்வபசாரத் திற்கு ஆளான தன் உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனிக்கையில், சிவபிரான் வெளிப்பட்டு "அஞ்சற்க! உனது வாள் என்னை ஊறு படுத்தாது; நான் 'மாசிலாமணி' என அறிந்துகொள்; உனது பகைவர்களை அழிக்கச் செய்கிறேன்" எனத் திருவாய்மலர்ந்தருளி அபயமளித்து ஆண்டு அருள்புரிந்தார். நந்தி பகவானும் சிவகணங் களுக்குத் தலைமை தாங்கிப் போர்க் கோலம் பூண்டு பகைவர்களை ஒழித்தார். எனவே இத்தலத்து நந்தி ஏனைய தலங்களிலுள்ளவை போல் சிவனை நோக்காமல் எதிர்நோக்கியுள்ளது. தொண்டை மானும் தனது பகைவர்களிடமிருந்து கிடைத்ததும் இன்றும் தெய் விகவெற்றிச் சின்னமாகக் கம்பீரமாக விளங்குவதுமான இருவெள் ளெருக்குத் தூண்களைத் தாபித்து இவ் வாலயத்தை அழகு பொலிய மிக்கவனப்புடன் கட்டி வழிபட்டான், ஆகம விதிப்படி இக்கோயில் யானையின் பின்புறம் போன்றவளைவும் அழகும் கொண்டது. இதனை "கஜப்ருஷ்ட ஆகாரம்" எனவும் கூறுவர். "சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு எல்லையில் இன்பம் அவன் பெற வெளிப்பட்டு அருளிய இறைவனே" எனப்போற்றுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சுந்தரர் தேவாரம், அருணகிரிநாதர் திருப்புகழ் முதலிய பழந் தமிழ் மறைகளில் போற்றப்பெறும் இத்தெய்விகத் தல மகிமையை, இராமலிங்க வள்ளலார், இரட்டையர் முதலிய பல அநுபூதிச் செல்வர்களும் பாடிப் பரவி யுள்ளனர். புராதனக் கல்வெட்டுச் சாசனங்கள் பல இத்தலத்தின் புகழை ஏத்துகின்றன. தேவர் களெல்லாம் தேடி வந்து, சிவபிரான் எங்குற்றார் என்று காணாது கடைசியில் வடதிரு முல்லை வாயிலில் இருக்கக் கண்டதை

"அங்கணா! எங்குற்றாய் என்று தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் அரசே" என்னும் சுந்தரர் தேவார வாக்கு உணர்த்தும். இத்தலத்திலேயே நம் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம் அமைந்தது மேலும் சிறப்பாம்.

## VIII. தேவி வழிபாடு

தேவியின் வழிபாடு வெள்ளிக் கிழமைகளிலும், பௌர்ணமி தினங்களிலும், மற்றும் ஸ்ரீ சேஷாத்ரி, ஸ்ரீ ரமணர், வள்ளிமலை சுவாமிகள், ஸ்ரீ அருணகிரிநாதர் ஆகியோரது ஜயந்தி தினங்களிலும், மற்றும் பல குறிப்பிட்ட தினங்களிலும், அபிஷேகம், சந்தனக் காப்பு, புஷ்பாலங்காரம், லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை லலிதா த்ரிசதீ அர்ச்சனை முதலியவற்றுடன் நடந்து வருகிறது. நவராத்ரி தினங்களில் லக்ஷார்ச்சனையுடன் விசேட வழிபாடு நடந்து வருகிறது.

## IX. தேவியும் பூர நக்ஷத்திரமும்

ஒருநாள், ஆலயத்தில் கொண்டாட வேண்டிய விசேஷ வைபவங்களுக்காக ஒரு நிகழ்ச்சி நிரலை அன்பர் தயாரித்துக் கொண்டிருந்தார். அதில் தேவிக்குகந்த நாளாம் ஆடிப் பூரத்தையும் சேர்த்தார். ஆடிப் பூரத்தின் தனிப் பெருமை என்னவென்று அவருக்கே தெரியாது. ஏதோ சேர்த்து விட்டார்.

சேர்த்த சிலநாள் கழித்து அன்பர் ஒரு கனவு கண்டார். ஆதி சங்கரர் ப்ரசன்னமாகி "ஆடிப் பூரத்தை மட்டும் கொண்டாடினால் போதாது. எல்லாப் பூரத்தையும் கொண்டாட வேண்டும்!" எனக் கூறியருளினார். சங்கர பகவத்பாதாள் இட்ட கட்டளையின் அடிப் படைத் தத்துவம் என்ன என்று அறிய ஆவலுண்டாயிற்று.

அன்பருடனேயே வசித்துக் கொண்டு, வழிபாட்டுக்குப் பேருதவி புரிந்து வரும் ஒரு பக்தர் அடிக்கடி காஞ்சி சென்று காம கோடி ஜகத்குருவைத் தரிசித்து வருவது வழக்கம். பூரநக்ஷத்ரத்தின் தத்துவத்தை ஜகத்குருவிடமிருந்து தெரிந்து வரும்படி அன்பர் அவரை வேண்டிக் கொண்டார். தனது கனவைப் பற்றி அவரிடம் சொல்லவில்லை. பக்தரும் 26-3-1957-ல் ஜகத்குருவைத் தரிசித்துப் பூர நட்சத்திரத்தின் மகிமையை விளக்குமாறு பிரார்த்தித்தார். ஆனால் ஜகத்குருவோ பின்னொரு சமயம் அதைப் பற்றிச் சொல்வதாகப் பதிலளித்தார்.

நான்கு மாதங்கள் கழித்து, அன்பரே நேரில் காஞ்சி சென்று ஜகத் குருவைத் தரிசனம் செய்தார். நமஸ்கரித்தவுடன் அன்பர் ஏதும் கேட்பதற்கு முன்னரே கருத்தறிந்து முடிப்பான் இறைவன் போல் "ஆடிப் பூரம் ஆண்டாள் பிறந்த நன்னுள். அரிய சக்தி பிறந்த தினம் எல்லா ஹிந்துக்களுக்குமே புநித தினமன்றோ! சைவ, வைஷ்ணவ பேதமில்லாத ஆதி காலத்தில் அந்த அரிய சக்தி பிறந்த ஆடிப் பூரத்தைச் சிவன் கோயில்களிலும், விஷ்ணு கோயில் களிலும் கொண்டாடினுர்கள். அந்த ஆதிகால வழக்கம் இன்னும் தொடர்ந்து வருகிறது" என்று அருள்வாக்காக மொழிந்தார்.

ஜகத் குருவின் திருவருளால் ஆடிப் பூரத்தின் விசேஷம் அன்பருக்கு விளங்கியது. ஆனுல் மற்ற பூரங்களின் முக்யத்வம் பின்னும் விளங்கவில்லே. ஜகத் குரு தரிசனம் முடிந்ததும் நேரே காமாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றுர். அர்த்த ஜாம தீபாராதனே நடந்து கொண்டிருந்தது. ஹாரத்தி பிரசாதம் கொடுக் கும் பொழுது குருக்கள் தாமாகவே அன்பரிடம் "காமாட்சி தேவி ஐப்பசி மீ பூர நக்ஷத்ரத்தன்று பிலத்வாரததிலிருந்து வெளி வந்தாள். அத்தினம் கோயிலில் விசேஷமாகக் கொண்டாடப்படு கின்றது" என்று தெரிவிததார்.

அன்பர் பரவசமானுர். காம கோடி பீடத்தலேவி அன்னே காமாட்சியே கருணே கூர்ந்து குருக்கள் மூலம் தனது ஐயத்தை நீக்க அருளிய வாக்கு என நினேந்து உருகி, ஐப்பசிப் பூரத்தன்று காமாட்சி தேவியைத் தரிசனம் செய்வதாகத் தீர்மானித்தார். சென்னே வந்தபின், அன்பரும் உடன் வசித்தவரும் பக்தரும் பஞ்சாங்கப்படி 1957 வு அக்டோபர் மீ 20வ ஞாயிற்றுக்கிழமை ஐப்பசிப் பூரம் என்று கண்டு அந்நாளே வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர்.

வேறொரு நண்பர் தன் காரில் இருவரையும் அழைத்துப் போவ தாகவும், முதல்நாள் சனிக்கிழமை மாலே போய் மற்ற கோயில்களேத் தரிசித்து, மறுநாள் பூர அபிஷேக தரிசனம் செய்துவிட்டு வருவ தாகவும் ஏற்பாடு செய்தனர். சனிக்கிழமை காலேமுதல் பக்தருக்கு இருப்புக் கொள்ளவில்லே. ஒருக்கால் இன்றைக்கே பூர அபிஷேகம்

நடந்து விடுமோ என்று சந்தேகம் உதித்தது ; நண்பரது மோட்டார் காரை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

19-10-1957 சனிக்கிழமை மாலை குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி தாமதமாகவே கார் வந்தது. உடனே எல்லோரும் புறப்பட்டனர். காஞ்சியை நோக்கிக் கார் விரைந்தது. வழியில் எங்கும் சிற்றுண்டிக்குக்கூடத் தங்கவில்லை. நேரே காமாட்சி கோயிலை அடைந்தனர். பூர அபிஷேகம் ஆரம்பித்து விட்டதாகவும் அறிந்தனர். ஆடையைக்கூட மாற்றுமலும் கையில் பழம், புஷ்பம் ஒன்றுமில்லாமலும் சந்நிதிக்கு ஓடினார்கள். கங்கா தீர்த்தம் மட்டும்தான் உடன் வைத்திருந்தனர். சந்நிதியை அடைந்து அபிஷேகம் நடந்து கொண்டிருந்ததைக் கண்குளிரக் கண்டனர். ஆனந்தித்தனர். என்னே அன்னையின் கருணை !

ஐப்பசி பூரம் 20-10-57 ஞாயிற்றுக்கிழமை என்று அவர்கள் ஒரு பஞ்சாங்கப்படிச் செய்த தப்புத் தீர்மானத்தைத் திருத்தி முதல் நாளாம் சனிக்கிழமை அன்றே அபிஷேகத்திற்கு அழைத்துக் கொண்டாளே அன்னை.

அன்னையின் அளவிடா அன்பு ஆனந்தத்தை அளித்தது. ஆனால் பூர நக்ஷத்திரத்தின் முழுவிவரம் விளங்கியபாடில்லை. அன்னையின் அருட்ப்ரவாகம் அடுத்த வாரமே அவ்விவரத்தையும் தெளிவுறவைத்தது.

தணிகேசன் பக்தரும், தமிழ்ப்புலவருமான ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் வைஷ்ணவி கோயிலுக்கு வந்தார். பக்தர் அவரிடம் நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னார். உடனே பிள்ளை அவர்கள் கந்தரந்தாதியில் ஒரு பாட்டைச் சொல்லி அதில் அருணகிரிநாதர் "பார்வதியின் நக்ஷத்திரம் பூரம்" என்பதாகச் சொல்லியிருப்பதைக் காட்டினார். அப்பாடல் வருமாறு :—

திரி*புரத் தப்புப் புவிதரத் தோன்றிச் சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைப்பட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்புநெஞ்சே.

—(கந்தரந்தாதி-78.)

---

* புரத்து=பூரநாளில், அப்புப்புவி=கடல் சூழ்ந்த உலகை தர= பெற்றருள, தோன்றி=அவதரித்த உமாதேவி.

பிள்ளையவர்கள் திருப்புகழ்நூலை முற்றும் ஆராய்ந்தவர். வள்ளிமலை ஸ்வாமிகளிடம் உள்ளன்பு பூண்டவர். ஸ்வாமிகள் ஸ்தாபனம் செய்த ஸ்ரீ வைஷ்ணவி தேவியின் சந்நிதியிலேயே சுவாமிகளது பெருமதிப்புக்குகந்த பிள்ளையவர்களது வாக்குமூலமாக இத்தத்துவ விளக்கம் கிடைத்ததும் மிகவும் பொருந்தியதே. எல்லாம் தேவியின் திருவிளையாடல்!

இது முதல் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தில் ஒவ்வொரு பூர நக்ஷத்திரத்தன்றும் விசேஷ அபிஷேக பூஜைகள் நடந்து வருகின்றன.

சில நாட்கள் சென்றபின் திருப்புகழ் அடியார் ஒருவர் திருச்சூரில் தேவிகோயிலில் பூர நக்ஷத்திரத்தில் பிரஸித்த உத்ஸவம் நடைபெற்று வருவதாக அன்பரிடம் தெரிவித்தார். கல்வி கேள்விகளில் சிறந்த சில பெரியோர் தேவி மீனாக்ஷியின் நக்ஷத்திரமும் சரஸ்வதியின் நக்ஷத்திரமும் பூரம் என்றும் தெரிவித்தார்கள். இவ்வாறு தேவியே தனது வழிபாட்டை வகுத்துக்கொள்கிருள் என்பதும் வெளிப்படை.

## X. தேவியின் திருவிளையாடல்

ஏப்ரல், 1958-ல் கோயில் திருப்பணி நடந்துகொண்டிருந்த சமயம் திருப்புகழடியார் ஒருவர் பாகோபாரத்தில் இரவு தங்கினுர். அப்பொழுது அவர் ஒரு கனவு கண்டார். வடக்கேயுள்ள கோயிலுக்குப் போய்க் கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. கோயிலுக்கு வாசற்படியில் ஒருவர், அவர் மனைவியுடன் வெள்ளை வஸ்திரம் தரித்துக்கொண்டு, யார் யார் தமக்கு நமஸ்காரம் செய்கிருர்களோ அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்கிருர். கனவு கண்டவரும் அவரை நமஸ்கரித்து எழுந்திருப்பதற்குள் "கண்ணுடி, முன்ணுடி உள்நாடி, நோக்கிடு" என்று அவர்கள் சொன்னுர்கள். உடனே விழிப்பு வந்து விட்டது. மறுநாள் சென்னையில் தன் இல்லத்தில் உறங்கும்பொழுதும் அதே வார்த்தைகள் கேட்டன.

இந்த விஷயத்தை ஸ்ரீ. வ.சு. செ. அவர்களிடம் உரைத்து, அதன் பொருளை வினவ, அவர்

"எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணு ரமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணுடி உள்ளே ஒளிபெற நோக்கினுற்
கண்ணுடி போலக் கலந்துநின் ருனே" என்னும் திருமூலர் திருமந்திரச் செய்யுளை எடுத்துக் காட்டினுர். அடியாரும் அதைக் கேட்டு ஆனந்தித்துத் தேவியின் எதிரில் கண்ணுடி ஒன்றை வாங்கி வைத்தார். திருமந்திரப் பாட்டும் அதன்கீழ் எழுதப்பட்டது.

## XI. ஆலயம் அமைத்தல்

1953-ம் ஆண்டில் பாகோ பாரத்தில் அன்னை வைஷ்ணவி வீற்றிருந்தது ஒரு குடிலில் தான். அப்பொழுது தனிக் கோயில் அல்லது மண்டபம் ஒன்றும் இல்லை. அவற்றைக் கட்டும் எண்ணமோ அல்லது அதற்கான முயற்சியோ இருந்ததில்லை. முனிவர்கள் தவம்புரியும் பர்ணசாலையைப் போல் எளிமையுடன் அக்குடில் காட்சி யளித்துவந்தது. மரச் சட்டங்களால் பின்னப் பட்ட வலைகளே (wooden lattice work) சுற்றுப் புறங்களில் அடைப்பு. பிறகு, தேவியே தனது ஆலயத்தை ஈடு இணையில்லாத பொலிவுடன் சிறப்பாக அமைத்துக் கொள்ள உளங் கொண்டாள் போலும். சற்றும் எதிர்பாராத வகையில் செட்டி நாட்டில், ஆலயங்களுக்கே உதவும் படியானதும், சிறந்த சித்திர வேலைப்பாடுடன் கூடியதும், சுமார் 10 அடி உயரம் உள்ளதுமான வேங்கை மரத்தால் செய்யப் பட்ட வாசற்கால் ஒன்று விற்பனைக்கு வந்தது. அன்பர் அதை 1954-ஆம் வருஷம் வாங்கியிருந்தார். பிறகுதான் மண்டபம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. வாசற்கால் மிகப் பெரிய அளவில் இருந்ததால் கூடமும் அதற்கேற்ற பெரிய அளவிலேயே அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மண்டபம் நிறுவும் பணி 6-12-1956-இல் துவக்கப்பட்டது. 1-3-1957-இல் மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது; பின்பு கோயிலைக் கட்டும் வேலை பிப்ரவரி-58-இல் துவக்கப்பட்டது. கோயிலை அமைத்துக் கொண்ட தேவி மேலும் மேலும் பெருகி வ்யாபிக்க உளங் கொண்டனள்.

இக்கோயிலில் குடிகொள்ள விநாயகர், முருகர், மகேச்வரி, நாராயணி, ப்ராஹ்மி ஆகிய 5 கற்சிலைகள் கைதேர்ந்த சிற்பியைக் கொண்டு செய்யப்பட்டன. தேவியின் சந்நிதானத்திற்கு மேல் மூன்று கலசங்களோடு அழகிய விமானம் ஒன்றும் அமைக்கப்பட்டது. 1958-ஆம் ஆண்டு மேமீ (26 to 30-5-58) விசாலமான யாகசாலை ஒன்று கட்டப்பட்டு தேவீபூஜா கல்பவிதிப்படி ஸௌகந்தி ஹோமம் முதலிய யாகங்கள் அல்லும் பகலும் விரிவாக நடந்தன. இறுதியில் புதிய கலசங்களுக்கும் விக்ரஹங்களுக்கும் வெகு விமரிசையாக 30-5-58-இல் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. மண்டலாபிஷேகமும் 20-7-58-இல் நடைபெற்றது.

ஒவ்வொரு தலபுராணத்திலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பையும் கூறல் மரபு. இதுவரை, மூர்த்தி, தலம் என்ற இரண்டின் சிறப்புக்களையும் பார்த்தோம். தீர்த்தம் வேண்டுமல்லவா! தேவி தனக்கென ஒரு தீர்த்தத்தை ஏற்படுத்திக் கொண்டனள். தேவி, அன்பரிடம் தன் சந்நிதிக்கு அருகில் தென்கிழக்கில் குறிப்பிட்ட ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி அங்கு கிணறு ஒன்று தோண்டுமாறும், அதற்குக் கங்கா தீர்த்தம் எனப் பெயர் வைக்குமாறும் கட்டளையிட்டனள். என்னே! தேவியின் கருணை! அவ்வாறே தோண்ட, வற்ருத ஊற்று சுரந்தது. தண்ணீர் கண்ட அக்கணமே அன்பர் அதில் கங்கை நீரைச் சொரிந்து அம்மையின் கட்டளையை நிறைவேற்றினர். கங்கா தீர்த்தமும் அழகாக அமைந்தது. தீர்த்தத்தின் சுற்றுப்புறத்துக் கீழண்டைச் சுவரில் பஞ்ச லோகத்தால் செய்யப்பட்ட (முதலைமேல் வீற்றிருக்கும்) கங்கா தேவி விக்ரஹமும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

சற்றும் எதிர்பாராத வகையில் முன்பு யாகசாலை இருந்த இடத்தில் மடைப்பள்ளி ஒன்று கட்டி முடிக்கப்பட்டது.

## XII. ஸ்படிக விநாயகர்

அன்பர் மயிலையில் வசித்துவந்தபோதே, தேவியுடன் ஒரு விநாயகர் விக்ரஹத்தையும் வைத்துப் பூஜை செய்வது நல்லது என்று வள்ளிமலை ஸ்வாமிகள் அன்பரிடம் தெரிவித்திருந்தார். ஆனால், வெகு நாட்கள் வரை அன்பர் அதைச் செய்யவில்லை.

பிறகு ஒரு நாள் தன்னை ஒரு வெகு சிறிய விநாயகர் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தேவியை மும்முறை வலம் வந்த தாகக் கனவு கண்டார். மறுதினமே ஒருவர் ஸ்படிக விநாயக விக்ரஹம் ஒன்றை விற்பனைக்குக் கொண்டு வந்தார். ஸ்வாமிகள் சொன்னதையும், தனது கனவையும் நினைந்து அன்பர் உடனே அந்த விக்ரஹத்தை வாங்கி வெள்ளிக்கிழமைகள் தோறும் தேவி யின் அருகில் அந்த விநாயகரை அமர்த்தி அவர்க்கும் அபிஷேகம் பூஜை முதலிய செய்துவந்தார். தேவி, திருமுல்லைவாயில் வந்த பிறகு விநாயகருக்குத் தனி விமானம் ஒன்று செய்யப்பட்டது. இன்றும் அந்த ஸ்படிக விநாயகருக்கு விசேஷ தினங்களில் தேவி யுடன் அபிஷேக ஆராதனைகள் நடந்து வருகின்றன.

## XIII. மீனாக்ஷி

சென்னையில் ஒரு வியாபாரி தள்ளுபடியான உபயோகமற்ற செப்பு, பித்தளைச் சாமான்களைச் சேகரித்து ஏற்றுமதி செய்து வந்தார். அவர் சரக்குகளை அன்பர் பணியாற்றி வந்த கம்பெனியில் இன்ஷ்யூர் செய்து வந்தார். அத் தள்ளுபடி சாமான்களில் ஏதாவது சிறந்த விக்ரஹங்கள் இருந்தால் அவற்றை வாங்கிக் கொள்ளலா மெனக் கருதி, தனது உதவியாளரை வியாபாரியிடம் 1943 ஆ இறுதியில் அனுப்பினார். உதவியாளரும் பஞ்ச லோகத்தில் செய்த அதி ரமணீயமான ஒரு சிறிய தேவி விக்ரஹத்தை வாங்கி வந்தார். விக்ரஹத்தைப் பார்த்ததுமே அன்பருக்கு அதன்மேல் அன்பு உண் டாயிற்று. தனது அறையில் ஒரு விமானம் செய்வித்து அதில் அந்த விக்ரஹத்தை வைத்துத் தின்ந்தோறும் காலையில் புஷ்பாஞ்சலி செய்து வந்தார். பிரயாணம் செய்யும் பொழுதும் விக்ரஹத்தை உடன் எடுத்துச் சென்று தினம் பூஜை செய்து வந்தார். அப்போ தெல்லாம் விடுமுறைக் காலங்களில் அன்பர் பாகோ பாரம் வந்திருப்பது வழக்கம். வரும்பொழுது விக்ரஹத்தைக் கொண்டு வருவார். திரும்பிச் சென்னை செல்லும்போது கொண்டுபோவார். பிறகு அன்பருடைய நண்பர் ஒருவர் நிரந்தரமாக பாகோ பாரத்தில் இருக்க லானார். ஒரு சமயம் விடுமுறையின்போது தன்னுடன் கொண்டு வந்த விக்ரஹத்தைப் பாகோ பாரத்திலேயே வைத்துத் தான் இல்லாத சமயம் தன் நண்பர் பூஜை செய்யும்படி ஏற்பாடு செய்தார்.

ஓர் அறையில் விமானத்துடன் தேவியும், ஒரு பக்கம் ஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமிகள் உருவப்படமும், மற்றொருபுறம் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் உருவப் படமும் வைக்கப்பட்டன. அன்பர் ஒருநாள் காலை பூஜை துவக்கும் சமயம் 'மீனாக்ஷி ஸ்தோத்திரம் படி' என்று தேவி கட்டளையிட்டதாக உணர்ந்தார். அன்றுமுதல் தேவியின் முன் மீனாக்ஷி ஸ்தோத்திரம் படிப்பது வழக்கமாயிற்று. பிறகு சௌந்தர்யலஹரி புத்தகம் ஒன்றில் மீனாக்ஷி அஷ்டோத்ரத்தைக் கண்டதும் வெள்ளிக் கிழமைகளில் இந்தத் தேவிக்கு மீனாக்ஷி அஷ்டோத்ர அர்ச்சனை செய்யும் வழக்கமும் ஏற்பட்டது! இந்தத் தேவி உத்ஸவவிக்ரகம் போல விளங்கி வருகின்றனள்.

## XIV. மங்களம்

மேற்கூறிய விவரங்களிலிருந்து இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் தேவியின் திருவோலக்கப் பெருமை நன்கு விளங்கும். மேலும் இத்தேவியின் சக்தி வேகம் இந்நூலில் வெளிவந்துள்ள அலங்காரம், அநுபூதி ஆதிய நூல்களைத் தவிர, *எண்ணெழுத்து மாலை என்னும் புதுவகை அருட்கவி நூலையும், அந்தாதி, இரட்டை மணிமாலை, எம்பாவை, பள்ளியெழுச்சி, பதிகங்கள், பிள்ளைத்தமிழ், பல்லாண்டு, ஆதிய பல திறத்துநூல்களையும், நான்காரைச் சக்கரம், (சக்ரபந்தம்) இரட்டை நாகபந்தம் (ரதபந்த) திரு எழுகூற்றிருக்கை ஆகிய சித்திரகவிகளையும் அன்பர்கள் வாயிலாக வெளிவரச் செய்துள்ளது.

"நித்யோத்ஸவே பவேத்யேஷாம், நித்யஸ்ரீ நித்ய மங்களம்" என்றபடி நித்யோத்ஸவத்துடன் பொலிகிருள் தேவி. அவளுடைய பாதார விந்தங்களில் கருத்தைப் புகட்டி இகபர சௌபாக்யங்களை நாம் அடைவோமாக.

வைஷ்ணவி ஆலய வரலாறு முற்றும்

**लोकाः समस्ता स्सुखिनो भवन्तु**

சுபம்

வைஷ்ணவி ஆலயம்<br>திருமுல்லை வாயில்<br>(Via) ஆவடி } சன்மார்க்க சங்கம்

---

*இவை விளக்கப் படங்களுடன் அச்சில் உள்ளன. இரண்டாம் தொகுதியாக விரைவில் வெளிவரும்.



# தேவி அநுபூதி

ராவ்பகதூர் தணிகைமணி, வ. சு. செங்கல்வராயபிள்ளை M.A.,
இயற்றியது

## காப்பு

மும்மைப் புவனங் களைமுன் புதவும்
அம்மைப் புகழ்சொல் அநுபூதி சொலச்
செம்மைக் கதையைச் சிலைமீ தெழுதும்
எம்மத் திமுகத் திறையென் துணையே.

(உரை) மூன்று உலகங்களையும் முன்பு ஈன்றவளாகிய தேவியின் திருப்புகழைக் கூறும் இந்த அநுபூதி நூலைப் பாடுதற்குப் பாரதக் கதையை மேரு மலையில் எழுதிய எமது யானைமுகக் கடவுள் எமக்குத் துணை புரிவார்.

(குறிப்பு) மும்மை-மூன்று; செம்மைக் கதை-பாரதம்; சிலை-மேருமலை; எம் அத்தி முகத்து இறை - யானை முகப்பிரான் - கணபதி.

# நூல்

## 1. பாடும் பணியைப் பெற

ஆடும் மயில்நேர் அழகார் உமையே!
தேடும் பொருளைத் தெளிவிப் பவளே!
சூடும் மலர்சேர் சுடர்ப்பா தமதைப்
பாடும் பணியே பணியா அருள்வாய்.

(உ) ஆடுகின்ற மயிலுக்கு ஒப்பான அழகு வாய்ந்த உமாதேவியே! பொருள் விளங்காது மயங்கித் தேடும்பொழுது அம் மயக்கத்தைத் தீர்த்துத் தெளிவைத் தருகின்றவளே! அடியார்கள் சூட்டிய மலர்கள் உள்ள உனது ஒளிவீசும் திருவடியைப் பாடுகின்ற பணியையே எனக்குப் பணியாக அருள் புரிவாயாக!

(கு) ஈற்றடி கந்தரநுபூதி பாடல் (1-ஐத் தழுவுகின்றது.

## 2. கதிபெற

பொல்லா வினையேன் புகலேது மிலேன்
இல்லா சையெனும் இழிவென் னிடமே
கல்லா யுளதே கதியே துரையாய்
உல்லாச உளம் கொளும்உத் தமியே.

(உ) உல்லாசமான உள்ளத்தைக் கொண்ட உத்தமியே! நான் பொல்லேன், கதியற்றவன், சம்சார பந்த ஆசை என்கின்ற இழிவான, ஒரு பாரமான கல் என்னை அழுத்துகின்றது. எனக்கு நற்கதி கிடைக்குமா? சொல்லி அருளுக.

(கு) இல் ஆசை - சம்சார பந்த ஆசை.

## 3. சுகம் பெற

சகமாயை யிலாத தபோதனர்கள்
நகவே நடை கொண்டிடு நாயடியேன்
சுகமாநிலை கூடிடவே துணைசெய்
மகமாயை களைந்தருள் வைணவியே.

(உ) மகாமாயைகளை நீக்கி அருளும் வைணவித் தாயே! உலக மாயையிற் சிக்கு உண்ணுத தவசிகள் (பழித்துச்) சிரிக்கும் (தீய) ஒழுக்க நடையைக்கொண்ட அடியேன் பேரின்ப நிலையை அடையும்படி துணை புரிந்தருளுக.

(கு) நகவே - சிரிக்கவே; இழிவைக் காட்டும் சிரிப்பு. ஈற்றடி கந்தரநுபூதி (5)-ஐத் தழுவும்.

## 4. பூசிக்க

திரு முல்லை யில்வாழ் சிவையே! பரையே!
இரு முல்லை வனத்தினும் நீ உறைவாய்
ஒரு முல்லை உன் பொன்னடி யிட்டுணரேன்
மரு முல்லை மணங்கமழ் வைணவியே.

(உ) திருமுல்லை வனத்துத் தேவியே! மண முள்ள முல்லையின் நறுமணம் வீசும் வைணவித் தேவியே! வடதிரு முல்லைவாயில், தென்திருமுல்லை வாயில் என்னும் இரண்டு முல்லை வனங்களிலும் நீ வீற்றிருக்கின்ருய்; ஒரு முல்லை மலரைக்கூட நான் உன் திருவடியில் இட்டு அறியேன்.

(கு) வடதிருமுல்லைவாயில் - சென்னைக்கு அருகில் உள்ளது; சுந்தரரின் தேவாரத்தைப் பெற்றது. இங்கு, சுவாமி - மாசிலாமணீசுரர், தேவி - கொடியிடைநாயகி; தென்திருமுல்லைவாயில் - சீகாழிக்கு அருகில் உள்ளது;

சம்பந்தரின் தேவாரத்தைப் பெற்றது ; இங்கு சுவாமி - முல்லைவனநாதர் ; தேவி - கோதையம்மை.

## 5. வினை ஒழிய

வெயிலே நிகர் வெவ்வினை வீட்டியருள்
குயிலே நிகர் மென்மொழி கொண்டவளே !
மயிலே நிகர் சாயல் வகிப்பவளே !
அயிலே நிகர் கண்ணது கொண்டவளே !

(உ) குயில் போன்ற மொழியையும், மயில் போன்ற சாயலையும்; அயில் (வேல்) போன்ற கண்களையும் கொண்ட தேவியே! வெயில் போல என்னைச் சுடுகின்ற கொடிய வினையை ஒழித்து அருளுக.

(கு) வினைத்துயர் வெயில்போலச் சுடும்; 'வெப்பொடு விரவியோர் வினைவரினும்' என்றார் சம்பந்தர் [3-4-7]; 'சுழலார் துயர்வெயிற் சுட்டிடும்போது' என்றார் அப்பர் [4-92-19].

## 6. வினை ஒழிய

அயிலா எனுநல் லடியார்க் கருளும்
மயிலா எனவுன் மகனைத் தொழுவேன்
சயிலாங் கனையே தமியற் சுடுமவ்
வெயிலாம் வினைவீ டுறவேண் டுவனே.

(உ) 'வேலா!' என்று உரைக்கும் நல்ல அடியார்களுக்கு அருள்புரிகின்ற மயிலா ! என்று உன் குமாரன் முருகனைத் தொழுவேன் ; மலைமகளே ! அடியேனைச் சுடுகின்ற வினை என்கின்ற வெயில் அழிவுறுவதற்கு நான் உன்னை வேண்டிக் கொள்வேன்.

(கு) சயிலாங்கனை - சயிலம் - மலை ; அங்கனை - பெண்.

## 7. கருணை புரிய

சுருதிக்கும் ஒளிக்கும் நிலைச் சுடர்நீ
கருதிக் கருணைக் குறிகாட் டுவையேல்
பருதிக் கெதிராம் பனிநீ ரெனஇவ்
வொருதிக் குமிலான் வினை ஓடிடுமே.

(உ) வேதங்களுக்கும் எட்டாது ஒளிக்கும் நிலையான ஜோதி நீ; என்னை ஒரு பொருளாகக் கருதி, நீ உன் கருணைக் குறியை என்மீது வைத்து அருள் புரிந்தால், சூரியனை எதிரிற் கண்ட பனிபோல இந்தத் திக்கற்றவனாகிய எனது வினை மறைந்து ஓடிவிடும்.

(கு) சுருதி-வேதம்; பருதி-சூரியன்.

## 8. எங்ஙனம் கன்னி நீ

அண்டங்கள் அனைத்தையும் பெற்றவள் நீ
எண்டங்குநற் கன்னியென் றெங்ஙனமோ
விண்டங்குநர் போற்ற விளங்குகிறாய்
மண்டங்குநர் வாழ்த்தி மதித்திடவே.

(உ) எல்லா அண்டங்களையும் பெற்றவளாகிய உன்னை மதிக்கத்தக்க நல்ல கன்னிப் பெண் என்று எக்காரணங் கொண்டோ தேவர்கள் போற்றுகின்றார்கள்; மானிடர் உன்னை மதித்து வாழ்த்திடுகின்றார்கள். (காரணம் தெரியவில்லையே என்றபடி).

(கு) எண் - மதிப்பு; விண்தங்குநர் - தேவர்கள்; மண்தங்குநர் - மனிதர்கள்.

" உலகுயிர் எல்லாம் ஈன்றும் பவன்பிரம சாரியாகும்,
பால்மொழி கன்னியாகும், தவந்தரு ஞானத்
தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே."

—சிவஞான சித்தியார் - பக்கம் 167.

"பெற்ருள் சக தண்டங்க ளனைத்தும் அவை
பெற்றும்
முற்ருமுகிழ் முலையாள்"
—வில்லிபாரதம் - அருச்சுனன் தீர்த்த யாத்திரை—15.

## 9. சந்நிதியின் பெருமை

போகோ மெனமல் புரிகின் றவினை
பாகோ குடிசைப் பரைசந் நிதிமுன்
கூகோ எனக் கூவி அகன்றது காண்
ஒகோ இஃ தென்ன ஒர் அற்புதமே.

(உ) போகமாட்டேன் என்று பிடிவாதம் செய்து மல் யுத்தம் புரிகின்ற வினை இந்தப் பாகோ பார்ம் (**Bago Farm**) என்கின்ற குடிசைக் கோயிலில் வீற்றிருக்கின்ற வைணவி தேவியின் சந்நிதியைக் கண்டதும் 'கூகோ' என்று கூச்சலிட்டு (அச்சத்துடன்) ஓடிப் போய்விட்டது! ஓஹோ! இது என்ன! ஒரு அற்புத நிகழ்ச்சியாய் இருக்கின்றதே!

(கு) 'பாகோ குடிசை' - **Bago Farm** - திருமுல்லை வாயில் திருக்கோயிலுக்கு அருகில் உள்ளது. இங்குள்ள திருக்கோயிலில் வைணவி தேவியின் சந்நிதி உள்ளது.

## 10. கைவிடேல்

தாயே! உன தெய்விக சந்நிதிமுன்
பேயேன் வர அஞ்சுவனே பெரிதும்
ஆயே! எனை அக்குறை காரணமா
நீயே விடில் அச்செயல் நீதியதோ.

(உ) தாயே! உனது தெய்விகச் சந்நிதிமுன் பேயேனுகிய நான் வரப் பெரிதும் அஞ்சுகின்றேன்;

அந்த எனது குறை ஒரு காரணமாகக் கொண்டு நீ என்னைக் கைவிட்டால் அது நீதியாகுமா?

(கு) ஆயே - தாயே.

## 11. உபதேசம் பெற

பீதித் தொழிலே செயும்பெற் றியன்யான்
நீதித் தொழில் யாதும் நிகழ்த்தலிலேன்
போதித் திடுவேன் எனநீ புகிலார்
வாதித் திடுவார் மலைமா துமையே!

(உ) தேவி! அச்சம் தரக்கூடிய (தீச்) செயலையே செய்யும் குணத்தினன் நான்; நீதியான செயல் ஒன்று கூடச்செய்கின்றேன் இல்லை. (இதைக்கண்டு) இவனுக்கு உபதேசித்து இவனை நல்வழிப்படுத்துவேன் என நீ எண்ணிச் செய்யப்புகுந்தால் உன்னோடு (அங்ஙனம் செய்தல் தவறு என்று) வாதிப்பார் யாரேனும் உண்டோ? (இலர் என்றபடி).

(கு) பீதி - அச்சம்; போதித்தல் - உபதேசித்தல்; நீ புகில் ஆர் (யார்) வாதித்திடுவார்; புகில் - புகுந்தால்; யாரும் வாதிக்கமாட்டார் என்றபடி.

## 12. "மீனாட்சி சரண்" என

ஊனாட்சி செயும் ஒருபால்; ஒருபால்
நானாட்சி செயும் அதனால் நலிவேன்
மீனாட்சி சரண் என வேண் டிடிலோ
வானாட்சி பெறத் தருவாள் அவளே.

(உ) 'தேகம்' என்னை ஆள்கின்றது; ஆதலால் தேகத்தின்மீது ஒரு பக்கம் எனக்கு ஆசை; "நான்" என்பது என்னை ஆள்கின்றது; ஆதலால் என்மீது ஒரு

பக்கம் எனக்கு ஆசை; இந்த இரண்டு ஆட்சியால் நான் மெலிந்து துயர் உறுகின்றேன். "மீனாட்சித் தாயே! நீயே சரண்" என்று நான் தேவியை வேண்டினால் தேவி எனக்கு விண்ணுலக ஆட்சிசெய்யும் பேற்றை(யும்) தருவாள்.

(கு) 'நான் ஆட்சி - 'யான் - எனது' என்னும் ஆணவ (அகங்கார - மமகார) ஆட்சி.

## 13. காளமேகனை ஆண்டது

மதுதந்த மலர்க்குழ லாய்! மறைசேர்
பதுமந் திகழ்வாய் உனதம் பலமாம்
அதுதந் தொருவற் கருள்செய் தனை நீ
எதுதந் தெனைநீ இனிதா ளுவையோ.

(உ) தேவீ! வேத தாமரையில் வீற்றிருப்பவளே! உனது எச்சில் தாம்பூலத்தைத் தந்து ஒருவனுக்கு (காளமேகனுக்கு) அருள்புரிந்தாய்! எனக்கு எதைத் தந்து அருள்புரிவாய்; கூறி அருளுக.

(கு) மது - தேன், மறைசேர்பதுமம் - வேத தாமரை. "எழுதாமறையின் ஒன்றும் அரும்பொருளே!" - அபிராமி அந்தாதி, 10. தம்பலம் - தாம்பூல எச்சில். ஒருவன்-காளமேகன். காளமேகப் புலவர் திருஆனைக்கா கோயில் மண்டபத்தில் உறங்குகையில் தேவி அகிலாண்டேசுரி தேவதாசியின் உருவில் அவர் முன் தோன்றி அவரை 'வாயைத் திற' என்றாள்: அவர் வாயைத் திறக்கத் தேவி தன் தாம்பூல எச்சிலை அவர் வாயில் உமிழ்ந்து மறைந்தனள். அது முதல் அவர் ஆசுகவி பாடும் மகாகவி யாயினர். தேவி அலங்காரம்-பாடல்-65 பார்க்க.

## 14. மனம் ஒளிபெற, நிலைபெற

சுருள்சேர் குழலாய்! உனையே தொழுவேன்
இருள்சேர் எனதுள் ளொளி ஏற் றிலக,
உருள்சேர் மனமோர் நிலைபெற் றிலக,
அருள்சேர் மொழியொன் றருளாய் அருளாய்.

(உ) சுரிகுழல் கொண்ட தேவியே! உன்னைத் தொழுகின்றேன்; அஞ்ஞானம் கொண்ட என் உள்ளம் ஞான ஒளி பெறவும், நிலையிலாது திரியும் என் மனம் நிலை பெறவும், நீ உனது அருள் மொழி ஒன்றை அருளுக, அருளுக.

(கு) மனம் நிலையற்றது; "ஒருகால் திரிகையில் ஆயிரக் கோடி சுற்றோடும் திருத்து உளமே"—கந்தரந்தாதி, 34. "குலாலன் திகிரி வருமொரு செலவினில் எழுபது செலவு வருமன பவுரி கொ டலமரு திருகன்."—திருப்புகழ், 1009.

## 15. அருள் பெற

காட்சிக் கெளியாய்! கருணைக்கடல்! கா
மாட்சிப் பெயராய்! உணவுண் வகையில்
சாட்சிக்கு மிடம் தரநான் இசையேன்
ஆட்சிக் குரியாய்! எனை ஆளுவையோ!

(உ) அன்பர்கள் காணுதற்கு எளியவளே! கருணைக் கடலே! காமாட்சீ! நான் உண்ணும்போது சாட்சியாய்க் கூட ஒருவரை உடன் வைத்துக்கொண்டு உண்ணேன் (அத்தனை லோபி நான்). உயிர்களை ஆண்டருளுதற்கு உரியவளே! நீ தான் என்னை ஆண்டருள வேண்டும்.

(கு) "வேறொரு சாட்சியறப் பசியாறியை" திருப்புகழ் 291. காமாட்சி - கா - சரஸ்வதி; மா-லட்சுமி; அட்சி - கண். சரசுவதியையும் லட்சுமியையும் தனது கண்களாகக் கொண்டவள் தேவி.

"தாமரைத் தவிசின் மாதும்..வாணியும் தன்
கண்ணென உடைய...உமை மாது என்தாய்"
—வீரசிங்காதன புராணம்.

பின்னும், ககர அகர மகர சொரூபிகளாகிய பிரம விஷ்ணு உருத்திர மூர்த்திகளைத் தனது கண்ணினின்றும் தோற்றுவித்தமையாற் 'காமாட்சி' என்பர்.

"பண்டு சிவ னிடத்துதித்திவ் வண்டமுழு தையும்
உதவும் பரிவி னாலே
சண்ட துண்டக் கனற்பால விழிக்கால
உருத்திரனைத், தரணி யாவும்
உண்ட கொண்டல் நிறத்தானை, முண்டகனை,
விழிகளினால் உதவும் பான்மை
கண்டதனால் அபிதானம் *காமாட்சி எனும்
உமையைக் கருதி வாழ்வாம்."
—பழைய காஞ்சிப் புராணம்.

## 16. துதி

ஆரூ ரினில் **அல்லியங் கோதை** யெனும்
ஏரூர் பெயர் கொண்ட இளங்கிளியே!
ஊரூர் தொறும் உண்பலிக் கென்றுழலும்
சீரூர் பெரு மான்மகிழ் சிற்பரையே!

(உ) திருவாரூரில் 'அல்லியங்கோதை' என்கின்ற அழகிய பெயருடன் விளங்கும் இளங்கிளியே! ஊர்

---

*காமாட்சி - காஞ்சீபுரத்துத் தேவி பெயர்.

ஊராய் உண்பலிக்கு என்று சென்று திரிகின்ற பெருமான் மகிழும் ஞான சொரூபியே!

(கு) "ஊரூர்...பெய்பலி கொள்ளும் பிரான்"— சம்பந்தர், 3-122-4.

## 17. சிவலோகம் பெற

**அகிலாண்டமும்** ஆண்டருள் **நாயகியே!**
சகியாவகை ஆகுலம் தாக்குதலால்
திகிலாண்டுளன் நான்! சிவ லோகமதிற்
சுகியாண்டென ஓர்மொழி சொல்லுதியோ.

(உ) சகல அண்டங்களையும் ஆண்டருளும் தேவியே! பொறுக்க முடியாத வகையில் கவலைகள் என்னைத் தாக்குகின்றன; அதனுல் மிக்க அச்சம் கொண்டுள்ளேன் நான். "சிவலோகத்தை நீ அடைந்து சுகமாயிரு" என்று ஒரு சொல் நீ சொல்லி அருளுக.

(கு) 'அகிலாண்ட நாயகி'—திருஆனைக்காத் தேவி பெயர்; "நாதவடிவி அகிலம் பரந்தவள்"—திரு ஆனைக் காத் திருப்புகழ். திகில் ஆண்டுளன் - திகில் (பயம்) கொண்டுள்ளேன். சுகி ஆண்டு - சுகத்தை அனு பவித்து இரு. (ஆண்டு அவ்விடத்திற் சுகி எனலு மாம்.)

## 18. கருத

அண்ணமலை என்னும் அரும்பதியில்
**உண்ணமுலை** என்னுமோர் உத்தமியே!
கண்ணமுனை நான் கருதும்படி நீ
எண்ணவிடில் என்கதி யாதுரையாய்.

(உ) திரு அண்ணுமலையில் உண்ணுமுலை என்னும் பெயருடன் விளங்கும் உத்தமியே! என் கண்போல அருமை வாய்ந்த உன்னை நான் எண்ணித் துதிக்க உனது திருவருள் இல்லையென்ருல் என் கதி யாது? நீ தான் சொல்லுக.

(கு) "உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய ஒருவன்." - சம்பந்தர் - 1-10-1.

## 19. தீங்கு அணுகாதிருக்க

ஓங்கோர் பவ னன்திகழ் ஊரரனுர்
பாங்கே பயில் பைங்கிளி **ஞானமி**ளிர்
**பூங் கோதை** எனும் பெயர் பூண்டவளே!
தீங்கே அணு காவகை செய்தருளே!

(உ) விளங்குகின்ற வாயு ஸ்தலமாகிய சீகாளத்திச் சிவபிரானது பக்கத்தில் "ஞானப்பூங்கோதை" என்னும் பெயருடன் திகழ்கின்ற தேவீ! யாதொரு தீங்கும் அணுகாதபடி நீ என்னைக் காத்தருளுக.

(கு) பவனன் - வாயு; பவனன்திகழ் ஊர் - சீகாளத்தி பஞ்சபூதஸ்தலங்களுள் - காஞ்சி - பிருதிவி மண்) ஸ்தலம்; திருஆனைக்கா - அப்பு (நீர்) ஸ்தலம்; திருஅண்ணுமலை - அக்னி-(தீ) ஸ்தலம்; சீகாளத்தி - வாயு ஸ்தலம்; சிதம்பரம்-ஆகாய ஸ்தலம். சீகாளத்தித் தேவி - ஞானப்பூங்கோதை. "ஞானப்பூங்கோதையாள் பாகத்தான் காண்" - அப்பர் - 6-8-6.

## 20. தேவியின் கருணைக்கு எல்லை இல்லை

முல்லைப்பதி மொய் குழல் வைணவியே!
தில்லைச் **சிவ காமி!** யென் நெஞ்சமெனும்
கல்லைக் கனி யாக்கிய நின் கருணைக்
கெல்லைக்குறி தான் இலதே இலதே.

(உ) திருமுல்லை வாயிலில் வாழும் தேவியே! சிதம்பரத்திற் சிவகாமி என்னும் பெயருடன் திகழ்பவளே! கல்லைப்போல அழுத்தமாக இருந்த என் நெஞ்சைக் கனி என நெகிழும்படி ஆக்கிய உனது கருணையின் அளவுக்கு ஒரு முடிவு எல்லை இஃதெனக் குறிக்கும் ஒரு அளவு அடையாளம் உண்டோ! இல்லை, இல்லை.

(கு) சிதம்பரத்தில் தேவி - சிவகாமி; கல்லைக்கனியாக்கியது ஒரு அற்புதமான வித்தை. "கல்லைமென் கனியாக்கும் விச்சைகொண்டு என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய், எல்லையில்லை நின் கருணை எம்பிரான்" - திருவாசகம், 5-94.

## 21. தேவியைத் தொழுது திருமகளின், கலைமகளின் அருளைப் பெற

அருணம் புஜமாம் அதில்வாழ் திருவின்
அருணும் பெற, நா மகளின் அருளால்
தெருணும் பெற, நல் அவிநா சியில்வாழ்
**கருணும் பிகையின் கழல் நாம் தொழுவாம்.**

(உ.) செந்தாமரையில் வாழும் இலக்குமியின் அருளைப்பெறவும், சரஸ்வதிதேவியின் அருளால் தெள்ளிய அறிவைப் பெறவும், நாம் அவிநாசித் தலத்தில்வீற்றிருக்கும் கருணம்பிகையின் திருவடியைத் தொழுவோமாக.

(கு) அவிநாசித் தலத்தில் தேவிபெயர் 'கருணம்பிகை'. அவிநாசி - கோயமுத்தூர் ஜில்லா திருப்பூர் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 8 மைல். அருண - அம்புஜம் - சிவந்த தாமரை: திரு - இலக்குமி. அருணும் பெற - அருள் - நாம் - பெற: நாமகள் - சரஸ்வதி: தெருள் - தெளிந்த அறிவு.

## 22. மெய்ந் நெறியில் நிற்க

ஐயாற் றினிலே அறம் போற் றுகிருய்
பொய்யாற் றினில்நான் புகுதா வகைநீ
செய்; யாற் றினேயே திருமா முடிமேல்
வை யாற் றலினுன் மகிழ்வை ணவியே!

(உ) (கங்கை) ஆற்றை அழகிய முடிமேல் வைத்துள்ள (ஆற்றல்) சக்தியைக் கொண்டவராம் சிவனுர் மகிழும் வைணவித் தேவியே! திருவையாற்றில் "அறம் வளர்த்த நாயகி" யாய்த் திகழ்கின்ருய். பொய்யான வழியில் நான் புகாதபடி நீ அருள் செய்வாயாக.

(கு) திருவையாற்றில் தேவியின் திருநாமம் 'அறம் வளர்த்த நாயகி' (தர்ம சம்வர்த்தனி): பொய் ஆறு - தப்பான வழி. வை ஆற்றலினுன் - வைத்த திறம் வாய்ந்தவன்.

'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி
மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து..என்னையும் அடியனுக்கி...
ஆண்டவள்ளல்'

— கந்தபுராணம், 6-24-262

## 23. திருவடிக்கீழ்ச் சேர

இராமே சுரபர் வதவர்த் தனியே
மராமேழ் கடிந்தோன் பினர்வந் தவளே!
அராமேக நிலா அணிவார்க் குரியாய்!
தராயோ அடிக்கீழ்த் தலைக்கோர் மறைவே.

(உ) ராமேசுரத்தில் "பர்வத வர்த்தனி" (மலை வளர் காதலி) என்னும் பெயருடன் திகழ்பவளே! மராமரம் ஏழை (அம்பால்) அழித்த திருமாலின்

தங்கையே! பாம்பு, மேகம், நிலவு, இவைகளைச் சூடியுள்ள சிவபிராற்கு உரியவளே! உனது திருவடிக் கீழ் ஒரு தலைமறைவான இடத்தைத் தந்து உதவிபுரியாயோ!

(கு) மராமேழ் கடிந்தோன் - திருமாலாம் ஸ்ரீராமபிரான்: அரா - பாம்பு: சிவபிரான் சடையில் மேகமும் உண்டு. "மழைபுல்குவார்சடை," 'வானமருஞ் சடை' - சம்பந்தர், 3-90-3: 3-63-4.

'தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே" - அப்பர் 4-113-2.

## 24. பொய்யரைத் தண்டிப்பவள்

**ஓம்** பாடும் உளம்திகழ் உத்தமர்கள்
தாம்பாடி வணங்கு **முத் தாம்பிகையே !**
ஓம்பாது பொய்சொன்ன ஒருத்தனை முன்
பாம்பாக வெருட்டிய பார்ப்பதியே!

(உ) ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைத் தியானிக்கும் உத்தமர்கள் பாடி வணங்கும் முத்தாம்பிகையே! பின்வருவதை ஆராயாது பொய் சொன்ன ஒருவனைப் பாம்பாகச் சென்று வெருட்டினவளே!

(கு) ஓம்பாது - பின்வருவதைச் சீர்தூக்கி ஆராயாது; முத்தாம்பிகை -திருஆமாத்தூர்த் தேவி பெயர்.

திரு ஆமாத்தூரில் வழக்கொன்றில், ஒருவன் மூங்கில்தடியின் உட்புறத்தில் பணங்காசுகளை மறைத்துத் தேவியின் சந்நிதிமுன் நின்று 'என் கையில் உள்ள இந்த மூங்கில் தடி தவிர வேறு பொருள் என்னிடம் இல்லை' என்று பொய் சொல்லி, 'இந்த முத்தாம்பிகை என்னைக் கொத்திக் கொல்வாளோ' என்று சொன்னனும். அவன் வெளியே வந்ததும் தேவி அவனைப்

பாம்புருவுடன் சென்று துரத்திக் கொத்திக் கொன்ற தாக வரலாறு.

## 25. அபிராமிப் பட்டருக்கு அருளியது

இருள்சேர் இரவை இது பௌர்ணமியென்
றொருபக்த சிகா மணிசொல் உரையில்
ஒருதப் பிலையென் றுலகோர் உணர
நிருபித்தவொர் அற்புத நின்மலையே.

(உ) இருண்ட அமாவாசைத் தினத்தைப் "பௌர்ணமி இன்று" என உரைத்த ஒரு பக்த சிகா மணியின் உரை உண்மையே என (உலகுக்குக்)காட்டிய அற்புதத் தேவியே!

(கு) பக்த சிகாமணி - அபிராமிப் பட்டர்; இவர் அபிராமி அந்தாதி பாடினவர். திருக்கடவூர்த் தேவி அபிராமி அம்மையின் திருவடித் தொழும்பு பூண்டவர். ஒருநாள் தலயாத்திரையாக வந்த தஞ்சை மன்னர் இவரைச் சந்தித்தபோது "இன்று என்ன திதி?" என்று கேட்டார். அன்று அமாவாசையாயிருந்தும், தேவியின் திருமுக நிலா ஒளியில் ஈடுபட்டிருந்த பட்டர் "இன்று பௌர்ணமி" என்று பதில் உரைத்தார். இதனைக் கேட்டவர்கள் பட்டரை எள்ளி நகையாடினர். தம் தவறு புலப்பட, பட்டர் வருந்தித் தேவியின் திருவருளை நாடித் துதிக்கத், தேவி தன் காதில் இருந்த குழையை வானில் வீசி எறிந்து பௌர்ணமி ஒளியை, எங்கும் பரப்பினள். இதைக் கண்டவர்கள் "ஆஹா! பட்டர் பௌர்ணமி என்றது உண்மையாயிற்று" என அற்புத மனத்தினராயினர் - என்பது வரலாறு.

## 26. துதி

அளியே பெரிதும் உடையாய்! அருணைக்
கிளியேந் துகரக் கிளியே! குயிலே!
வளியேர் பொழில்வாய் திருமுல் லைவனத்
தளிவாய் உறையும் தகைவை ணவியே!

(உ) கருணை பெரிதும் உடையவளே! அருணைக் கிளியாம் (அருணகிரிநாதராயிருந்த) கிளியைக் கையில் ஏந்தும் கிளியே! தென்றல் வீசும் சோலையை உடைய திருமுல்லைவாயிற் கோயிலில் வீற்றிருக்கும் வைணவித் தேவியே!

(கு) அளி - கருணை; வளி - காற்று; தளி - கோயில்; தகை - அழகு, பெருமை.

## 27. தேவியின் கருணைக்கு எனக்கு உரிமை உண்டோ?

கண்ணொத்த மகன் அழக்கண் டவுடன்
கிண்ணத் தடிசில் லது கேண் மையுடன்
உண்ணத் தருமுன் கருணைக் கொருநான்
எண்ணத் தகுமோர் உரிமை எதுவோ!

(உ) தேவீ! உனது கண் போன்ற அருமை வாய்ந்த 'சம்பந்தர்' என்னும் பிள்ளை அழ, அதைக் கண்டவுடன் நீ (பொற்) கிண்ணத்துப் பாலமுதை அன்புடன் அப் பிள்ளைக்கு அளித்தாய்; அந்த உனது கருணைக்கு (ஒன்றுக்கும் உரிமை யில்லாத) நான் பாத்திரமாவதற்கு எண்ணும்படியான உரிமை எனக்கு ஏதேனும் உண்டோ? (ஒன்றும் இல்லை என்றபடி.)

(கு) மகன் - சம்பந்தர். தமது தந்தையாரோடு சென்ற மூன்றுண்டுக் குழந்தை சீகாழிக் கோயில் திருக்

குளக்கரையில் அழுவதைக் கண்ட தேவி பொற்கிண்ணத்தில் பாலமுது தந்து அக் குழந்தையை ஞானசம்பந்த ராக்கினள். — தேவி அலங்காரம்-பாடல் 75 பார்க்க.

## 28. அருள்பெற

ஊனாய் உயிராய் உயிரின் உயிராய்
வானாய் நிலனாய் வளியாய் ஒளியாய்
ஆனாய்! உனதா ரருளைப் பெறவே
தானா னழுவேன் தயைசெய் உமையே!

(உ) ஊன் (உடல்), உயிர், உயிர்க்குயிர், வான், நிலன், காற்று, ஒளி இவை எல்லாம் ஆனவளே! உனது அருளைப் பெறுவதற்காகத்தான் நான் அழுவேன்; தயை புரிக; தாயே!

(கு) பெறவேதான் நான் அழுவேன் - எனப் பிரிக்க.

## 29. தாங்கி அருள

அனைத்தா முலகங்கள் அளிப்பவளே!
உனைத்தான் நிதமும் தொழுதே ஒழுகேன்
மனைத்தாங்கலில் வேதனை வாட்டும் எனை!
எனைத் தாங்குநர் யாருளர் நீயலதே.

(உ) எல்லா உலகங்களையும் காத்து ரட்சிப்பவளே! உனை நான் நித்தமும் தொழுகின்ற ஒழுக்கம் அற்றவனாய் இருக்கின்றேன். இல்லறச் சுமையாம் வேதனை என்னை வாட்டுகின்றது. உன்னை அன்றி என்னைத் தாங்கிக் காப்பவர் யார் உளர் (ஒருவரும் இல்லை என்றபடி)

(கு) மனைத்தாங்கலில் - இல்லறம் என்னும் சுமையைத் தாங்குதலில் - சம்சாரக் கவலையில். தாங்கல்

இல் - தாங்கல் இல்லாத எனப் பொருள் கொண்டால் மனை - மனைவியின், தாங்கல் - ஒத்துழைப்பு, இல் - இல்லாத எனப் பொருள் கூடுதலாகும்.

## 30. கைவிடாதே

இருக்கா மறை ஓ திறைவன் துணைவீ !
கருக்கே விழுவேன் கனவில் ஒரு நாள்
திருக்கை யதையென் சிரமீ துவைத்த
தருக்கை உடையேன் தனைக்கை விடலே.

(உ) ரிக் வேதம் ஓதும் சிவபிரானது துணைவியே ! பிறவிக் குழியில் விழும் எனது கனவில் ஒருநாள் தோன்றி உனது திருக்கரத்தை என் சிரமீது வைத்த அந்தப் பெருமிதத்தை உடைய என்னைக் கைவிடாதே.

(கு) கனவில் தனது திருக்கரத்தை வைத்த தேவி - விருத்தாசலம் பாலாம்பிகை. இருக்கு - ரிக் வேதம் ; கரு - பிறவி ; தருக்கு - களிப்பு.

சிவபிரான் இருக்கு வேதம் ஓதுவர் - ஓதுவிப்பர்: —
'பண்டு இருக்குஒரு நால்வர்க்கு நீர் உரை செய்ததே'
'வேதம் விரித்தோத வல்லார்' — சம்பந்தர், 2-4-7 ; 2-118-6.

## 31. சிவபிரான் விடை ஏறுவதேன் ?

ஈறே யிலிதன் இடப்பால் மகிழ்வோய் !
ஆறே புனையும் அதிகைப் பெருமான்
ஏறே றுவர்தேர் பரிவிட் டிதுநான்
தேறேன் இதை நீ தெளிவித் தருளே.

(உ) சிவபிரானது இடது பாகத்தில் மகிழ்பவளே! கங்கை சூடியாம் இறைவர் - திருஅதிகைப் பெருமானுர்

தேர், (பரி) குதிரை, இவைகளை விட்டு விட்டு, ஏறு (ரிஷபம்) வாகனமாக ஏறுகின்றார். இது ஏன் என்று எனக்குத் தெளிவாக விளங்கவில்லை, தேவீ ! நீதான் அதை எனக்குத் தெளிவாக விளக்கி யருள வேண்டும்.

(கு) 'கடகரியும் பரிமாவும் தேருமுகந்து ஏறாதே
இடபம் உகந்தேறியவா(று) எனக்கறிய
இயம்பேடி
—திருவாசகம் 12-15.

ஈறேஇலி - அந்தம் இல்லாதவன், 'அந்தம் இல்லான்'
—சம்பந்தர், 2-115-11.

அதிகை - திரு அதிகை என்னும் தலம். தென் ஆற்காடு ஜில்லா பண்ணுருட்டிக்கு அருகில் உள்ளது.

## 32. திரிபுரம் எரித்த விசித்திரம்

**வி**ற்றாங் கியகை யதுநின் வியன்கை
மற்றாங் கொருநாண் வலிகை அரன்கை
செற்றார் புரஞ்செற் றதெவ்வா றதுசொல்
நற்றாய் உமையே ! நலநா ரணியே !

(உ) (திரிபுர சம்மார காலத்தில்) - (மேருமலையாம்) வில்லைத் தாங்கிய (இடது) கை, தேவீ ! உனது கை. வன்மை மிக்க ஒரு நாணை வலித்து (இழுத்துப் பிடித்த) வலது கை சிவபிரானது கை; (இப்படி இருக்க) பகைவர்களுடைய திரிபுரத்தைச் (சிவபிரான்) (எரித்து) அழித்தது எவ்வாறு ? அதைச் சொல்லியருளுக ; உமா தேவியே ! நல்ல நாரணியே !

(கு) சிவபிரான் அர்த்த நாரீசுரர் ஆதலால், சிவபிரானது இடதுகை தேவியின் கை; வலதுகை சிவனது கை ; இப்பாடல் பின்வரும் அப்பர் பெருமானுடைய பாடலைத் தழுவுகின்றது.

'கற்றூர் பயில்கடல் நாகைக் காரோணத்தெங் கண்ணுதலே !
விற்றாங் கியகரம் வேல்நெடுங் கண்ணி வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாணவலித் த(ஃ)கரம் நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவகம் என்னைகொல் செப்புமினே !
—அப்பர், 4-103-2.

விற்றாங்கிய - வில் தாங்கிய ; மற்றாங்கொரு - மல்-தாங்கு - ஒரு - வலிமை கொண்ட ஒரு : 'மற்று ஆங்கு ஒரு' - எனவும் பிரிக்கலாம்; செற்றார் - பகைவர். செற்றது -கோபித்து அழித்தது; நற்றாய் - நல்ல தாய்.

## 33. கங்கை சூடியதை எங்ஙனம் பொறுத்தாய் ?

செவ்வான் உருவச் சிவனுன் எதிரே
அவ்வாறெனுங் கங்கையை யன்றுமுடிக்
கெவ்வா றணிந்தான் இமவான் மகளே !
எவ்வாறு பொறுத்தனை நீ இது சொல்.

(உ) இமயராஜன் புத்திரியே! செவ்வானம் போன்ற செந்நிறத்துச் சிவபிரான் உன் கண் எதிரே அந்தக் கங்காதேவி என்னும் ஆற்றை அன்று தன் சிரசில் எப்படி அணிந்தார்? நீ அவர் செய்கையை எவ்வாறு பொறுத்திருந்தாய் ; சொல்லியருள்.

(கு) சிவபிரான் - செவ்வான் உருவம்: "செவ்வான வண்ணர் என் சிந்தையாரே" —அப்பர், 6—95-2: அவ்வாறு - அ (அந்த) ஆறு. இச்செய்யுளின் கருத்தைக் "கங்கை சடையுட் கரந்தாய் அக் கள்ளத்தை மெள்ள உமை, நங்கை அறியிற் பொல்லாதுகண்டாய் எங்கள் நாயகனே !"—என வரும் அப்பர் பாடலிற் காண்க.

[அப்பர், 4—103-2]

## 34. தேவியின் அன்பர்க்கு ஊனம் வராது

வானம் படிலென்! கடல்வற் றிடிலென்!
தானம் புவியே தடுமா றுதலுற்
றீனம் படிலென்! எழிலார் உமையே!
ஊனம் உறுமோ உனதன் பருக்கே.

(உ) வானம் கீழே விழுந்தால் என்ன? கடல் வற்றினால் என்ன? பூமி தான் நிலை தடுமாறுதல் அடைந்து கெடுதல் உற்றால் என்ன? அழகிய உமையே! உனது அடியார்களுக்குக் கெடுதல் ஏதேனும் வருமோ? (ஒன்றும் வராது என்றபடி.)

(கு) தானம் - ஸ்தானம்; நிலை. தான் அம்புவியே - அம்புவியே தான் - எனவும் கொள்ளலாம்: அம்புவி - பூமி. இப்பாடல்—

'வானம் துளங்கிலென் மண் கம்பம் ஆகிலென் மால்வரையும், தானம் துளங்கித் தலைதடு மாறிலென்.. வேலை நஞ்சுண்டு ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட் பட்ட உத்தமர்க்கே"—(அப்பர், 4-112-8)—என வரும் அப்பர் வாக்கைத் தழுவுகின்றது.

## 35. பாற்கடலை இழந்த திருமாலின் முறையீடு

தங்காய்! அமளித் தலமென் னதைநின்
பங்காளர் எடுத்தொரு பாலகனுக்
கங்கா தரவோ டளித்தார் எனமால்
முங்கா ரஞரில் முறையிட் டனரோ!

(உ) "தங்கையே! எனது படுக்கை இடத்தைப் (பாற்கடலை) உனது பங்கினரான சிவபெருமான் எடுத்து ஒரு குழந்தைக்கு (உபமன்யு முனிவருக்கு) அங்கு அன்போடு கொடுத்துவிட்டார்" — என்று

திருமால் முழுக்கடிக்கின்ற மிக்க துயரத்தோடு உன்னிடம் வந்து முறையிட்டாரோ ?

(கு) முங்கு + ஆர் + அஞர்-முழுக்கடிக்கின்ற பெருந் துயர். தேவி - திருமாலின் தங்கை ; அமளி - படுக்கை. ஆதரவு - அன்பு.

வியாக்ரபாத முநிவருடைய குழந்தையான உபமன்யு பால் வேண்டி அழுதபோது சிவபிரான் பாற்கடலையே வரவழைத்து, அப்பாலகனுக்குத் தந்தனர் என்பது வரலாறு :

''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்'' -- திருப்பல்லாண்டு—9. ''பாலகனுர்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட கோலச் சடையன்.''—திருவாசகம், 14-17.

''கமல லோசனன் . . உறைதரும் ஆழிச் சேக்கையைப், புலிக்கால் முநிவரன் புதல்வனுக்கு, நலத்தகு கருணையில் நயந்தளித்தனை—அவன், அதனுல், பாயல் இன்றி நின்வாயிலில் நெடுநாள் வைகினன்'' — சிதம்பரச் செய்யுட் கோவை, 76.

## 36. திருவடியைப் பணிவேன்

வேதப் பொருளே ! விடைமேல் வருவோய் !
போதத் துருவே ! புனிதப் பரையே !
நாதத் திருவே ! நளினம் புரைநின்
பாதத் துணைநான் பரவிப் பணிவேன்

(உ) வேதப் பொருளே ! விடை வாகனம் கொண்டவளே ! ஞான சொரூபியே ! பரிசுத்தமான தேவியே ! ஒலி உருவே ! தாமரை போன்ற உன் இரு திருவடிகளை நான் போற்றிப் பணிவேன்.

(கு) போதம் - ஞானம் ; நளினம் - தாமரை ; புரை - போன்ற.

## 37. வறுமை செல்வம் இரண்டும் கவலை தருவன

சிந்தா குலம்நல் குரவும் ; தெரியின்
சிந்தா குலமே வருசெல் வமதும் ;
எந்தாய் உமைநின் எழிலார் அருளே
சந்தோ டமதைத் தருசெல் வமதாம்.

(உ) நல்குரவு (வறுமை) சிந்தைக்குக் கவலை தருவது ; யோசித்துப் பார்த்தால் (நமக்குக்) கிடைக்கும் செல்வமும் சிந்தைக்குக் கவலைதருவதேயாகும் ! தாயே! உமையே ! உனது அழகிய திருவருள் (ஒன்றே) தான் மகிழ்ச்சியைத் தரும் செல்வமாகும்.

(கு) 'செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னும் தொல்விஷம் பிழைத்தும்'
—திருவாசகம், 4-39, 40.

சிந்தாகுலம், சிந்தை + ஆகுலம் : ஆகுலம்-கவலை.

## 38. தேவி எல்லாம் ஆகுவள்

உணர்வும் உமையே, உயிரும் உமையே,
புணர் ஞான நிலைப் பொருளும் உமையே,
துணரின் மணமும் சொலினிங் கவளே
உணர்மின் எனஞா னியர் ஓதுவரே.

உ) உணர்வு, உயிர், ஞானநிலைப் பொருள், பூங்கொத்தின் மணம் எல்லாம் தேவியே, அறிமின்கள் என்று ஞானியர்கள் ஓதுகின்றார்கள்.

(கு) துணர்-பூங்கொத்து.

"உணர்வும் அவனே உயிரும் அவனே, புணர்வும் அவனே.. துணரின் மலர்க் கந்தம் துன்னிநின் றானே" —திருமந்திரம், 3035.

## 39. என் மனப்பாழ் அறை தேவியின் பள்ளி அறை ஆகுக

மதுவார் பொழில் முல் லைவனத் துமையே!
இதுகேள், எனதிம் மனப்பாழ் அறையைப்
புதுவீ நிறைநின் பொலன்பள் ளியறை
அதுவே எனஆக் கிடுநீ அரசீ!

(உ) தேன்நிறை மலர்ப்பொழில் சூழும் முல்லை வனத்துத் தேவியே! நான் சொல்வதைக் கேட்டருளுக. 'என்னுடைய இந்த"மனம்"என்னும் பாழான அறையை நீ உனது புதுமலர்ப் பொன்மயப் பள்ளியறையாக ஆக்கி அமர்ந்தருளுக.

(கு) மது - தேன்; வீ-மலர்; பொலன் - பொன்.

"என் சிந்தைப்பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கி" — கழுமல மும்மணிக்கோவை(பட்டினத்தார்)-4.

## 40. சிவபிரான் தேவியின் மகன், தந்தை; எப்படி?

பொன்னேர் சடையன் புனிதன் இறைவன்
என்னேயிது! நின் மகன் அத்தனெனத்
தன்னேர் மணி வாசகர் சாற்றுகின்றார்
அன்னே!அதன் மெய்ப்பொருள் யாதுரையாய்.

(உ) தேவீ! பொன்னிறச் சடையை உடைய சிவ பெருமான் உனக்கு மகன் எனவும், தகப்பன் எனவும், தனக்குத்தானே இணையான மணிவாசகர் சொல் கின்றாரே; இது என்ன ஆச்சரியம்! தாயே! இதன் மெய்ப் பொருள்தான் யாது! உரைத்தருளுக.

(கு) "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் எம் ஐயன்"-திருவாசகம்,9-13.

" தவளத்த நீறணியும் தடந்தோள் அண்ணல்
தன்னொருபால்
அவள் அத்தனும் மகனும் தில்லையான் "—திருக்
கோவையார்-112.

சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் தேவிக்குச் சிவபிரான் அத்தன் (தந்தை) ஆவார்; சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் தேவிக்குச் சிவபிரான் மகன் ஆவார்.

' சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்'—சிவஞான சித்தியார், சுபக்கம்-167.

'கனகமார் கவின் செய் மன்றில்
அனக நாடகற்கெம் அன்னை
மனைவி தாய் தங்கை மகள்.'
(சிதம்பரச் செய்யுட் கோவை, 33)

## 41. தேவி அழிவில்லாதவள்

யாழின் மொழியாள் இமவான் மகளார்
ஏழின் இசையாள் எனையா ளுடையாள்
ஊழின் கடைநாள் உலவா வருவாள்
சூழின் இவளே தொலைவில் லவளே.

(உ) யாழ் போன்ற இனிய மொழியாள், இமயராஜன் மகள், ஏழிசை வல்லவள், என்னை ஆள் உடையவள், கடையூழி காலத்திலும் அழியாது உலவுகின்றவள்; இவள்தான், ஆய்ந்து பார்க்கின், அழிவில்லாதவள் (என உணர்வோமாக.)

(கு) " யாழைப் பழித்தன்ன மொழி மங்கை "—சுந்தரர், திருமறைக்காடு-1. தொலைவு இல்லவள் - தொலைவு - அழிவு. ஊழ் - உலக முடிவு.

## 42. ஆண்டருள

உமைநீ உரைசெய் உரைதான் மறையின்
அமையும் ஒலியென் றறைவார் பெரியோர்
இமயம் வளர்பெண் எழிலே! குயிலே!
எமையாண் டருளும் ஒருநாள் எதுவோ.

(உ) இமய மலையில் வளர்ந்த அழகீ! நீ பேசுவ தெல்லாம் மறை (வேத) ஒலியாகும்—என்று பெரியோர் கூறுகின்றனர். நீ என்னை ஆண்டருளும் ஒரு நாள் வருமோ! (வரவேண்டுகின்றேன் என்றபடி)

(கு) வேதமே பேச்சாகக் கொண்டவள் தேவி. 'வேதஞ் சொல் பேதை' – திருப்புகழ், 93.

"உமைஉரை செயுமவை மறையொலியே"—சம்பந்தர், 3-98-3. 'முது மறையின் பேச்சி' – திருப்புகழ், 1133.

## 43. தேவி பாட இறைவன் ஆடுதல்

அரைசேர் அரவன் அவன் ஆடுவனால்
பரைநீ இசைகள் அவை பாடிடவே
தரையில் இதுநற் றலமென் றெவரும்
உரைசெய் திருமுல் லைவனத் துமையே!

(உ) பூவுலகில் இது நல்ல ஸ்தலம் என்று யாவரும் பாராட்டும் திருமுல்லைவாயில் என்னும் தலத்தில் அமர்ந்துள்ள தேவியே! நீ இசைகள் பாடப் பாம்பை அரையில் அணிந்துள்ள சிவபிரான் ஆடுவர்.

(கு) பரை - பார்வதி. தேவிபாடச் சிவபிரான் நடம் ஆடுவர். "கீதம் உமைபாட...வேத முதல்வன் நின்றாடும்"—சம்பந்தர் 1-46-7. "பாடும் கவுரி - பவுரி கொண்டாடப் பசுபதி நின்றாடும்'—கந்தர் அலங். 68.

## 44. அரி, அயன் போகமனுபவிப்பது தேவியின் அருளால்

நாகத் தணையான் நளினத் துறைவான்
போகத் திலிருப் பதுநின் பொறையால்
பாகத் திறைவன் பதபூ சனையால்
ஏகத் தெழிலார் உருஏற் றனையால்.

(உ) தேவீ ! திருமாலும் பிரமனும் போகத்தில் இருப்பது உனது திருவருளால்தான்; இறைவனைப் பூசித்து அவருடன் அழகான ஓருருக் கொண்டனை நீ.

(கு) நாகத்து அணையான் - பாம்பிற் பள்ளி கொண்ட திருமால். நளினத்து உறைவான் - தாமரையில் வாழும் பிரமன். பொறை - பொறுமை - வலிமை. ஏகத்து உரு - அர்த்த நாரீசர் உரு. தேவி திருக்கேதாரத்திலும், திருவண்ணாமலையிலும் பூசித்துச் சிவனது இடப்பாகத்தைப் பெற்றனள் என்பது வரலாறு. சிவபிரான் ஆணும் பெண்ணுமான அர்த்த நாரீசர் கோலத்தில் விளங்குவதால்தான் திருமாலும் பிரமனும் போக நிலையில் இருக்க முடிகின்றது. "நாகத் தணையானும் நளிர்மா மலரானும், போகத் தியல்பினுற் பொலிய அழகாகும் ஆகத் தவளோடும் அமர்ந்து" —சம்பந்தர், 1-85-9.

## 45. தேவி அஞ்சின சமயங்கள்

புனிதன் விடமுண் டனனப் பொழுதும்
தனிநின் றெருவா ரணந்தன் னையுரித்
தினிதென் றுரிபோர்த் திடுவே ளையினும்
நனிஅஞ் சியதென் நவில்வாய் உமையே!

(உ) சிவபிரான் நஞ்சை உண்ட சமயத்திலும், அவர் தனியாக நின்று (எதிர்த்து வந்த) ஒரு யானை

யின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட சமயத்தி லும் தேவீ ! நீ மிகப் பயந்தாயே ! ஏன் பயந்தாய் ! காரணத்தைக் கூறியருளுக.

(கு) பிரானுர் விஷத்தை உண்டபோது அது அவரைக் கொல்லும் எனவும், யானையின் ஈரத் தோலைப் போர்த்துக் கொண்டால் அவர் இறந்து படுவர் என்றும் தேவி அஞ்சினள் என்ப ; யானையின் ஈரத்தோல் கொல்லும் தன்மையதாதலின், " வாரணத் தின் ஈருரிபோற் கோள் இமிழ்ப்பு."—(சிந்தாமணி 2787) 'யானையின் பசுந்தோல் பிறர் உடம்பில் பட்டால் கொல்லுமென் றுணர்க. வாரணத்துரி தப்பாமற் கொல்லும்'—சிந்தாமணி, 2787 உரை)

## 46. தேவி என்னுள் இருக்க

உன்றன் நடுவுன் கணவன் உளன்நீ
என்றும் அவன்தன் நடுவுள் இருத்தி
இன்றிங் கிருவீ ரெனதுள்ளிருக்க
என்றும் விழைவேன் கொடிநேர் இடையாய் !

(உ) கொடியிடைத் தேவீ ! உனது நடுவில் உன் கணவன் (சிவபிரான்) உளன் ; அவனுடைய நடுவில் நீ இருக்கின்ருய்; நீங்கள் இருவரும் என்னுள் இருக்க, நான் என்றும் ஆசைப்படுகின்றேன்.

(கு) " உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடை யாள் நடுவுள் நீ இருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல்.... அருளைப்புரியாய்" — திருவாசகம், 21-1. கொடி நேர் இடை—நேர்-போன்ற. 'கொடியிடை நாயகி' -வடதிருமுல்லை வாயில் தேவியின் திருநாமம். விழைவேன்-விரும்புவேன்.

## 47. தேவியும் சிவனும் கலப்பதால் ஆண்பெண் மகிழ்தல்

ஆண்பெண் ணவர் கூடி மகிழ்வடைதல்
ஆண்பெண் ணென அச் சிவன் உன்னுடனே
மாண்போடு கலந்து மகிழ்வதனுல்
ஏண்பெற்ற இடைக் கொடியே உமையே!

(உ) பெருமை வாய்ந்த கொடியிடை உமையே ! சிவபிரான் தேவியாகிய உன்னுடனே கலந்து மகிழ்வதால்தான் உலகில் ஆண்பெண் கூடி மகிழ்வுறுகின்ருர்கள்.

(கு) ஏண் - பெருமை, 'பெண்பால் உகந்திலனேல்.. இரு நிலத்தோர் விண் பாலி யோகெய்தி வீடுவர் காண் சாழலோ'—திருவாசகம் 12-9. 'போகம் ஈன்ற புண்ணியன்'—தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக் கெல்லாம் போகத்தை உண்டாக்குகின்ருன் —சிந்தாமணி 362, உரை.

## 48. தேவியின் திருவடி பதிந்த இடங்கள்

பொன்ரு இளம்பூங் கொடியே! உமையே !
உன்ரு மரைத்தாள் உதை உண் டயமன்
தன்ரு ரகலத் து!மென் கண் தனிலும்
நன்ருக அழுந்தி நலந் தருமே.

(உ) அழிவிலாத இளம்பூங்கொடியான தேவியே ! உதை தந்த உனது திருவடி காலனுடைய மார்பிற்பட்டபடியால் அத்திருவடி அவனது மார்பிலும், (உன் திருவடியை நான் தரிசித்து மகிழ்வதால்) அத்திருவடி எனது கண்ணிலும் பதிந்து நலத்தைத் தருகின்றது.

(கு) பொன்ரு(த)-அழியாத. உன்ருமரை - உன் தாமரை ; தன்ருரகலத்து - தன் தார் அகலத்து. தார்·

மாலே. அகலம்-மார்பு." இகழும் காலன் இதயத்தும் என்னுளும் திகழும் சேவடியான்."—சம்பந்தர் 3-50-2

## 49. தேவி ப்ரத்யக்ஷமாக

எனதா ருயிரே! எழிலார் உமையே !
உனதா ளிணையை உணர்வோ டுநிதம்
மனதால் வழிபா டுகளே செயுமென்
முனதாக எழுந்தருள்வாய் முதல்வீ !

(உ) என் ஆருயிரே ! அழகிய உமையே! முதல்வீ ! உன் திருவடியைத் தினந்தோறும் கருத்துடன் தியானித்து வழிபடும் என் கண்எதிரே எழுந்தருளுக.

(கு) முனதாக - முன்னதாக.

## 50. பூரம் நன்மை பயத்தல்

அப்பூரமூர் அம்மையும் அத் திருவும்
மைப்பூசு கணுக வகிப்பவளே !
நப்பூரம் நயந்தவளே எனலும்
முப்பூரமும் நன்மை முகிழ்த்திடுமே.

(உ) " அந்தப் பூரவாகினியாகிய சரஸ்வதியையும் அந்த இலக்குமியையும் கண்களாகக் கொண்டவளே ! பூர நக்ஷத்திரத்துக்கு உரியவளே" என்று நான் கூறித் துதித்தால் (பயணத்துக்கு ஆகாத பூரம், பூராடம், பூரட்டாதி என்னும்) மூன்று (பூர) நக்ஷத்திரங்களும் எனக்கு நன்மையையே தருவனவாகும்.

(கு) பூரம் ஊர் அம்மை—பூரம்-பூரானை வாகனமாக ஊர்கின்ற அம்மை—சரஸ்வதி. பூரவாகினி-சரஸ்வதி (திவாகரம், நாமதீப நிகண்டு). 'பூரப் பரி வரு பாமடந்தை பாரதி'—உபதேச காண்டம் (ஞான

வரோதயர்)-7. சரஸ்வதியும், இலக்குமியும் தேவியின் கண்கள். செய்யுள் 15-ன் குறிப்புரை பார்க்க. 'தேவி அலங்காரம்' - செய்யுள் 80-ன் குறிப்புரையையும் பார்க்க.

நப்பூரம் நயந்தவளே !—தேவிக்குப் பூரம் உகந்த நக்ஷத்திரம். ந + பூரம். ந=சிறந்த. 'புரத்தப்புப் புவிதரத் தோன்றி' - புரத்து - பூர நாளில், அப்பு - கடல் சூழ்ந்த, புவி - பூவுலகத்தை, தர - பெற்றருளத், தோன்றி - அவதரித்த உமாதேவி—கந்தரந்தாதி 78 உரை. 'பகவதி நாள் பூரம்-(பிங்கலம்-திவாகரம்). வகித்தவள்- கொண்டவள். முப்பூரம்-பூரம், பூராடம், பூரட்டாதி. இவை பயணத்துக்கு ஆகாத நக்ஷத்திரங்கள்.

" த்ரிணீபூர்வா மகா ஜேஷ்டா பரணீ ஜன்ம க்ருத்திகா :
ஸ்வாதி சர்ப்ப விசா கார்த்ரா சித்ரா கமன வர்ஜிதா "
என்பர் வட மொழியார்.

## 51. பேசா அநுபூதியைப் பெற

ஈசா எனுமோர் வழிபா டிலன்யான்
ஆசா நிகளத் தளைபட் டலைவேன்
தேசார் உமையே ! சிறியேற் கருள்வாய்
பேசா அநுபூதி பிறந்திடவே.

(உ) ஈசா என்று வழிபடாத நான் ஆசை என்கின்ற விலங்காம் பந்தத்தில் அகப்பட்டு அலைகின்றேன். ஒளிவீசும் உமா தேவியே! பேசா அநுபூதி பிறக்கும்படி சிறியேனுக்கு அருள்புரிவாயாக.

(கு) தேசு - ஒளி. பேசா அநுபூதி - மௌன நிலை; மனம் ஒடுங்கி நிற்கும் நிலை. தளை-கட்டு. நிகளம்- விலங்கு. "ஆசா நிகளம் துகளாயினபின், பேசா அநுபூதி பிறந்ததுவே"—கந்தரநுபூதி 43.

### சரணம்

சரணம் இடியார் விடையாய் சரணம்
சரணம் பிடிநேர் நடையாய் சரணம்
சரணம் கொடிநேர் இடையாய் சரணம்
சரணம் சரணம் சரணம் உமையே !

### வணக்கம்.

(உ) இடி போன்ற குரலை உடைய விடையை உடையவளே ! பெண் யானை போன்ற நடையை உடையவளே ! கொடி போன்ற இடையை உடையவளே ! உமா தேவியே ! சரணம், சரணம், சரணம்.

(கு) இடியார் விடை-இடியன்ன குரலை உடைய இடபம். 'இடியார் குரல் ஏறு'—சம்பந்தர் 1-34-3. 'இடியார் ஏறுடையாய்'-சம்பந்தர்-3-55-2. பிடி-பெண் யானை.

தேவி அநுபூதி முற்றும்

---

# தேவி அநுபூதி

## முக்கிய விஷயக் குறிப்பகராதி

அபிராமிப் பட்டர் - 25
அருணகிரிக் கிளி - 26
ஆண்பெண் மகிழ்ச்சிக்குக் காரணம் - 47
உபமன்யு முனிவர் - 35
கணபதி பாரதம் எழுதினது - காப்பு
காமாட்சி பெயர்க் காரணம் - 15
காளமேகன் - 13
சம்பந்தர் - 27

சிவபெருமான் :—
ஏறுவாகனம் ஏன் - 31
திரிபுரம் எரித்த விசித்ரம் - 32
தேவியிருக்கக் கங்கையைக் கொண்டது - 33
செல்வமும் வறுமையும் இரண்டும் கவலை தருவன - 37

தலங்களும் தேவியும் :—
அண்ணுமலை - உண்ணுமுலை - 18
அவிநாசி - கருணும் - பிகை - 21
ஆமாத்தூர்- முத்தாம் பிகை - 24
ஆரூர் - அல்லியங் கோதை - 16
ஆனைக்கா- அகிலாண்ட நாயகி - 17
இராமேசுரம் - பர்வத வர்த்தனி - 23
காஞ்சி - காமாட்சி - 15
காளத்தி - ஞானப் பூங் கோதை - 19
திருமுல்லை வாயில் - கொடியிடை நாயகி - 4, 46
திருவையாறு - அறம் வளர்த்த நாயகி, தர்ம சம்வர்த்தனி - 22
தில்லை - சிவகாமி - 20
மதுரை - மீனுட்சி - 12
விருத்தாசலம் - பாலாம் பிகை - 30
திருமால் படுக்கை இடத்தை இழந்தது - 35
தேவி -
அஞ்சின சமயங்கள் - 45
அடியார் தீரம் - 34
அண்டங்களை ஈன்றும் கன்னியே - 8
அழிவிலாதவள் - 41
உரை - வேதமொழி - 42

தேவி - உலகங்களை அளித்தல் - 29
சிவன் ஆடத் தேவி பாடுதல் - 43
திருமால்-பிரமன் போகத் திலிருப்பது தேவியின் திருவருளால் - 44
-தேவி பாம்புரு எடுத்தது -24
- தேவியின் கண்கள் - இலக்குமியும் சரஸ்வதி யும் - 15, 50
-தேவியின் திருவடிச் சம் பந்த இடங்கள் - 48
- தேவியின் நடுவிற் சிவன் - 46
- தேவியின் மகன் தகப் பன் - சிவன் - 40
-தேவி வேத தாமரையில் வீற்றிருத்தல் - 13
- பூர நாளினள் - 50
பாகோ பார்ம் - 9
பூரம் - முப்பூரம் - 50
பேசா அநுபூதி - 51
மனப் பாழறை - பள்ளி யறையாக - 39
மனம் திரிதல் - 14
முல்லை வாயில் இரண்டு-4
வினை வெய்யில் - 5, 6

# வைணவித் துதிக் குறட்பா

[தேவி ஷட்கம்]

1

நவையே எனையென்றும் நாடா வகைக்குச்
சிவையேநீ என்மனத்திற் சேர்.

2

கணமேனும் என்னைக் கடைக்கண்பார் பூவின்
மணமே உமையேநீ வந்து.

3

தவியே தவித்துன்னைத் தாயேயென் றேத்தும்
புவியோர்க் கருள்வாய் புரந்து.

4

சித்தத் திருத்தியுனைச் சேவித்துப் போற்று
பத்தர்க்கு நீயன்றோ பற்று. [கின்ற

5

வைதேகி நாயகனும் மாலோன் திதித்தொழிலிற்
கைதேர்ந்த கன்னிநீ காண்.

6

மைவிளங்கு கண்ணியே! வைணவித் தேவீநீ
கைவிடா தென்றுமெனைக் கா.

---

குறிப்பு :—இவ்வாறு குறட்பாக்களின் முதற்சீரின் இரண்டாம் எழுத்துக்களை ஒன்றுசேர்க்க "வைணவித்தேவி" என, நடு எழுத்தலங்காரம்போல, வருவது காண்க.



# தேவி அலங்காரம்

(ராவ்பகதூர் தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை M.A.
இயற்றியது)

## காப்பு

**தே**வி அலங்காரம் என்னுமோர் நூலிதைச் செப்புதற்குக்
காவி மலைமுரு கேசன் கழற்கே தொடக்குண்டஎன்
நாவி லமர்ந்தின்று நல்ல கருத்தை நயந்தளிப்பாய்
தேவி அளித்த புதல்வ ! கஜமுகச் சிறபரனே !

(உரை) [வட திருமுல்லை வாயிலில் 'பாகோ பார்ம்' என்னும் இடத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வைணவி தேவிமேல்] 'தேவி அலங்காரம்' என்னும் நூலை இயற்றக் காவிமலை எனப்படும் திருத்தணிகை ஈசரின் திருவடிக்கு அடிமை பூண்ட அடியேனுடைய நாவில் அமர்ந்து, யானைமுகப் பரம்பொருளே! நல்ல கருத்துக்களை என்மீது அன்பு வைத்து அருள்வாயாக.

(குறிப்பு) காவிமலை - நீலோற்பலம் மலரும் திருத் தணிகைமலை. தொடக்கு - அடிமைக்கட்டு.

## நூல்

### 1. பூசித்துத் துதிப்பேன்

அளிஉணுப் பூஇட்டென் அன்பெனும் தூபமிட் டானந்தமாய்க்
களிஉண்டு தோத்திரத் தாலுமை யே! உனைக் கண்டு நிற்பேன்
வளிஉண் அரவை அணிவோன் திருமுல்லை வாயகத்துத்
தளிஉளும் பாகோபார்ம் தன்னிலும் வாழ்கின்ற சங்கரியே!

(உ) வாயுபக்ஷணியான பாம்பை அணியும் சிவ பிரான் வீற்றிருக்கும் திருமுல்லை வாயிற் சிவாலயத் துள்ளும், 'பாகோபார்ம்' என்னும் இடத்துள்ள ஆலயத்துள்ளும் வீற்றிருக்கும் சங்கரியே! (மானஸீக பூஜையாக) வண்டு உண்ணுத என் இதய தாமரையாம் மலரால் பூசித்து, அன்பாகிய தூபம் இட்டு, ஆநந்தக் களிப்புடன் தோத்திரங்கள் பாடி, உமாதேவியே; உன்னைத் தரிசித்து நிற்பேன் நான்.

(கு) அளி - வண்டு. வண்டு உண்ணுத புது மலரிட்டு எனலுமாம். இதய தாமரை என்பதே நன்று! வளி - காற்று. பாம்பு - வாயுபக்ஷணி. தளி - கோயில். **Bago Farm** - ஸ்ரீ வைஷ்ணவி தேவி ஆலயம் உள்ள இடம். திருமுல்லை வாயிற் கோயிலுக்கு அருகில் உள்ளது.

### 2. ஆண்டருள

ஆகமம் கற்றுன் அடியினில் வீழ்ந்தங் கரற்றுதற்குத்
தாகமுந் தந்தெனை ஆண்டருள் செய்யத் தயைபுரிதி
பாகமும் கொண்டாய் பரமன் இடத்தே, பரிந்துவந்து
பேகொபா ரத்தும் இடமது கொண்டாய் பெருந்திருவே.

(உ) ஆகம விதிகளை அறிந்து உன் திருவடியில் விழுந்து அழுதற்கு வேண்டிய தாக உணர்ச்சியைத்

தந்து என்னை ஆண்டருளத் தயை புரிதி; ராஜ லக்ஷ்மியே ! நீ பரமசிவனது இடது பாகமாம் இடத்தையும் கொண்டாய்; இந்த பாகோ பாரத்தும் இடம் கொண்டாய்.

(கு) சிவபிரானது இடதுபாகம் எவ்வளவு பிரிய மான இடமாய் உனக்கு உளதோ அவ்வளவு பிரிய மான இடமாய் இந்த பாகோபாரமும் உனக்கு உள்ளது என்றபடி.

## 3. துதிப்பேன்

இல்லையென் னுதிவண் ஈபவர் நெஞ்சில் இலகிநிற்கும்
தில்லையர் பாகத் திடமது கொண்ட செழுந்திருவே !
முல்லை வனமமர் வைணவி சூலி முதல்வி மெத்த
நல்லை நீ என்றுனை நாத்தழும் பேற நவிலுவனே.

(உ) இல்லை என்று சொல்லாமல் இரப்பவர்க்கு ஈபவர்தம் நெஞ்சில் விளங்கும் சிதம்பர நாதரின் இடது பாகத்தைக் கொண்ட தேவியே ! திருமுல்லைவாயிலில் விளங்கும் தேவியே ! சூலியே ! முதல்வியே ! நீ மிக நல்லவள் என்று உன்னை நான் என் நாத்தழும்பேறப் போற்றித் துதிப்பேன்.

(கு) தில்லையர்-சிதம்பரத்துச் சிவபிரான். இவண்-இப்பூமியில்.

## 4. கடைக்கணித்தருள்

ஈடிலா உன்றன் இணையடி போற்றி இயம்புதற்கு
நாடிலேன், பத்தி வழியினைக் காணும் நலமறியேன்,
தேடினேன் நானிங்கும் அங்குமாய்ச் சென்று திரிந்து பன்னுள்
வாடினேன், என்னைக் கடைக்கணித் தாண்டருள் வைணவியே!

(உ) வைணவித் தாயே! ஒப்பில்லாத உனது திருவடிகளைப் போற்றிப் புகழும் வழியை நாடுகின்றேன் இல்லை; பக்தி வழியைக் காணும் நலத்தையும் அறிகின்றேன் இல்லை; பல நாள்களாக அங்கும் இங்கும் தேடித் திரிந்து வாடினேன். என்னைக் கடைக்கணித்து ஆண்டருள்வாயாக.

(கு) தேவியின் கடைக்கண்ணின் பெருமையைத் "தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா, மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா, இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே, கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக் கண்களே (69)—எனவரும் அபிராமி அந்தாதியிற் காண்க.

## 5. திருவடியே என் வைப்பு எனும் உள்ளத்தைப் பெற

உதிக்கின்ற செங்கதிர் போல்வன உன்றன் உபயபதம்
துதிக்கின்ற அன்பர்தம் செஞ்சொற் ப்ரபந்தமே தூமலரா
மதிக்கின்ற மாதங்கி! நின் கழற் போததை வைப்பெனவே
பதிக்கின்ற உள்ளத்தை யான்பெறு வேனோ பகருதியே.

(உ) அன்பர்களுடைய துதிப் பாடல்களையே தூய மலர் அர்ச்சனையாகப் பாவிக்கின்ற தேவியே! உனது பாதங்கள் உதிக்கும் செஞ்சூரியனது ஒளியைக் கொள்வன. அத்தகைய உனது திருவடி மலர்களே எனது சேமப் பொருள் என்று எண்ணும்படியான திடமனதை நான் பெறுவேனோ! சொல்லியருள்.

(கு) உதிக்கின்ற கதிர்-காலைக்கதிர்-இளஞ்சூரியன். செஞ்சொற்ப்ரபந்தமே தூமலர்—" அற்சனை பாட்டே யாகும்."—பெரிய புரா. (தடுத்தாட்) மாதங்கி-மதங்க முனிவரின் குமரி. மதங்கர் என்னும் யாழ்ப்பாணர் குலப்

பெண்ணுக அவதரித்தவள். "மதங்கர் குலப் பெண் களிற்ருேன்றிய எம்பெரு மாட்டி", "சூலினி மாதங்கி," அபிராமி அந்தாதி உரை—70, 50. "மாதங்கி வேதஞ் சொல் பேதை நெடு நீலி"—திருப்புகழ் 93. கழற்போது-திருவடிமலர். வைப்பு—சேமித்து வைத்த பொருள்.

### 6. பாடி உருக

**ஊ**தியம் வேண்டாத உள்ளத் திலகும் உணர்வுடன் யான்
ஓதியும் பாடி உருகவும் கண்பார்! உயர்சிவத்தின்
பாதியும் ஆன பராபரை! பைங்கிளி! பார்ப்பதியே!
ஆதியும் அந்தமும் இல்லா தொளிரும் எம் ஆரணங்கே!

(உ) சிவனது பாதியான தேவியே! கிளியே! பார்வதியே! ஆதி அந்தம் இல்லாதவளே! லாபகரமான உலகப் பொருள்களை விரும்பாத உள்ளத்து உணர்வுடன் உன்னை ஓதிப்பாடி உருகக் கடைக் கணித்தருள்.

(கு) ஊதியம்-லாபம்.

### 7. குறையுள யான் வினையை ஒழிப்பதெவ்வாறு?

எத்திக் கிலுமுன் இணையடி ஏத்தி இறைஞ்சுதற்குப்
பத்தியும் இல்லை, பரவசம் இல்லை, பதமலரைத்
துத்தியஞ் செய்ய மனமதும் இல்லை, தொடர்வினையை
எத்தகை யாலொழித் தின்புறு வேன்சொல் இளங்கிளியே!

(உ) எங்கு உன்னைக் கண்டாலும் உன் திருவடியை ஏத்திப் பணியும் பக்தி என்னிடத்து இல்லை; உன்னைக் கண்டு பரவசம் அடைகின்றேன் இல்லை; உன் பாத மலரைத் தோத்திரம் செய்ய மனமும் இல்லை; தேவியே!

என்னைத் தொடரும் வினையை நான் எவ்வண்ணம் ஒழிப்பேன் ? சொல்லியருளுக.

(கு) துத்தியம்-தோத்திரம்.

## 8. திருநாமங்களைக் கூற

ஏத்திடும் அன்பர் வினைபொடி செய்யும் இறைவனெங்கள்
மூர்த்தி மகிழும் முதல்வியே! முல்லை வனத்தவளே !
தீர்த்தமாம் உன்றன் திருப்பெயர் செப்பித் திருத்தமுறக்
காத்தருள் எங்கள் குலமுழு தாளும் கயற்கணியே !

(உ) எங்கள் குலமுழுதாளும் தேவியே ! போற்றும் அன்பர்களின் வினையைப் பொடி செய்யும் சிவனார் மகிழும் தேவியே ! திருமுல்லை வாயிலாய் ! பரிசுத்தமான உனது திருநாமங்களைக்கூறி நான் திருந்தும் படிக் காத்தருள் புரிக.

(கு) தீர்த்தம் - பரிசுத்தம். திருத்தம் - திருந்திய நிலை. கயற்கணி - மீன்போலும் கண்ணை உடையவள் ; மீனாட்சி.

## 9. ஈதற்குணம் பெற

ஐயை என் றேதி அலரிடும் அன்பர் அகந்தையெல்லாம்
நையவே செய்கின்ற நல்லுற வாகிய நாரணியே !
நொய்யிற் பிளவள வேனும் பகிர்கின்ற நுண்ணறிவை
உய்யும் படிதந் தருளுதி அம்மே ! உமையவளே !

(உ) அம்மை உமையே ! தேவீ என உன்னைத் துதித்துப் பூஇட்டுப் பூசிக்கும் அன்பர்களின் ஆணவத்தை ஒடுக்கி நன்மையைத் தரும் நாரணீ ! ஒரு நொய்யின் பிளவு அளவாவது இரப்பவர்க்கு ஈய

வேண்டும் என்னும் நற்புத்தியை நான் உய்யும்படி எனக்கு அருள்வாயாக.

(கு) ஐயை-ஆர்யை, மேலானவள்-பார்வதி. "நொய் யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்"—கந்தர் அலங் காரம், 18.

## 10. சிந்தையில் வந்து அமர்க

ஒப்புனக் கில்லா தொளிர்கின்ற சோதீ ! உறு துணையே !
மைப்படி கண்ணீ ! மலைதரு நிட்கள மா மணியே !
எய்ப்பினில் வைப்பாய் இலகும் உமையே! இளங்கொடியே !
செப்பருந் தேவீ ! என் சிந்தையில் வந்து சிறந்தருளே.

(உ) ஒப்பிலாத ஜோதியே! உற்ற துணையே! மை பூசிய கண்ணியே! இமயமலை ஈன்ற சுத்த ரத்தினமே! சேமப் பொருளே! சொல்லுதற்கரிய தேவீ ! என் சிந்தையிற் குடி கொள்வாயாக.

(கு) எய்ப்பினில் வைப்பு : இளைத்தபோது உதவ வைத்த பொருள். Reserve Fund; Savings Bank Amount; "காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க"— திருவாசகம், 3-105. "வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே"—ஷி, 6-39.

## 11. அபிராமிப் பட்டர்க்கு அருளியது

ஓ மெனும் மந்திரத் துள்ளே ஒளிரும் ஒளிவிளக்கே !
நாமெனும் ஆணவம் நண்ணு அபிராமிப் பட்டர்பொருட்
டாமெனப் பௌர்ணமி அன்றுறச் செய்தாய் குழையெறிந்தே
தேமெனும் இன்சொற் கிளியே ! குயிலே ! திரிபுரையே !

(உ) ஓம் என்னும் பிரணவ மந்திரத்துள் ஒளிரும் விளக்கே! ஆணவம் அற்ற அபிராமிப் பட்டரைக்

காப்பதற்கு வேண்டி உனது குழையை எறிந்து பூரண நிலவொளியைக் காட்டினாய்! இன்சொற் கிளியே! திரிபுரையே!

(கு) அபிராமிப் பட்டர் வரலாறு: இவர் மாயூரத்துக் கடுத்த திருக்கடவூரில் உள்ள தேவி 'அபிராமி அம்மை'யின் திருவருட் ப்ரசாதம் பெற்றவர். அவ்வூருக்குவந்த மன்னன் ஒருவன் இவரை 'இன்று என்ன திதி?' என்று கேட்கத் தேவியின் பேரொளியிற் சிந்தை வைத்திருந்த இவர் "இன்று பௌர்ணமி" என்று உரைத்தார். ஆனால் அன்று அமாவாசை; ஆதலால் யாவரும் இவரை ஏளனம் செய்தனர். அவர் தேவிபால் முறையிடத் தேவி தன் தாடங்கத்தை (குழையை) வானில் வீசப், பௌர்ணமி ஒளிபோல எங்கும் ஒளி பரக்கக் கண்டு மன்னன் முதல் யாவரும் வியந்து பட்டரைப் பெருமதிப்புடன் கொண்டாடினர் என்ப.

[தேவி அநுபூதி 25-ஆம் பாடலின் குறிப்புரையையும் பார்க்க.]

திரிபுரை-செய்யுள் 30, 52 குறிப்புரைகளைப் பார்க்க.

## 12. அன்பைப் பெற

ஔவியம் பேசி அலைப்புறு கின்றேன், அழல் வணர்தம்
சவ்வியம் வாழ்வோய்! சழக்குறு அன்பதைத் தந்துதவிக்
கொவ்வை நேர் செவ்வாய்க் குணவதி! வைணவி! கோமளமே!
இவ்வயின் என்னைப் புறக்கணி யாது நீ ஏன்றருளே.

(உ) சிவனது இடது பாகத்தில் வாழுந் தேவியே! கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயை உடைய குணவதியே! வைணவி என்னும் அழகியே! அழுக்

காருன பேச்சுக்களைப் பேசி நான் அலேகின்றேன். குற்றமற்ற அன்பை எனக்குத் தந்து உதவி, இங்கே என்னைக் கைவிடாமல் ஏற்றருள்க.

(கு) ஔவியம்-அழுக்காறு; பொறாமை. சவ்வியம்-இடதுபக்கம். சழக்கு-குற்றம், பொய். கொவ்வை-கோவைக்கனி.

## 13. துதி

கரும்பே ! கரும்பின் தெளிவே ! கனியே ! கடம்பு தரும்
அரும்பே அணியும் குழற்காடு கொண்ட அருளுருவே !
பெரும்பே றளிக்குநின் சீறடி ஏத்தாது பேதுறுமென்
இரும்பே அனைய மனத்தையீர் காந்தமாம் இன்னமுதே !

(உ) கரும்பே ! கரும்பின் ரசமே ! கடப்ப மலர் அணியும் கூந்தற் பாரத்தைக் கொண்டவளே ! பெறற்கரிய பேற்றை அளிக்கவல்ல உனது திருவடிகளை ஏத்தித் துதிக்காமல் வேதனைப் படுகின்ற என் மனதாகிய இரும்பை இழுக்கவல்ல காந்தமாய் விளங்கும் தேவியே !

(கு) குழற்காடு-கூந்தற் பாரம். ஈர்-இழுத்து வசீகரிக்கின்ற.

## 14. துதிக்கும்படியான தவப்பேறு பெற்றுளேன்

'உன்னற் கரியதாம் பேரருள் காட்டுமெம் உத்தமியே !
மன்னற் கொடியே ! மயிலே ! குயிலே ! மரகதமே !
தென்னற் குரிய அந் நாடாண்ட எங்கள் சிரோமணியே
என்னற்கு நானென்ன மாதவஞ் செய்தேன் இருநிலத்தே.

(உ) நினைத்தற்கும் அரியதான பேரருளைத் தரும் உத்தமியே ! நிலைபெற்ற நற்கொடியே ! மயிலே !

குயிலே! மரகதமே! பாண்டிநாட்டை ஆண்டருளிய சிரோமணியாம் மீனுட்சியே! என்றெல்லாம் உனைப் புகழ்ந்து கூற நான் என்ன மகாதவம் செய்தேனே இப் பூமியிலே.

(கு) உன்னற்கு-உன்னுதலுக்கு-நினைத்தற்கு. மன்னற்கொடி-மன்-நிலைபெற்ற. தென்னன்-பாண்டியன். என்னற்கு-என்று கூறிப் புகழ்வதற்கு.

## 15. பிணிகள் விலக

மணியே! மணியின் ஒளியே! ஒளியுள் வளருருவே!
பிணியே அறியா வரமருள் வாய், சிவன் பேணரவாம்
அணியே அணியாக் கொள் அம்பிகையே! அந்தம் ஆதியில்லாய்!
மணியேய் அழகெறி கண்டன் மகிழும் வயிணவியே!

(உ) சிவன் விரும்பி அணியும் பாம்பையே ஆபரணமாகக் கொண்ட அம்பிகையே! அந்தம் ஆதியில்லாதவளே! நீலகண்டராம் சிவபிரான் மகிழும் வைணவித் தேவியே! மணியே! மணியின் ஒளியே! ஒளியுள் விளங்கும் உருவே! நோய் என்பதே வராத வரத்தை எனக்குத் தந்தருளுக.

(கு) பேண்-விரும்பும். ஏய்-போன்ற.

## 16. ஆண்டருளுக

மகிடா சுரனைமுன் மர்த்தித்த மாதங்கி! மாலினியே!
நெகிழா உளத்தவர் நெஞ்சில் நிலைபெரு நீதியளே!
அகியா பரணத் தகிலாண்ட நாயகீ! ஆண்டருள்வாய்
முகிலார் பொழிற்றிரு முல்லை வனமமர் மொய்குழலே!

(உ) மகிஷாசுரனைச் சங்கரித்த தேவியே! கசியாத உள்ளத்தவர்களின் நெஞ்சிலே நிலைபெற்றிராத நீதி

வாய்ந்தவளே! பாம்பாபரணம் கொண்டவளே! திருமுல்லை வாயிலில் வீற்றிருப்பவளே! என்னை ஆண்டருளுக.

(கு) மர்த்தித்த-கலக்கி அடித்த. அகி-பாம்பு. அகிலாண்ட நாயகி-திரு ஆனைக்காத் தலத்துத் தேவி. மகிஷாசுரன்-இந்த அசுரன் பல உருவம் எடுத்துத் தேவியுடன் போர் புரிந்தவன். மகிஷ (எருமை) உருவுடன் இவன் போர் புரியும்போது தேவி இவனைச் சங்கரித்தாள்.

## 17. தேவியின் நுதல் அழகு

உலகம் புரக்கும் திருவுடை யாளே! உமையவளே!
இலகும் பனிச் சடை ஏய்ந்தஎம் ஈசற் கினியவளே!
திலகம் இலகுன் நுதலெழில் கண்ட திருட்டிகொண்டு
கலகம் செறிபொருள் ஒன்றையும் காணேன் கனவினுமே.

(உ) உலகத்தைக் காத்தளிக்கும் பெருமாட்டீ! சிவபிராற்கு இனியவளே! திலகம் விளங்கும் உன் நெற்றியின் அழகைக் கண்ட கண்கள் கொண்டு மனக் கலக்கம் தரும் உலகப்பொருள் எதையும் நான் கனவிலும் பார்க்கமாட்டேன்.

(கு) திருட்டி - திருஷ்டி; கண்.

## 18. கவிசொலும் பேற்றை அருளுக

சொல்லும் பொருளுமென் உள்ளத்தில் ஊற்றெனத் தோன்றுதற்கே
அல்லும் பகலும் அருளோ டமர்ந்திவ் வருளில் நெஞ்சக்
கல்லும் கரையக் கவிசொலும் பேற்றைக் கனிந்தருள்வாய்
கொல்லும் விடமுண்ட கண்டற் குகந்த குணவதியே!

(உ) விஷத்தை உண்ட சிவபிராற்கு இனியவளே! நல்ல சொல்லும், பொருளும் என் உள்ளத்தே ஊற்றுப்

போல எழ நீ அருளுடன் அவ்வுள்ளத்தில் அமர்ந்து கல்லும் கரையும் படியான உருக்கமுள்ள பாடல்களைப் பாடவல்ல பேற்றை என்மீது கருணை வைத்து அருளுக.

(கு) அருளில் நெஞ்சக் கல்-அருள் (கருணை) இல்லாத கல்லொத்த நெஞ்சம்.

## 19. தேவியின் தவ வலிமை

**வா**ணுதற் கண்ணீ ! வராகீ ! வயிரவீ ! வையமுண்ட
வேணுகா னத்தன் மகிழ்கின்ற தங்காயவ் வேளையன்று
தாணு எரித்தபின் தையலுன் நல்ல தவ வலிமை
காணுதற் கெட்டானைக் கிட்டே அழைத்தது காண்பதற்கே.

(உ) ஒளிவீசும் நெற்றியிற் கண் கொண்ட தேவியே ! உலகத்தை உண்டவரும், புல்லாங்குழல் வாசிப்பவருமான திருமால் மகிழும் தங்கையே ! மன்மதனைச் சிவபிரான் எரித்த பின்பு, நீ (பார்வதி என்னும் பெயருடன் இமயமலையிற்) கொண்ட தவத்தின் சக்தி-காணுதற்கரிய சிவபிரானை உன் அருகே நீ காண இழுத்துவிட்டது.

(கு) வேணுகானம்-புல்லாங்குழலின் இசை. வேணு மூங்கில். வேள்-காமவேள்-மன்மதன். தாணு-நிலை பெற்ற சிவன். பார்வதியின் தவ வலிமையைக் காணச் சிவபிரான் கிழவேதியனாய்ச் சென்றார். (கந்த புராணம்-தவங்காண்படலங் காண்க.)

## 20. அருளைப் பெற

**வி**னைப் போகம் கொண்ட என் வாழ்வினில் உன்னை விரும்பி என்று
நினைப்பேனோ அம்மணி ! நின்னருள் கூட நினைந்தருள்வாய்
உனைப்போது கொண்டே ஒருபோது பூசித் தொழுகலில்லை
மனைப்பாது காவலில் என் பொழு தெல்லாம் மடங்கியதே.

(உ) அம்மணீ ! உன்னை மலர்கொண்டு ஒரு வேளை கூடப் பூசிக்கும் ஒழுக்கம் இல்லாதவன் நான். இல்லறச் சிக்கலிலேயே என் பொழுதெல்லாம் அழிகின்றது. வினையின் பயனை அநுபவிக்கும் நான் உன்னை விரும்பி என்று தியானிப்பேனோ, அறியேன். நீ தான் அருள வேண்டும்.

(கு) போது-மலர். ஒரு போது-ஒரு வேளைகூட.

## 21. நீயே துணை

**தா**யே ! நின் பாத மலரினில் வீழ்ந்து சதாதுதியாப்
பேயேன் எனதிடம் பல்குறை உண்டு, பிழையிற் பட்ட
நாயேன் எவ் வண்ணமிங் குய்வேன் உனதருள் நாட்டமின்றேல்
நீயே துணையன்றி வேறோர் துணையிலை நின்மலியே !

(உ) தாயே ! நின்மலி ! உன் திருவடியில் விழுந்து சதா உனைத் துதிக்காத பேயன் நான்; என்னிடம் பல குறைகள் உண்டு; உனது அருட்கண் பார்வையில்லாவிட்டால் எனக்குப் பிழைக்கும் வழியே இல்லை; உன்னை அன்றி வேறு ஒரு துணையும் எனக்கு இல்லை.

(கு) பல்குறை-பலகுறைகள்.

### 22. உனை நினையாப் பேதையர் ஏன் பிறந்தார்?

நூற்கே இணையிடைப் பாவாய்! உனைநினை நோன்பதனை
ஏற்காத பேதையர் ஏன் பிறந் தாரிவ் விரு நிலத்தில்
வேற்கா டருகுறு முல்லைத் தலத்துக்கு மேல் வடக்கில்
நாற்காத தூரத் தணியர சைப்பெற்ற நாரணியே!

(உ) திருவேற்காடு என்னும் ஸ்தலத்துக்கு அருகில் உள்ள திருமுல்லை வாயிலுக்கு வடமேற்கு நாற்பது மைல் தூரத்தில் உள்ள திருத்தணிகைப் பெருமானும் முருகவேளைப் பெற்ற தேவியே! நூல்போன்ற மெல்லிய இடையை உடையவளே! உன்னை நினைந்து போற்றாத பேதையர்கள் ஏன் இவ்வுலகிற் பிறந்துள்ளார்கள்?

(கு) நூற்கே - நூலுக்கே. நாற்காத தூரம்-நாலு காத தூரம்; 40 மைல். தணி யரசு-தணிகை முருகர்.

### 23. உனைப் பூசியாத யான் உய்தல் எவ்வாறு?

கண்போது கொண்டரற் பூசித்துச் சக்கரம் கைக்கடைந்த
பண்பேறு பத்தித் திருவினன் தங்காய்! பலபொழுதும்
கண்போ டுனை ஏத்தி நாவாற் பணி செய்துன் நற்பதத்தில்
தண்போ திட அறி யேனெங்ஙன் உய்வேன் தரணியிலே.

(உ) தனது கண்ணையே பறித்து மலராக இட்டுச் சிவனைப் பூசித்துச் சக்கரம் பெற்ற பத்தியாளராம் திருமாலின் தங்கையே! சதா உனைத் துதித்து உனது திருவடியில் மலரிட்டுப் பூசித்தலை அறியாத நான் இவ்வுலகில் எப்படிப் பிழைப்பேன்?

(கு) திருவினன்-திருமால். திருவீழிமிழலை என்னும் தலத்தில் ஆயிரம் பூக்கொண்டு திருமால் சிவனை அருச்சிக்க, ஒருநாள் ஒரு பூ குறையத் திருமால் தனது

கண்ணையே பறித்துப் பூசித்துத் தாம்பெற விரும்பிய சக்ராயுதத்தைப் பெற்றார் என்பது வரலாறு.

"நீற்றினை நிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக் கொண்டு, ஏற்றுழி ஒருநாள் ஒன்று குறையக் கண் நிறைய இட்ட, ஆற்றலுக் காழி நல்கி அவன்கொணர்ந் திழிச்சும் கோயில், வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே" —அப்பர் 4-64-8.

தண் போது-குளிர்ந்த மலர்.

## 24. தேவியின் பிரதான தலங்கள்

**கஞ்சியிற் காமாட்சி யாகக் களிப்பாய்; மதுரையிலே**
**வஞ்சி நீ மீனாட்சி என்றே வயங்குவாய்; காசியிலே**
**அஞ்சொல் உமைநீ விசாலாட்சி யாக அருள்புரிவாய்;**
**செஞ்சொலார் நாகையில் நீலாட்சி என்றே திகழுவையே.**

(உ) காஞ்சியிற் காமாட்சி என்னும் பெயருடனும், மதுரையில் மீனாட்சி என்னும் பெயருடனும், காசியில் விசாலாட்சி என்னும் பெயருடனும், நாகப் பட்டினத்தில் நீலாயதாட்சி என்னும் பெயருடனும் தேவி நீ விளங்கி வீற்றிருந்து அருள்புரிகின்றாய்.

(கு) கஞ்சி—காஞ்சீபுரம். கா-என்னும் சரஸ்வதி யையும், மா-என்னும் லக்ஷ்மியையும் தனது கண்களாக உடையவள் காமாட்சி. தேவி அநுபூதி 15-ஆம் பாட லின் குறிப்பைப் பார்க்க. மீனாட்சி - மீன்போன்ற கண் களையுடையவள்; தமிழில் அங்கயற்கண்ணி. விசா லாட்சி - விசாலமான கண்களையுடையவள். நீலோற் பலம் அனைய கண்களைக் கொண்டவள் - நீலாயதாட்சி.

## 25. உபதேசம் பெற

இடருற்று வீழினும் ஏந்திழை யேநான் இருணெறியிற்
படருற்று வீழா வகையுப தேசம் பகருதி நீ
குடருற்ற வேதனை அப்பர்க் கொழித்தவர் கொஞ்சுகின்ற
சுடருற்ற பொற்சோதி மேனிப் பரையே ! சுமங்கலியே !

(உ) சூலை நோயால் குடல் வேதனையை அடைந்த அப்பருக்கு (திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு) அந் நோயை ஒழித்த சிவபெருமான் கொஞ்சிக் குலவும் ஜோதி உமையே ! நித்ய கல்யாணீ ! என் கஷ்ட காலத்திலும் நான் தவருன இருட்டு வழியிற் செல்லாத வண்ணம் எனக்கு உபதேசம் செய்தருள்க.

(கு) படருற்று - சென்று. படர்தல் - செல்லுதல். படருற்று - துன்புற்று எனலுமாம். ஜைன மதத்திற் சேர்ந்திருந்த அப்பருக்குச் சூலை நோயைச் சிவபிரான் ஏவ, அந்நோய் ஜைன குருமார்களால் தீர்க்க முடியாது போக, அப்பர் அம்மதத்தை விட்டுச் சைவநெறியை மேற்கொண்டவுடனே, அந்நோய் சிவபிரான் திரு அருளால் தீர்ந்து, அப்பர் அருள்நெறியிற் சேர்ந்து, இறைவனுக்குப் பாடல்களைப் பாடினுர். அப்பர் அருளிய பாக்கள் தேவாரத்தில் 4-5-6 திருமுறைகளாகும்.

## 26. தேவிபால் எல்லாம் உதிக்கும் ; ஒடுங்கும்

அளியார் கமலத்தில் வாழ்ஆ ரணங்கே ! அகிலமுநின்
ஒளியார் உளத்தில் உதித்தே ஒடுங்குமிவ் வுண்மையதை
எளியார் அறியுந் தரமோ உரைத்தி, எழிலரசீ !
வளியார் பொழில் முல்லை வாயிலில் வாழ்கின்ற வைணவியே !

(உ) தாமரையில் வாழும் தாயே! திருமுல்லை வாயில் வைணவித் தேவியே! சகல உலகும் உனது

உள்ளத்தில் உதித்து ஒடுங்குகின்ற உண்மை எளியர் அறியும் தரத்ததா - அன்று என்றபடி.

(கு) தேவிக்கும் தாமரை ஆசனம் உண்டு: "முக்கண்ணி....விரும்பும் வெண்தாமரை"-திருமந்திரம்-1067. "பத்மாஸனையை" - ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்-278. "அம்புயமேல் திருந்திய சுந்தரி" - அபிராமி அந்தாதி-5. "ஆடகத் தாமரை ஆரணங்கே" - ஷை 80. "அளியார் கமலத்தில் ஆரணங்கே, - ஷை 82. வளி காற்று.

## 27. பத்தி நிலை பெற

அள்ளிக் கொளத்தக்க அன்பே பெருகும் அழகுடையாய்!
உள்ளத்தின் உள்ளே உணர்பவர் உள்ளத் துறைகுவை நீ
பள்ளத்தில் வீழ்நீர் எனும்பத்தி நீர்மை பரிந்தளித்தி
தள்ளப் படாதிந்த விண்ணப்பம் தாயே! தயாநிதியே!

(உ) தாயே! அன்புநிறை அழகி! உன்னை உள்ளத்தில் உணர்பவர் தம் உள்ளத்தில் உறைபவள் நீ! பள்ளத்தில் விழும் நீரின் வேகத்துக்கு நிகரான பக்தி ஓட்டத்தை எனக்கு அன்புடன் அருளுக; இந்த என் விண்ணப்பத்தைத் தள்ளிவிடாதே.

(கு) பக்தி வேகத்தைப் 'பள்ளந்தாழ் உறுபுனலில் பதைத்துருகும்'; - என்றார் திருவாசகத்தில் 5-21. பக்தி நீர்மை - பக்திக்குணம்.

## 28. என் குறைகள் பல

**பத்தர்ப் பிரியையுன் பாத மலரைப் பணியகில்லேன்**
**நித்தத் துவத்தைப் பெறக்கற்றி லேன்யான் நியதியில்லேன்**
**நத்திப் பணிவார் தமையும் பணியேன், மெய்ஞ் ஞானியர்தம்**
**சித்தத் திருந்தொளிர் தேவி! இமயச் சிலைமகளே!**

(உ) ஞானியர் சித்தத்தில் விளங்குந் தேவியே! இமயமலை ஈன்ற நங்கையே! பக்தர்மீது பிரியம் உள்ளவளே! உன் பாதமலரைப் பணிகின்றேன் இல்லை; அழியா வரத்தைப் பெறவும் கற்றிலேன்; ஒழுக்கமும் இல்லை; உன்னை விரும்பிப் பணியும் அடியார்களையும் பணியேன்.

(கு) நியதி - ஒழுக்க விதி. நித்தத்துவம் - அழியாத பேறு.

## 29. பால் போன்ற வாக்கைப் பெற

**கா**லே யிலாதலர் கட்செவி யாமக் கணபணத்தின்
மேலே துயில் கொள்ளும் நாரணன் தங்கையே! மேலவர்தம்
பாலே விளங்கும் பரமன் சதாசிவன் பங்கினளே!
பாலே அனைய திருவாக் களித்தெனைப் பாலிப்பையே.

(உ) கால் இல்லாத பெரும்பாம்பாகிய ஆதிசேடன் மீது துயில்கொள்ளும் திருமாலின் தங்கையே! பெரியோரிடத்து விளங்கும் சிவனது பாகத்தில் இருப்பவளே! பால்போன்ற இனிய திருவாக்கை எனக்கு அளித்து என்னைக் காத்தருள்க.

(கு) "காலே இலாத கணபணம்" - கந்தரலங்காரம் 41. கணபணக்கட்செவி - கூட்டமான படங்களை (ஆயிரம் படங்களை)க் கொண்ட பாம்பு - ஆதிசேஷன்.

## 30. தியானிக்க

**கொ**ந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றில் நிற்கும்
கந்தா எனவே தியானிக்கு மாறு கனிந்தருள்வாய்
நொந்தே உனைஅடைந் தார்வினை தீர்ப்பாய் நொடிப்பொழுதில்
சிந்தா மணியே! திருமுல்லை வாயிற் றிரிபுரையே.

(உ) சிந்தாமணியாம் தேவியே! மனம் நொந்து உன்னைச் சரண் அடைந்தவர்களின் வினைகளை ஒரு நொடிப்பொழுதில் தீர்ப்பவள் நீ! 'கடப்ப மரம் சூழ்ந்த திருத்தணிகைக் கந்தா' என்று நான் தியானிக்கும் வண்ணம் என்பாற் கருணை வைத்து அருளுக.

(கு) "கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றில் நிற்கும் கந்தா"-கந்தர் அலங்காரம் 79. சிந்தாமணி - விரும்பிய அனைத்தையும் கொடுக்க வல்ல தெய்வமணி. கொந்து - பூங்கொத்து. திரிபுரை- சந்திர கண்டம், சூரிய கண்டம், அக்கினி கண்டம் என்னும் முப்பிரிவையுடைய சக்கரத்துக்குத் தலைவி. (அபிராமி அந்தாதி 5-உரை). செய்யுள் 52-இன் குறிப்புரையையும் பார்க்க.

### 31. சம்பந்தருக்கு அருளியது

**நா**ரணன் தங்கையே! நான்முகீ! ஈஸ்வரீ! நால்வர் புகழ்
காரணன் பங்குறை நங்காய்! கவுணியன் காணவந்த
பூரணி! பொற்றாளம் ஓசை பெறச்செய் புதுமையளே!
ஆரணி! பிங்கலை! மங்கலை! சுந்தரி! அந்தரியே!

(உ) திருமாலின் தங்கையே! அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரால் புகழ்ந்து பாடப்பெற்ற சிவனது பாகத்தில் உறைபவளே! கவுணிய கோத்திரத்துச் சம்பந்தப் பெருமானின் முன் தோன்றி அவர் பெற்ற பொற்றாளத்துக்கு ஓசை கொடுத்த பெருமாட்டியே!

(கு) கவுணியன் - கவுணிய கோத்திரத்து ஞான சம்பந்தர்.

சீகாழிக்கு அடுத்த கோலக்கா என்னும் தலத்தில் ஞானசம்பந்தருக்குச் சிவபிரான் பொன்தாளம் கொடுத்

தார். அந்தப் பொற்றுளத்துக்கு அத் தலத்துத் தேவி ஓசை கொடுத்தாள். அதனுல் அந்தத் தேவிக்கு 'ஓசை கொடுத்த நாயகி' என்று பெயர். கோலக்கா - 'திருத் தாளமுடையார் கோயில்' என வழங்குகிறது. சீகாழி யிலிருந்து ½ மைல் தூரத்தில் உள்ளது.

நான்முகி - சுவாதிஷ்டானத்தில் ஆறிதழ்த் தாமரை யில் காகினி என்னும் திருநாமத்துடன் பொன்னிறம் பூண்டு நான்கு முகங்களோடு அம்பிகை வீற்றிருக் கின்றுள். அம்பிகை பிரமா இடத்திருந்து சிருட்டித் தொழில் நடத்துவதால் நான்முகி எனப்படுவாள். "அபிராமிஅந்தாதி 50 உரை. "சதுர்வக்த்ரமனே ஹராயை" (லலிதா - 505). "பிராம்மி" - பிரம்ம சத்தி. பிங்கலை - பொன்னிறமுள்ள காகினி — அபிராமி அந்தாதி, 21.

## 32. திருவடியைச் சிந்திக்க

வஞ்சக நெஞ்சினர் காணற் கரிய வயிணவியே !
பஞ்சணை நின்மெல் லடியிணை பொல்லாத பாவியென் றன்
நெஞ்சணை யாதோ ! நினைந்து நினைந்து நெகிழுவன் யான்
அஞ்சலென் றோர்சொல் அருளுவை யேலஃ ததிசயமே.

(உ) வஞ்சக நெஞ்சினர் காணற் கரியவளே! உன் திருவடியை யான் தியானிக்க மாட்டேனே என்று என் உள்ளம் உருகுகின்றது. அஞ்சாதே என்று நீ அருள் செய்தால் அது அதிசயமே.

(கு) திருமாலிடத்திருந்து திதி (காத்தல்) ஆகிய தொழிலை நடத்துவதால் அம்பிகையை 'நாராயணி' என்பர். விஷ்ணு சக்தியைக் கொண்டதால் அம்பிகையை 'வைஷ்ணவி' என்பர். (லலிதா - 892)

## 33. எனை ஆண்ட பெருமையே அற்புதம்

**எ**த்தனை அன்பர் துதித்து வணங்கும் எழிலுமை நீ
எத்தனை யோகியர் சித்தர்கள் ஏத்தும் எழிற்கிளி நீ
எத்தனை ஞானியர் சித்தத் தில்கி இருப்பவள் நீ
பித்தனை ஆண்ட பெருமையை என்னென்று பேசுவனே.

(உ) கணக்கிலாத அன்பர்களும், சித்தர்களும், யோகியர்களும், ஞானியர்களும் போற்றும் பெருமையை உடைய தேவியே! நீ பித்தனாகிய என்னை ஆட்கொண்ட பெருமையை நான் என்னென்று பேசி வியப்பேன்!

## 34. இரங்கி யருள்

**பொ**ன்மேனி கொண்ட புராரிதன் நாயகி! பூரணி உன்
தன்மேனிப் பாம்பின் தவமு மிலாஇத் தனியனெஞ்சக்
கன்மேல் நினது மலரடி எங்ஙன் கவினுறும், நீ
என்மே லிரங்கா விடிலென் கதிதான் அதோகதியே.

(உ) பொன்மேனிச் சிவபிரானது நாயகியே! உன் மேனிமேற் கிடக்கும் பாக்கியத்தைப் பெற்ற பாம்பு செய்த தவமும் இலாத தனியன் நான். என் நெஞ்ச மாகிய கல்லின் மீது உன் திருவடித் தாமரை எப்படி மலர்ந்து அழகு தரமுடியும்? தேவி! நீ என்மீது இரக்கம் கொள்ளாவிட்டால் என்கதி அதோகதிதான்.

(கு) 'திணியான மனோசிலை மீதுனதாள் அணியார் அரவிந்தம் அரும்புமதோ' - எனவரும் கந்தரநுபூதி 6 - இன் கருத்தது 3-ஆம் அடி.

## 35. யான் பெற்ற பேறு பெரிது

கண்டதும் எங்கும் இலாததோர் இன்பம் கதித்தெழவே
கொண்டதும் என்னையி: தெல்லாம் உனதருள்! கோமளம்! நீ
விண்டதும் மோன முனிவர்க்கும் எட்டாத மெய்ப்பொருள், நான்
உண்டதும் ஞான அமுத ரசத்தை, உமையவளே !

(உ) தேவி ! நான் உன்னைத் தரிசித்ததும், என்னை நீ எங்கும் இலாத இன்பத்தைத் தந்து ஆட்கொண்டதும் உனது திருவருட் கருணைதான் ; நீ வாய் திறந்து எனக்கு உபதேசித்தது மோனநிலையில் உள்ள முனிவர்களுக்கும் எட்டுதற்கரிய மெய்ப்பொருள் தான் ; அதனால் நான் அடைந்து அநுபவித்தது ஞான அமுத ரசமே தான்.

(கு) " எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா(க)" —திருவாசகம் 7-17.

## 36. என் வினையைச் சிந்துவித்தாய்

சந்தனக் காப்பிட்டுன் மேனி அழகைத் தரிசித்தபின்
எந்த அழகையும் பார்ப்பதற் கொவ்வேன் எழிற்கிளி! என்
சிந்தனை நின்றனக் காக்கினன், தாக்குமென் தீயவினை
சிந்திடச் செய்தனை, எல்லாம் உனது திருவருளே.

(உ) தேவீ ! சந்தனக் காப்பிட்ட உனது திருமேனி அழகை நான் தரிசித்த பின்னர் வேறு எந்த அழகையும் பார்ப்பதற்கு என்மனம் இடம் கொடுக்கவில்லை. என் சிந்தனையை உனக்கே சமர்ப்பித்தேன். எனது பொல்லா வினைகளை நீ போக்கினை ; இவையெல்லாம் உனது திருவருட் கருணையே.

## 37. திருவடியைப் பற்ற

பற்றினைப் போக்கியுன் சேவடி பற்றப் பணித்தருள்வாய்
புற்றிடங் கொண்டார் மகிழ்ந்து தழுவும் புராதனியே!
உற்றுனைப் போற்றும் உணர்விலா என்னை உதறிவிட்டால்
மற்றெனக் கார்துணை தாயே! திரு முல்லை வைணவியே!

(உ) திருமுல்லை வாயில்வாழ் வைணவித்தாயே! உலகப் பற்றுகளைப் போக்கி உன் திருவடியைப் பற்றும் பற்றை எனக்கு உதவி புரிந்தருள். சிவபிரான் மகிழ்ந்து தழுவும் தேவியே! உன்னைப் போற்ற வேண்டும் என்னும் உணர்ச்சியிலாத என்னை நீ உதறித் தள்ளிவிட்டால், நீ அன்றி எனக்கு வேறுயார் தான் துணை? (ஒருவரும் இல்லை என்றபடி)

(கு) 'புற்றிடங் கொண்டார்' - வன்மீகநாதர் - திருவாரூர்ச் சிவபிரான் திருநாமம்.

## 38. சுந்தரர்க்கு அருளியது

ஏத்தா திருந்தறி யாத அந் நம்பி இழந்த கண்ணன்
கூத்தா வழிகாட் டெனவேண்ட மின்னற் கொடிவழியாய்
ஆத்தாநீ அன்றெளி காட்டினை அன்னார் வழி நடக்கக்
காத்தாள் பவர் நீ அலாது பிறரில்லை கற்பகமே!

(உ) சதா போற்றுதலையே தமது ஒழுக்கமாகக் கொண்ட அந்தப் பெரியார் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமது கண் பார்வையை இழந்து,'கூத்தப் பெருமானே! சிவனே! எனக்கு வழிகாட்டு' என்று வேண்டின சமயத்தில் தாயே! நீ அவர்மீது இரங்கி அவர் வழிதெரிந்து நடக்க மின்னற் கொடியாய் வழிகாட்டி உதவினை; நீ அன்றி காத்து ஆளும் கருணை உள்ளத்தவர் வேறு யாரும் இலர்.

(கு) நம்பி - சுந்தரமூர்த்தி சுவாமிகள் ; திருஒற்றியூரில் தாம் மணந்த சங்கிலி நாச்சியாரை விட்டுப் பிரியேன் என்று சிவசந்நிதியிற் செய்த சத்தியத்தைக் கைவிட்டுச் சுந்தரர் திருஒற்றியூர் எல்லையைத் தாண்டினவுடன் அவருடைய இரண்டு கண் பார்வையும் மறைந்தது. திருவெண்பாக்கத்தில் (இப்போது பூண்டி ரிஸர்வாயர்க் கீழ் மறைந்துள்ள ஸ்தலம்) சுவாமியிடம் சுந்தரர் முறையிட அவர் ஊன்றுகோல் மாத்திரம் ஒன்று உதவினர். அத்தலத்துத் தேவி மின்னற்கொடியாய்த் தோன்றித் தோன்றிச் சுடர் வீசிச் சுந்தரருக்குக் காஞ்சிபுரம் வரைக்கும் வழிகாண்பித்தனள் என்பது வரலாறு ; ஆதலால் தேவிக்கு ' மின்னல் ஒளியம்மை ' என்று பெயர்.

## 39. திருவடியைப் பாட

நெல்லைப் பதியினில் வாழ்சிவை யே ! புது நித்திலமே !
கல்லைப் புரையுமென் நெஞ்சிலும் வந்து களித்தனையே
தொல்லைப் பிறவியாம் அல்லலை நீக்கி நீ சுத்த மனச்
சொல்லை யளித்துன் அடிபாட வைத்திடு சுந்தரியே.

(உ) திருநெல்வேலித் தலத்தில் வாழும் அழகீ! புதுமுத்தே! கல்லை நிகர்க்கும் என் நெஞ்சிலும் நீ இருப்பிடம் கொண்டு மகிழ்கின்றாய்! இந்தப் பழமையான பிறவி என்கின்ற துன்பத்தை ஒழித்துச் சுத்தமான மனத்திற் சொற்களைத் தோற்றுவித்து உன் திருவடியைப் பாடும் பேற்றினைத் தந்தருள்வாயாக.

(கு) திருநெல்வேலித் தேவிபெயர் - காந்திமதி - வடிவுடையம்மை. ' கல்லைப்புரையுமென் நெஞ்சு ' - ' நெஞ்சக் கனகல் ' - திணியான மனோசிலை ' எனவரும் கந்தரநுபூதியில் ; ' தொல்லையிரும்பிறவி ' - திருவாசகச் சிறப்புச் செய்யுள்.

## 40. தேவியை வணங்குவோர்

செந்தா மரைவளர் தேவி, சரஸ்வதி தேவி, சசி.
வந்தார்வ மோடுனே வந்திப்பர் நித்தம் வயிணவியே !
திந்தா திமியென வேநட்டம் ஆடி தினங்களிக்க
முந்தா தரவில் அவர்க்குமுத் தந்தரும் மொய்குழலே!

(உ) வயிணவித் தேவியே ! திந்தாதிமி எனத் திருநட்டம் புரியும் சிவபிரான் நித்தம் மகிழும்படி அன்புடன் அவருக்கு முத்தம் தருபவளே ! செந்தாமரையில் வீற்றிருக்கும் லக்ஷ்மி, சரஸ்வதி, இந்திராணி ஆகிய மூவரும் நாள்தோறும் வந்து ஆசையுடன் உன்னைப் போற்றி வணங்குவர்.

(கு) சசி - இந்திரன் மனைவி ; இந்திராணி. நட்டம் ஆடி - நடனம் ஆடுபவர்.

## 41. தேவி காஞ்சியில் பூசித்தது

உள்ளம் களிக்கத் திருவளர் காஞ்சியில் உற்றுமை நீ
பள்ளம் படரும் புனலெனப் பாய்கின்ற பத்திசெயக்
கள்ளம் படக்கோ வணமறை யந்தக் கணவரவர்
வெள்ளம் அனுப்ப அவரைத் தழுவி விழைந்தனையே.

(உ) தேவி ! மிக மனமகிழ்ச்சியோடு பள்ளத்திற் பாயும் வெள்ளநீர் போலப் பாய்ந்த பக்தியுடன் நீ காஞ்சித் தலத்திற் சிவபிரானைப் பூசிக்க, (அமர்நீதி நாயனாரைச் சோதிக்கக்) கோவணத்தை மறைத்த அந்தப் பெருமானார் உன்னைச் சோதிக்க வேண்டி வெள்ளப் பெருக்கை அனுப்ப நீ அவரைத் தழுவி மகிழ்ந்தாய்.

(கு) தேவி காஞ்சியில் கம்பை நதிக்கரையிற் சிவபெருமானைப் பூசித்திருந்தபொழுது தேவியின் அன்பைச் சோதிக்கப் பெருமானார் கம்பைநதி பெருகி

வரப் பணித்தார். வெள்ளத்தைக் கண்ட தேவி வெள்ளம் எம்பெருமான்மீது வந்து விடுமே என்று மனம் கலங்கிப் பெருமானைத் தன் இருகைகளாலும் இறுகக் கட்டித் தழுவிக்கொண்டாள். தேவியின் அன்பைக் கண்ட பெருமானார் தேவியின் செங்கை வளைத் தழும்பையும், கொங்கைத் தழும்பையும் தமது மேனியிற் கொண்டு குழைந்து விளங்கினார் - என்பது காஞ்சிப் புராண வரலாறு - தழுவக் குழைந்த படலம்.

திருநல்லூர் என்னும் தலத்தில் அடியார்க்கு ஆடை முதலிய அளித்து வந்த வணிக அன்பர் "அமர்நீதி" என்பவரிடம், அவர் பக்தியை உலகின ருக்கு அறிவிக்க வேண்டிச் சிவபிரான் ஒரு அந்தண பிரமசாரியாக வந்து "நாம் நீராடி வரச் செல்கின்றோம். இந்தத் தண்டிலே இரு கோவணங்கள் இருக்கின்றன. மழை வந்தால் இரண்டும் நனைந்துவிடும். ஒன்றை உம்மிடம் தருகின்றோம். நாம் திரும்பி வந்து கேட்கும் போது கொடுக்க வேண்டும்" என்றார். அமர் நீதி யாரும் சரியென்று வாங்கி அதைப் பத்திரமாக வைத் திருந்தார். சிறிது நேரம் கழித்து அவ்வந்தணர் வந்து "மழையில் நனைந்து விட்டோம்; தண்டிலிருந்த ஒரு கோவணமும் நனைந்துவிட்டது. உம்மிடம் கொடுத் ததை விரைவிற் கொண்டு வாரும்" என்றார். ஆனால் பெருமானார் அக்கோவணத்தை மறைத்துவிட்டார். அமர்நீதியார் தேடித்தேடிக் காணாது வருந்தி அந்தண ரிடம் 'கோவணம் காணோமே' என வருந்தினர். அந்த ணர் கோபித்து, 'இத்தண்டில் உள்ள ஈரக்கோவணம் அதன் ஜதை; இதன் எடைக்கு இணையான கோவணம் கொடு' என்றார். அமர்நீதியார் தம்மிடம் இருந்த எவ்வளவோ பட்டாடைகளைத் தராசில் வைத்தும் அந்தக் கோவண எடைக்குச் சரியாகவில்லை. தம்மிடம்

இருந்த சகல பொருள்களை வைத்தும் எடை சரியாக வில்லை. ஈற்றில் வேறு பொருளில்லாது அந்தணரின் உத்தரவு பெற்றுத் தானும், தன் மனைவியும், தன் சிறுவனும் தராசுத் தட்டில் அஞ்செழுத்தை ஓதி இறைவரை வணங்கி ஏறினர். தட்டு சமமாக நின்றது. அந்தத் தட்டே விமானமாக, வணிகர் தம் குடும்பத்துடன் கயிலையை அடைந்தனர். (பெரிய புராணம்).

## 42. ஆண்டருள்

பஞ்சபூ தத்தமை சட்டையா லிங்கு நான் பாடுபட்டுத்
தஞ்சமொன் றின்றித் தவித்தேன், உனையே சரணடைந்தேன்
அஞ்சலென் றென்னை நீ ஆண்டருளாயோ அருளுருவே !
கஞ்சநே ரொத்த அடியிணை கொண்ட கனங்குழையே !

(உ) தாமரை போன்ற திருவடியை உடைய தேவியே! பஞ்ச பூதத்தாலாய இந்த உடற்சுமையால் நான் புகலிடமின்றித் தவிக்கின்றேன். உன்னைச் சரணடைந்தேன். அஞ்சாதே எனக்கூறி என்னை ஆண்டருள்க.

(கு) பஞ்சபூதம்:—மண், நீர், தீ, காற்று, ஆகாசம். கஞ்சம்-தாமரை.

## 43. காயத்தைக் கோயிலாக் கொண்டது

காயமே பொன்னெடுங் கோயிலாக் கண்டாய் என உரைத்த
நேயரே போலெனைக் கொண்டுநீ ஆட்கொண்ட நேர்மை என்னே !
மாயமோ தேர்ந்திலன் முன்செய்த பாக்கிய வாழ்விதுவோ !
தூயமே னிச்சிவ ஜோதி யிடங்கொண்ட தூமணியே !

(உ) சிவபிரானது இடது பாகத்தில் விளங்கும் தேவியே! 'எமது உடலையே பொற்கோயிலாகக்

கொண்டாய்' என உரைத்த அன்பரைப் போல என்னையும் மதித்து நீ ஆட்கொண்டது என்ன மாயமோ ? அல்லது நான் முன் செய்த பாக்கியமோ ? (அறிகிலேன் என்றபடி)

(கு) நேயர்-மாணிக்கவாசகர்; "புன்புலால் யாக்கை புரை புரைகனியப் பொன்னெடுங்கோயிலாப் புகுந்தென் என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே '
—திருவாசகம். 37-10.

## 44. தேவியின் திரு அருட் சிறப்பு

ஆருகக் கண்ணீர் பெருக அழுதுன்றன் ஆரருளைப்
பேருகப் பெற்று மகிழ்ந்துனைப் பேசப், பிணிவினைகள்
நீருகு மென்பது நிச்சயம் நிச்சயம் நிச்சயமே
ஆரு தரத்தின் முடிவில் விளங்குமெம் ஆரணங்கே !

(உ) ஆறு ஆதாரங்களின் முடிவில் விளங்கும் தேவியே ! கண்ணீர் பெருக அழுது உனது திரு அருளைப் பேசப் பெற்ருல் பிணிவினைகள் நிச்சயமாக நீருகி அழியும்.

(கு) ஆறு ஆதாரம்; 1. மூலாதாரம்-(கணபதி ஸ்தானம்). 2. சுவாதிஷ்டானம் (பிரமா - சரஸ்வதி ஸ்தானம்) (3) மணிபூரகம் (விஷ்ணு-லக்ஷ்மிஸ்தானம்). 4. அனுகதம் (ருத்ரன் - தேவி ஸ்தானம்) 5. விசுத்தி (மகேசுரன்-மகேசுரி ஸ்தானம்) 6. ஆக்ஞை (சதாசிவம்-மனோன்மணி ஸ்தானம்)

## 45. கடையேற

**வி**டையேறும் வித்தகன், வெண்காட் டுறைபவன், வேலர் பிதா
நடையேறு கொண்டவன் பாலமர் நாயகீ! நற்றுணையே!
மடையேறு வாளைகள் பாய்முல்லை வாயில் வயிணவி நான்
கடையேற ஓர்சொல் கழறுதி என்னிரு கண்மணியே!

(உ) ரிஷப வாகனத்தன், திருவெண் காட்டில் உறைபவன், முருகவேளின் பிதா, ஏறு போன்ற பீடுடைய நடையை உடையவன் ஆகிய சிவனது தேவியே! திருமுல்லைவாயிலில் வாழும் வைணவித் தேவியே! நான் கடைத்தேற ஒரு சொல் உரைப்பாயாக, என் கண்மணியே!

(கு) "நடை ஏறு கொண்டவன்"—ஏறு போன்ற நடை உத்தம ஆண்களுக்கு இருக்கும். "விடையார் நடையொன் றுடையான்" — சம்பந்தர் 2-62-5. "வெள்ளை ஏற்றின் நடையானை"—அப்பர் 6-20-2. "ஏறு போற் பீடுநடை"—திருக்குறள் 59. "மடையேறு வாளைகள்"—'மடையில் வாளைபாய' சம்பந்தர் 1-23-1.

## 46. துதி

**ஆ**ரணி அம்பை அபிராமி அந்தரி ஆரணங்கே!
காரணி கௌரி குமரி குணவதி காளகண்டி!
பூரணி பார்ப்பதி அம்மை புராணி புதியவளே!
நாரணி நிட்களி நித்யகல் யாணி நவமணியே!

(உ) இதன் பொருள் வெளிப்படை.

(கு) புதியவளே—"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"—திருவாசகம் 7-8.

## 47. ஆண்டருள

**வி**ழிக்கே அருள்சேர் அபிராம வல்லியே! வேதமுறை
வழிக்கே எனைவிடுத் தாண்டுகொள் வாயவ் வழியைவிட்டுப்
பழிக்கே உழன்றிடர் கொள்ளச் செயேல் எனைப், பண்மொழி ! நின்
மொழிக்கே உருகிடும் மேலவர் எண்ணம் முடிப்பவளே !

(உ) அருட்கண்ணை யுடையவளே ! உன்திருவாய் மொழியைக் கேட்க உருகிடும் பெரியவர்களின் எண்ணங்களை முடித்து வைப்பவளே ! என்னை வேதநெறியிற் செல்லவிடு. அந்த நன்னெறியை விட்டுப் பழிக்கு ஆளாகப் புன்னெறியில் வேதனைப்படத் திரிய விடாதே ! தாயே !

(கு) "புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம், நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி, என்னையும் அடிய ணுக்கி இருவினை நீக்கி ஆண்ட, பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி" –கந்த புராணம், 6-24-262.

உழன்று - திரிந்து; விழிக்கே அருள்சேர் — "பொங்கும் அருட்கருணை விழி" — தணிகைப் புராணம் — குமரேச-45. பண்மொழி-தேவியின் மொழி பண் (இன்னிசை) உடையது. "பண்ணூர் மொழி மங்கையோர் பங்குடையான்" — சம்பந்தர், 2-39-2. "பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ" — அப்பர், 5-10-1.

## 48. திடபத்தி, திடபுத்தி பெற

**ப**டமுள்ள நாகமும் பாதிரி கொன்றை பனிமத்தமும்
இடமுள்ள தாகவே கொண்ட எம் ஈசனை ஏற்ற நங்காய் !
வடமுல்லை வாயில் இடங்கொண்ட வைணவீ ! வஞ்சனெற்குத்
திடமுள்ள புத்தி திடமுள்ள பத்தி சிறிதருளே.

படங்கொண்ட பாம்பு, பாதிரி, கொன்றை, ஊமத்தம் பூ இவைகளுக்கு இடம் தந்து பூண்டுள்ள ஈசனைக் கணவனாகக் கொண்டுள்ள தேவியே! வட திருமுல்லை வாயிலில் வீற்றிருக்கும் தேவியே! வஞ்சனாகிய எனக்குத் திடமான புத்தியையும், திடமான பக்தியையும் சிறிது அருள்வாயாக.

(கு) வஞ்சனெற்கு—வஞ்சன்-எனக்கு.

## 49. திருவடி சூட்டியருள்

புண்ணியம் செய்யவும் நின்னருள் வேண்டும் புரிகுழல் நீ
நண்ணியிங் கென்றனைப் பொற்பதஞ் சூட்டி நயந்து கொள்ள
அண்ணி வருதியோ! வேறு துணையார்! அழகுமுல்லை
தண்ணியல் சூழற் கருகுறும் வைணவித் தாயுமையே!

(உ) புண்ணிய வினைகளை நான் செய்வதற்கும் உனது திருவருள் வேண்டும்; உனது திருவடியைச் சூட்டி அடியேனை ஆட்கொள்ள நீ என்னிடம் வருவாயோ! தேவீ! உன்னையன்றி வேறு துணை எனக்கு யார் உளர்? திருமுல்லை வாயில் வைணவித் தேவியே!

(கு) அண்ணி-சமீபித்து. சூழல்-இடம். சூழற்கு+அருகு+உறும்=சூழலுக்கு அருகே உள்ள.

## 50. என் நல்வினை உன் தரிசனத்தைத் தந்தது

நீயெனை ஆள நினைந்திலை யேலிந் நிலவுலகில்
சேயெனைக் காப்பதற் காருளர் பைங்கிளி செங்கரத்தி!
நாயினுங் கெட்டநான் நின்முனே வந்ததென் நல்வினையே
வேயுறு தோள்கொண்ட சாம்பவி வைணவி வித்தகியே!

(உ) கிளி ஏந்தும் திருக்கரத்தை உடையவளே! வைணவித்தேவியே! நீ என்னை ஆட்கொள்ள நினைக்கா

விட்டால் இவ்வுலகில் என்னைக் காப்பதற்கு யார் உளர்? நாயினும் கடைப்பட்ட நான் உன் சந்நிதியில் வந்தது என் நல்வினைப் பயனே?

(கு) சேய் - குழந்தை. வேய்உறுதோள் - மூங்கில் போலும் தோள். "நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்"—திருவாசகம்—33-8. "நாயினும் கடைப்பட் டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்" —அப்பர், 4-36-6.

## 51. தேவியின் பெருமை

கடம்பணி கந்தனை ஈன்றநற் பாவாய்! கனிந்தமனத்
திடம் பெறும் அன்பரைத் தேடி அருளும் சிவனுனைத்தன்
இடம் பெற வைத்தனன் என்னே உனது பெருமையம்மா!
மடம்படும் என்றனை என்றுதான் ஆள்வையோ மாதுமையே!

(உ) கந்தபிரானை ஈன்ற தாயே! திடமான பக்தியை உடைய அன்பர்களைத் தாமே தேடி அருள் புரியும் சிவபிரான் உன்னைத் தமது இடது பாகத்தில் ஏற்றுக் கொண்டாரெனில் உனது பெருமையை என்னென்று கூறி வியப்பது? அறிவிலியாகிய என்னை நீ என்றுதான் ஆட்கொள்வையோ? (அறியேன் என்றபடி).

(கு) கடம்பு-கடப்ப மலர். மடம்-அறியாமை.

## 52. ஆண்டருள்

யுகமெலாம் போற்றினும் ஞானமொ டுன்னுவார்க் கன்றிஉன் றன்
தகவெலாம் காணும் தகையவோ! தாயே! தமியனென் றன்
அகமெலாம் போயற ஆள்வையோ அம்மணீ ஆளவந்தோய்!
செகமெலாம் சேவைசெய் வைணவித் தேவீ திரிபுரையே!

(உ) அம்மணி! என்னை ஆட்கொள்ள வந்தவளே! ஜெகம் எல்லாம் வணங்கும் தேவி! யுகக் கணக்காகப் போற்றி செய்தாலும் ஞானத்துடன் உன்னை நினைப்பவர்க் கன்றிப் பிறர்க்கு உன் பெருமை விளங்காது. தாயே! என் ஆணவ உணர்ச்சி அற்றுப்போக ஆண்டருள மாட்டாயோ?

(கு) ஞானமொடு + உன்னுவார்க்கு — தியானிப்பார்க்கு. தகவு - பெருமை. "நாயே அனைய நமையாண்ட தகவே உடையான்"—திருவாசகம், 45-2. அகம் - ஆணவம். செகம் - ஜெகம் - உலகு. தகையவோ-தன்மையதோ.

திரிபுரை: மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் என்பர். திரிபுரார்ணவம் என்னும் நூல் 'பிங்கலை, இடைகலை, சுழுமுனை' என்னும் மூன்று நாடிகளிலும் இருப்பவள்; மனம், புத்தி, சித்தம் என்னும் மூன்றிலும் உறைபவள். ஆதலின் திரிபுரை என்னும் திருநாமம் வந்தது என்று கூறும். முத்தேவர், மும்மறை, முத்தீ, முச்சக்தி.... முதலிய பிரிவுகளுக்கு உரியவளாதலின் இப்பெயர் வந்ததென்று கௌடபாத சூத்திர உரை கூறும்.

(அபிராமி அந்தாதி 5-உரை) செய்யுள் 30-இன் குறிப்புரையையும் பார்க்க.

## 53. காத்தருள

**நெஞ்சம் சிவற்கே இடமாக வைத்து நினையுமப்பர்**
**வஞ்சம் நிறைந்த சமணர்கள் செய்திட்ட வன்செயலுக்**
**கெஞ்சும் படிக்கருள் பாலித்த ஈசர் இடத்துறையும்**
**கஞ்சம் புரையுந் திருவடி யாயெனைக் காத்தருளே.**

(உ) தம்து நெஞ்சைச் சதா சிவனடியில் வைத்த அப்பர் பெருமான் சமணர்கள் செய்த வஞ்சனைச் செயல்

களில் மாளாது அவரைக் காத்த சிவனது இடது பாகத்தமர்ந்த தேவீ ! நீ என்னைக் காத்தருள வேண்டுகிறேன்.

(கு) தமது மதத்தை விட்டுச் சைவராயினர் அப்பர் எனப் பொருமை கொண்ட சமணர்கள் சமணமதத்தைத் தழுவியிருந்த அரசரைக் கொண்டு அப்பரை நீற்றறையில் இட்டும், நஞ்சு கலந்த பாற்சோற்றினைத் தந்தும், மதயானையை அவர் மீது ஏவியும், கல்லொடு கட்டிக் கடலில் இட்டும் கொல்ல வழிதேடினர். இத்தனை ஆபத்துக்களிலும் அப்பரை மீட்டனர் சிவபிரான்.

வன் செயலுக்கு + எஞ்சும்படிக்கு - பிழைக்கும்படி. கஞ்சம் புரையும் - தாமரை போன்ற.

## 54. மனம் திருந்த

ஓதிலேன் உன்றன் திருப்புகழ்ப் பாக்களில் ஒன்றினையும்
காதிலே உன்புகழ்ப் பாடலைக் கேட்கும் கருத்துமில்லேன்
தீதிலே சேராத உள்ளத் தவருடன் சேரகில்லேன்
வாதிலே என்மனம் போகா வகையருள் வைணவியே.

(உ) வைணவித்தாயே ! நான் உன் திருப்புகழ்ப் பாடல்களில் ஒன்றுகூட ஓதுகின்றதுமில்லை; பாடினும் கேட்பதும் இல்லை. நற்குணவான்களொடு சேர்வதுமில்லை. வீண் வாதங்களில் என்மனம் போகாதபடி எனக்கு அருள்புரிவாயாக !

(கு) தேவியின் திருப்புகழ்ப் பாக்கள் : சௌந்தர்ய லஹரி, அபிராமி அந்தாதி, அருணகிரியார் அருளிய திருப்புகழ், திருவகுப்பு ஆதிய நூல்களில் உள்ள தேவீ ஸ்துதிப் பாடல்கள்.

## 55. தேவியின் இருப்பிடங்கள்

**தி**ல்லைச் சிவகாமி, கஞ்சிகா மாட்சி, திசை புகழும்
நெல்லை வடிவுடைத் தேவி, மதுரை நெடுநகரில்
எல்லை யிலாப்புகழ் மீனாட்சி என்றே இலங்குகின்றாய்
முல்லை வனத்தில் வயிணவி யாயமர் முக்கணியே!

(உ) திருமுல்லை வாயிலில் வாழும் முக்கண்ணியே! நீ சிதம்பரத்திற் சிவகாமி என்ற பெயருடனும், காஞ்சியிற் காமாட்சி என்ற பெயருடனும், திருநெல்வேலியில் வடிவுடை யம்மை (காந்திமதி) என்னும் பெயருடனும், மதுரையில் மீனாட்சி என்ற பெயருடனும் விளங்குகின்றாய்!

(கு) திசைபுகழும் நெல்லை—"திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி"—சம்பந்தர், 3-92-7

## 56. தேவி இருப்பிடங்கள்

**அ**ண்ணா மலையதில் உண்ணா முலையாய், அமரர்தொழும்
எண்ணார் எழிலானைக் காவில் அகிலாண்ட ஈசுரியாய்,
கண்ணார் கழுக்குன் றதனில் திரிபுர சுந்தரியாய்த்,
தண்ணார் திருமுல்லை வைணவி நீதான் தழைகின்றையே.

(உ) திருமுல்லை வாயிலில் விளங்கும் வைணவித் தேவியே! நீ திரு அண்ணாமலையில் உண்ணாமுலையாகவும், திரு ஆனைக்காவில் அகிலாண்டேசுரியாகவும் திருக்கழுக்குன்றத்தில் திரிபுர சுந்தரியாகவும் திகழ்கின்றாய்.

(கு) எண்ணார்-மதிப்புக்குரிய; எழில்-அழகு. கண்ணார்-பெருமை நிறைந்த. கண்-பெருமை. 'கண்ணார் கழுக்குன்றம்' - சம்பந்தர், 2-39-2. தண்ணார்-குளிர்ச்சி நிறைந்த.

## 57. திருப்பணி செய்வோர்க்கு அருளுதல்

வடதிரு முல்லை வனத்து வயிணவி மாதுமையே !
திடமலி பத்தி உளத்தினர் செய்யும் திருப்பணியை
உடனிருந் தேதுணை செய்து முடிப்பதும் உனதருளே ;
மடமலி மாந்தர் உனதருள் ஓராது வாடுவரே.

(உ) வடதிரு முல்லை வாயிலில் வாழும் வயிணவித் தேவியே! திடம் நிறைந்த பக்தி உள்ளத்தைக் கொண்ட பக்தர் உனது திரு ஆலயத்திருப்பணியைச் செய்ய உனது திருவருளே அவருடன் இருந்து அவருக்குத் துணைபுரிந்து அப்பணியை முடித்து வைக்கின்றது. இவ்வுண்மையை அறிவிலா மாந்தர்கள் அறியாது வாடுகின்றனர்.

(கு) பத்தி உளத்தினர் திருப்பணி - வைணவி ஆலயத் திருப்பணி செய்த பக்தர். ஓராது-உணராமல்.

## 58. பிரமனது ஏட்டிற் படாதிருக்க

செங்குங் குமம்பசுஞ் சாந்துடன் தோய்தரும் தேவியுன்றன்
தங்கம் புரையும் குணத்தைப் புகழும் ஜகம் ; அதனால்
பங்கம் படுமிப் பிறவியி லேங்குமிப் பாதகன் அப்
பங்கயன் ஏட்டிற் படாவகை சற்றருள் பாவிப்பையே.

(உ) குங்குமம், சந்தனம் தோய்தரும் தேவீ! உன் குணம் தங்கம் என்று உலகம் புகழ்கின்றது. அதனால் பாபப் பிறவித் துயரிற்பட்டு ஏங்கும் எனது பெயர் பிரமனது ஏட்டில் எழுதப்படா வகையை அருள்புரிதி.

(கு) பங்கம்-பாபம். பங்கயன்-(பங்கயம்) தாமரையில் வீற்றிருக்கும் பிரம தேவன். பிரமன் ஏட்டில் எழுதிய விதிப்படி பிறவி எடுத்து வினைகளை அனுபவிக்கின்றோம். "அக்ஷர தேவி கோவின் விதிப்படி...

காயம்கொண்டு''; அக்ஷர தேவி-சரஸ்வதியின், (கோ)-கணவன்-பிரமன். காயம்-உடல்.-திருப்புகழ் 1204.

### 59. நல்லது செய்யத் துணைபுரி

அதுசெய் இதுசெய் என, என துள்ளம் அலைகிறதே,
விதுவணி சங்கரன் தேவி ! நின் பாதத்தில் வீழ்ந்துபணிந்
தெதுசரி யோஅதைச் செய்யத் துணைபுரி என்றனக்கு
முதுநகர் காஞ்சியில் எண்ணான் கறம்செய்த மொய்ம்பினளே !

(உ) காஞ்சியில் முப்பத்திரண்டறம் புரிந்தவளே ! இன்னது செய்வதென்றறியாமல், அதைச் செய்யலாமா — இதைச் செய்யலாமா — என்று எனது உள்ளம் அலைகின்றது. சந்திரனை அணிந்துள்ள சிவனார் தேவி ! உனது பாதத்துணை கொண்டு எது சரியோ அதைச் செய்யத் துணை புரிந்தருளுக.

(கு) விது-சந்திரன். எண்ணான்கு அறம்-தேவி காஞ்சியில் 32 அறங்களைச் செய்தனள் என்பது புராண வரலாறு.

'இச்சைப்படி தன்பேரறம் எண்ணான்கும் வளர்க்கும் பச்சைக் கொடி.. உறை கச்சிப்பதி' — வில்லிபாரதம் — அருச்சுனன் தீர்த்த யாத்திரை — 13.

அறம் 32 : 1. ஆதுலர்க்குச் சாலை 2. ஓதுவார்க்குணவு. 3. ஆறுசமயத்தார்க்கு உண்டி. 4. பசுவுக்கு வாயுறை 5. சிறைச்சோறு 6. ஐயம் 7. தின்பண்டம் நல்கல். 8. அறவைச் சோறு. 9. மகப்பெறுவித்தல் 10. மகவு வளர்த்தல் 11. மகப்பால் வார்த்தல். 12. அறவைப் பிணஞ்சுடுதல் 13. அறவைத் தூரியம் (ஆடை) 14. சுண்ணம் 15. நோய்க்கு மருந்து 16. வண்ணார் 17. நாவிதர் 18 கண்ணாடி 19. காதோலை 20. கண்மருந்து 21. தலைக்கு எண்ணெய் 22. பெண்போகம்

23. பிறர்துயர் காத்தல் 24. தண்ணீர்ப் பந்தல் 25. மடம் 26. தடம் (குளம்) 27. சோலை 28. ஆவுரிஞ்சு தறி 29. விலங்கிற் குணவு 30. ஏறுவிடுத்தல் 31. விலை கொடுத்து உயிர்காத்தல் 32. கன்னிகாதானம்.

## 60. தேவி கடப்பமலர்ப் ப்ரியை

வானும் வணங்கும் வராகீ! கடப்ப மலர்களையே
நானுன் கழற்கிட்டுப் போற்றுவன் அந்த நறுமலரை
மீனும் மருள் கணீ நீயும் விரும்புவை, வேற்குமரன்
தானும் விரும்புவன் என்னுமவ் வுண்மை தனையறிந்தே.

(உ) மீனும் மருளத்தக்க கண்ணீ! கடப்பமலர் உனக்கும் ஆசை; உன் மகனார் குமர மூர்த்திக்கும் ஆசை—என்னும் உண்மையை அறிந்து! அம்மலர்கள் கொண்டே உன் திருவடியைப் பூசித்துப் போற்றுவன்.

(கு) கடம்பும் முருகரும்: "மயிலேறும் ஐயன் காலுக்கு அணிகலம்..கடம்பு."—கந்தரலங்காரம், 62. கடம்பும் தேவியும்: "பூங்கடம்பு சாத்துங் குழலணங்கே"—அபிராமி அந்தாதி—26 "தாமம் கடம்பு"—ஷை 73. "கதம்ப மஞ்சரீக்லுப்த கர்ணபூர மனோஹராயை"—லலிதா, 21.

## 61. கைவிடேல்

கதிதனைக் காணுமல் ஏங்கித் தயங்கிக் கலங்குகின்றான்,
துதியதும் செய்யான், தொழுதலும் செய்யான், சுமடனிவன்
மதியது கெட்ட மடையன், எனநீ மதித்திவன்தன்
விதிவழி செல்க எனவிடேல் என்னை விநாயகியே!

(உ) தேவீ! விநாயகீ! இவன் கதிகாணுது கலங்கும் மனத்தினன், துதிப்பதும் இல்லை, தொழு

வதும் இல்லை. அறிவிலி; மதிகெட்ட மடையன் என என்னை நீ மதித்து, இவன் விதிவழி போகட்டும் என்று என்னைக் கைவிட்டு விடாதே.

(கு) சுமடன்-அறிவிலாதவன். விநாயகி-மேலான நாயகி. "கூற்றினை மோதிய பதசத்திரி மூத்த விநாயகி"—திருப்புகழ், 751.

### 62. துணை நீயே

பாவித் தனிமனத் தானென என்னைப் பதறவிடேல்
ஆவிக் குறுதுணை நீயன்றி யாரெனை ஆதரிப்பார்
காவிக் கிரிவளர் நின்சேய் கழலினைக் காட்டெனக்குத்
தூவிக் குலமயில் போல்நடை கொண்ட சுடாரணியே.

(உ) மயிலன்ன நடையை உடைய தேவி! இவன் பாவ எண்ணங்களையே யுடையவன் என என்னைப் பதறும்படி விட்டுவிடாதே. என் ஆவியை ஆதரிக்க உன்னையன்றி வேறு ஒருவர் இலர்; காவிக்கிரி (நீலோற்பலகிரியாம்) திருத்தணிகையில் வாழும் உனது மகனார் குமரவேளின் திருவடித் தரிசனத்தை எனக்குக் காட்டியருளுக.

(கு) "பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே"—கந்தரலங்காரம், 99. காவி-நீலோற்பலம். நீலோற்பலகிரி - திருத்தணிகை. செய்யுள் 92 பார்க்க. சுடாரணி-ஒளிமயத்தவள். "கொடிய சூலி சுடாரணி யாமளி"—திருப்புகழ், 526.

### 63. சிவனது இடது பாகத்தைத் தேவி பெற்றது

உன்னைமுன் நீக்கி அரனை வலம்வந்த ஓர்முநிவர்
உன்னி உணர்ந்த மறைப்பொருள் இஃதென ஓர்ந்தவளாய்
என்னை உடையான் இடதுபா கம்பெறு வேனெனமுன்
அன்னை நீ அண்ணு மலையில் அருந்தவம் ஆற்றினையே.

(உ) தேவி! உன்னை விலக்கி(ப் பிருங்கி என்னும்) ஒரு முனிவர் சிவபிரானை மாத்திரம் வலம்வர, அம்முனிவர் உணர்ந்து ஒழுகிய வேத ரகசியம்\ இன்னதென் நீ ஆய்ந்து அறிந்து என்னை ஆளுடைய பெருமானது இடது பாகத்தைப் பெறுவேன் நான் எனத் தீர்மானித்துத் தாயே! நீ திருவண்ணுமலையில் அரிய தவத்தைச் செய்தனையே!

(கு) இச் செய்யுளின் கருத்து:--

"தன்னை நீக்கியே சூழ்வுறுந் தவமுடைப் பிருங்கி,
உன்னி நாடிய மறைகளின் முடிவினை உணரா,
என்னை யாளுடை யானிடம் சேர்வனென் றிமயக்,
கன்னி பூசனை செய்தகே தார முன் கண்டான்."

எனவரும் கந்த புராணச் செய்யுளை (வழிநடைப் படலம், 1-23-6)த் தழுவுகின்றது. திருவண்ணுமலையிற் சிவனது இடது பாகத்தைப் பெற்றதாக அருணுசல புராணங் கூறுகின்றது.

"அங்கம் யாவு நம் பொருட்டுவிட் டிமயவெற் படைந்தாய்
இங்கு நாமுனக் கொருபுறம் அளிப்பதே இயற்கை
மங்கை யே! நம திடப்புறத் துறையென மகிழ்வுற்
றங்கை யாலணைத் தருளினன் உருகியொன் ருனர்.

"அடுத்த செஞ்சடை ஒருபுறம், ஒருபுறம் அளகம்;
தொடுத்த கொன்றையோர் புறம், ஒரு புற நறுந் தொடையல்;
வடித்த சூலமோர் புறம், ஒரு புறம்மலர்க் குவளை
திடத்தி லார்கழல் ஒரு புறம், ஒரு புறம் சிலம்பு.

"பச்சை வன்னமற் றொரு புறம், ஒருபுறம் பவளம்;
கச்சு லாமுலை ஒரு புறம், ஒரு புறம் கவின் மார்;
அச்ச நீக்கிய வரதமொன் றபயமொன் றங்கை;
இச்சை யாமிவர் உறுதல் கண் டிறைஞ்சினர் இமையோர்.

(அருணுசல புராணம்—இடப்பாகம் பெற்ற சருக்கம், 64-66)

மோக்ஷத்தை விரும்பினவர்கள் சிவத்தையும், போகத்தை விரும்பினவர்கள் சக்தியையும் வலம் வருவர் என்பது ஒரு கொள்கை.

### 64. திருவடியைப் போற்ற

இறுதியும் ஆதியும் இல்லாத இன்ப எழிற்கிளியே !
உறுதி மனத்தொடு நின்கழல் போற்ற உதவிபுரிந்
தறுதி அருளென் வினைக்கிங் கபிராமிப் பட்டருக்கன்
றுறுதுணை யாகி அவர்சொலை மெய்ப்பித்த உத்தமியே.

(உ) அபிராமிப் பட்டருக்குத் துணை நின்று அவர் சொன்ன சொல் மெய்யெனக் காட்டிய உத்தமியே ! ஆதி அந்தம் இல்லாதவளே ! திடபுத்தியுடன் உன் திருவடியைப் போற்ற உதவிபுரிந்து என் வினைக்கு ஒரு முடிவைக் காட்டி யருளுக.

(கு) உதவிபுரிந்து என்வினைக்கு அறுதி அருள். அறுதி-முடிவு. அபிராமிப் பட்டரின் சொல்லை மெய்ப் பித்த வரலாற்றைச் செய்யுள் 11-இன் குறிப்புரையிற் காண்க.

### 65. காளமேகனை ஆண்டது

நம்புதல் இல்லாத நாயனை எங்ஙனம் நாடி வந்துன்
அம்புயம் நேர்கின்ற பொன்னடி தந்திங் கருளுவை நீ !
வெம்பும் உளத்திற் கிடந்திட்ட அக் காள மேகனை உன்
தம்பலம் ஈந்து மகாகவி யாக்கினை சங்கரியே.

(உ) முன்பு மனத்தாங்கலொடு இருந்த காளமேகத் துக்கு உன் எச்சில் தம்பலத்தைத் தந்து அவரை மகாகவி ஆக்கின பேரருள் கொண்ட தேவியே ! நம்பு தலே இல்லாத அடியேனை உன் திருவடி தந்து ஆண் டருளுவையோ !

(கு) காளமேகப் புலவர் 14-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும், 15-ஆம் நூற்றுண்டின் துவக்கத்திலும் இருந்தவர். அவர் திரு ஆனைக்காக் கோயில் தேவ தாஸியின் வரவை எதிர்பார்த்து அந்தக் கோயிலின் புறத்தே தூக்கவிழியுடன் காத்திருந்தபொழுது, தேவி அகிலாண்ட நாயகி இவரை அண்மி 'வாயைத் திற' என்று கூறித் தன் எச்சில் தம்பலத்தை இவர் வாயில் உமிழ அதை உண்ட பெரும் பேற்றால் இவர் மகாகவி யானர். ஆசுகவி பாடுவதில் இணையற்றவராய் " ஆசுக்குக் காளமுகில் " என்று பேர் பெற்றார். இவர் திரு ஆனைக்கா உலாப் பாடியுள்ளார்.

அம்புயம் - தாமரை. வெம்புதல்-வேதனைப்படுதல்.

### 66. சம்பந்தரது ஏடு தீயில் வேவாது உதவியது

நாடது போற்றும் உனைவெறுத் திட்ட நடைகொள் தக்கன்
ஆடது கொண்ட முகத்தை அடைந்தான் அகந்தையினல்
சேடது கொண்ட உமையே ! புகலிமன் தீயிலிட்ட
ஏடது வேகா திருந்ததுன் நாமம் இருந்திடவே.

(உ) பெருமை வாய்ந்த தேவியே ! உன்னை வெறுத்த தக்கன் (தக்ஷப்பிரஜாபதி) ஆட்டு முகத்தை அடைய வேண்டி வந்தது. ஸ்ரீ சம்பந்தர் (சமணரொடு வாது செய்து தீயில்) இட்ட ஏட்டில் இருந்த பாட்டில் "போக மார்த்த பூண் முலையாள் " என்ற உன் திரு நாமம் இருந்தபடியாலன்றோ அந்த ஏடு தீயில் வேகாது பச்சையாய் விளங்கிற்று.

(கு) தக்ஷப் பிரஜாபதி, சிவபிரானையும், அவர் தேவி தாக்ஷாயணி என்னும் தன் மகளையும் வெறுத்து அவர்களை அலட்சியம் செய்து தான் செய்த யாகத் துக்கு அழைக்கவில்லை. தேவி நேரிற் சென்றபோது

தேவியை (தன் மகளை) வெறுத்து விலக்கினான். அதனால் தக்ஷன் செய்த யாகம் சிவபிரான் அனுப்பின வீரபத்திரரால் அழிவு பெற்றது. தேவி-தாக்ஷாயணி யின் வேண்டு கோட் கிணங்கி உயிரிழந்தவர்களை யாவரும் எழுதிர்' என வீரபத்திரர் உரைக்க, யாவரும் எழுந்து சிவனையும் தேவியையும் வணங்கினர். யாகத்திற் கிடந்த ஓர் ஆட்டின் தலை தக்கன் உடலிற் பொருத்தப் பட்டு, அவனும் உயிர்ப்பிக்கப் பெற்றான் என்பது கந்த புராண வரலாறு.

மதுரையில் பாண்டியன் எதிரில் சம்பந்தர் சமண ரொடு வாது செய்ய நேர்ந்தது. அப்போது சமணர் 'நாங்கள் எங்கள் மந்திரம் எழுதின ஏட்டை நெருப்பில் இடுகிறோம். இவர் எழுதும் ஏட்டையும் தீயில் இடட் டும். எவர் எழுதின ஏடு வேகாதிருக்கின்றதோ அவர் மதமே மெய்யானது' என்று கூறினர். அதன்படி சமணர் இட்ட ஏடு வெந்து சாம்பலாயிற்று. சம்பந்தர் தாம் பாடிய திருநள்ளாற்றுப் பதிக ஏட்டை எடுத்து இப்பதிகம் தேவியின் திருநாமமாகிய "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங்குகின்றது. ஆதலால் இதற்குப் பழுது வராது என்று கூறி அந்த ஏட்டைத் தீயில்இட அது வேகாமல் பச்சையாய்த் தீயில் திகழ்ந் தது என்பது வரலாறு. (விரிவைப் பெரிய புராணத் திற் காண்க.)

## 67. குமரகுருபரற்கு முத்துமாலை சூட்டியது

**பாட்டின் சுவைநீ பருகிய இன்பப் பரிவதனால்**<br>
**நாட்டின் புகழ்சேர் குமர குருபரர் நற்கவியின்**<br>
**மாட்டின்ப முற்று மணிமுத்து மாலையை மற்றவர்க்குச்**<br>
**சூட்டி மகிழ்ந்தாய் மதுரா புரியின் சுமங்கலையே.**

(உ) பாடலின் சுவையைத் தேவீ ! நீ அனுபவித்த இன்பம்காரணமாகக் குமரகுருபர சுவாமிகள் பாட்டின் நயத்தை உணர்ந்து மகிழ்ந்து உனது முத்து மாலை ஒன்றை அவருக்குச் சூட்டி மகிழ்ந்தாய் மதுராபுரியிலே.

(கு) குமரகுருபர சுவாமிகள் 17-ஆம் நூற்றுண்டில் இருந்தவர். அவர் மதுரை அரசன் திருமலை நாய்க்கர் முன்னிலையிற் சபையில் தாம் பாடிய " மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை " அரங்கேற்றினபோது தேவி மீனாட்சி குழந்தை உருவாக எழுந்தருளி அரங்கேற்றத்தைக் கேட்டு மகிழ்ந்து தன் கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றை இவருக்கு அணிந்துவிட்டு மறைந்தனள் என்பது வரலாறு.

பரிவு-அன்பு. நற்கவியின் மாட்டு-நல்ல கவியிடத்தே. சுமங்கலை-நல்ல மங்கள சொரூபி.

## 68. அருணகிரிநாதருக்கு அருளியது

அன்றுன் புகழை அடுக்கி வகுத்த அருணகிரி
வென்றி பெறும்படி கைப்பிடி தன்னைநீ மெல்லவிட்டு
வென்றிவே லத்தன் சபைதனிற் செல்ல விடுத்தனையே
நன்றதே செய்யும், திருவுடை யாய்நீ நவமணியே !!

(உ) அன்று உனது புகழை அடுக்கி அடுக்கித் திருவகுப்பில் (தேவேந்திர சங்க வகுப்பில்) ஓதின அருணகிரி நாதருக்கு ஜெயம் வரவேண்டி உன் மடியில் இருந்த குழந்தைக் குமரவேள் சபைக்குச் செல்லுமாறு அவரை உனது இடுப்பினின்றும் மெல்ல விட்டு நன்மை புரிந்த திருவருட் செல்வியன்றோ நீ !

(கு) பிரபுடதேவராஜன் முன்னிலையில் சம்பந்தாண்டான் என்பவன் தான் உபாசிக்கும் தேவியை வர

வழைப்பேன்;—இந்த அருணகிரி தாம் உபாசிக்கும் முருகனை வரவழைக்கட்டும், பார்க்கலாம்'' என்றான். நடந்த போட்டியில் சம்பந்தாண்டானால் தேவியை வரவழைக்க முடியவில்லை; அருணகிரியார் கந்தவேளை வரவழைக்க முயன்றபோது அவர் வரமுடியாத வண்ணம் தேவி அவரைத் தம்மடி மீது இறுகப் பிடித்து வைத்திருக்கும்படிச் சம்பந்தாண்டான் தேவியை வேண்டினன். அதை உணர்ந்த அருணகிரியார் தேவியைப் புகழ்ந்து "தேவேந்திர சங்க வகுப்பைப்" பாடத் தேவி மகிழ்ந்து தனது கைப்பிடியை நெகிழவிடக், குழந்தை முருகவேள் மயில்மீது வந்து சபையில் காட்சியளித்தனர்—என்பது கர்ணபரம்பரை வரலாறு.

## 69. தேவி திருநாமம் கிரகங்களின் வலிவைத் தொலைக்கும்

தவிபாடு தந்துல கோரை மிகவும் தவிக்கவிடும்
கவிஞா யிறுசனி ஆதிய கோள்தரு கஷ்டமதைப்
புவியார் தவிர்க்கப் புகன்ற அக் கோளறு பாடல்களிற்
சவியாக நின்பெயர் செப்பித் துதித்தனர் சம்பந்தரே.

(உ) தவிக்கும் படியான கஷ்டத்தைத் தந்து உலகோரைத் தவிக்கும்படி செய்கின்ற சுக்ரன், சூரியன், சனி ஆகிய நவக்ரஹங்களால் உண்டாகின்ற கஷ்டங்களை உலகினர் நீக்கிச் சுகம் பெற வேண்டித் தாம் அருளிய ''வேயுறு தோளி'' எனத்துவக்கும் கோளறு பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் அழகாகத் தேவி! உனது பெயரை முன் வைத்தே துதித்தார் சம்பந்தப் பெருமான்.

(கு) தவிபாடு-தவிக்கும்படிச் செய்கின்ற கஷ்டங்கள். கவி-சுக்கிரன்; ஞாயிறு-சூரியன். கோள்-கிரகம். புவியார்-உலகினர். கோளறு பதிகம் என்பது

ஸ்ரீ ஞாந சம்பந்தப் பெருமான் அருளிய "வேயுறு தோளி" எனத்துவக்கும் திருப்பதிகம். இப்பதிகத்தைத் தினந்தோறும் பாராயணம் செய்தால் நவக்ரஹங்களால் வரும் கஷ்டம், பின்னும் உலகில் மக்கட்கு உண்டாகும் பலவித கஷ்டங்கள், நோய்கள், ஆபத்துக்கள் எல்லாம் விலகி நன்மை கைகூடும். இப்பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் தேவியின் திருநாமம் வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்தான் பராசக்தியின் திருவருளால் பிணி, நோய், கிரகசேஷ்டை முதலியன விலகுகின்றன.

## 70. காளிதாசனுக்கு உதவியது

**க**ன்னிகை அம்பிகை சங்கரி காமாட்சி கற்பகப்பேர்
முன்னவ ளேநீ முதல்நிற்கில் எல்லாம் முடிவு பெறும்
என்னுமக் கூற்றில் இசைவாய்மை தன்னைநீ காட்டிவிட்டாய்
தன்னிகர் இல்லாத அக்காளி தாசன் சரிதத்திலே.

(உ) தேவி! நீ முன் நின்ருல் எல்லாக் காரியமும் செவ்வனே கைகூடும் என்னும் சொல்லின் உண்மை காளிதாஸருடைய வரலாற்றில் விளக்கம் பெறுகின்றது.

(கு) ஆட்டிடையனுயிருந்த காளிதாஸர் காளிதேவியின் திருவருளால் கவிசிரேஷ்டர் ஆனுர்.

## 71. தேவியும் சௌந்தர்ய லஹரியும்

**தா**யே! நின் சௌந்தர்யம் எல்லாம்சொன் ஞாதி சங்கரரென்
றேயா னறிந்துமிந் நூலைப் படித்தே இதனழகை
ஆயா உளத்தனுய் வீண்காலம் போக்கி அவலமுற்றேன்
நீயா தரித்தெனை நன்னெறி சேர்க்க நினைந்தருளே.

(உ) தாயே ! உன் செளந்தர்யங்கள் எல்லாவற்றையும் ஆதிசங்கரர் தாம் அருளிய "செளந்தர்ய லஹரி" என்னும் நூலில் எடுத்துக் கூறியுள்ளார் என அறிந்தும், நான் அந்த நூலைப் படித்து அதனழகை ஆய்ந்தறியாது வீண்காலம் போக்கி அவதியுற்றேன் நீ தான் என்னை நன்னெறியிற் சேர்க்க நினைந்தருள வேண்டும்.

(கு) ஆதிசங்கரர் அருளிய நூல் — "செளந்தர்ய லஹரி"—தேவியின் பெருமைகளைக்கூறும் மந்திர நூல்.

## 72. தேவி நித்ய சுமங்கலி

என்றும் சுமங்கலி யாக இருப்பதிங் கெவ்வணமென்
றன்றுநீ கண்டந்த நித்திய ஞமரற் காசைவர
நன்று புரிந்தனை பூசனை ; பூசித்த நற்பயனுல்
இன்றுனை யாவரும் நித்யகல் யாணியென் றேத்துவரே.

(உ) என்றும் சுமங்கலியாக விளங்கவேண்டி நீ நித்தியராகிய சிவபிரானுக்கு உன்மீது ஆசைவரப் பூசித்தாய்; பூசித்ததின் நற்பயனுல் நீ நித்ய கல்யாணியாக விளங்குகின்றுய்.

(கு) காஞ்சியில் தேவி சிவபிரானைப் பூசித்து அவரைத் திருமணம் செய்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றனள். இது காமாட்சி கலியாணம், கௌரி திருக் கல்யாணம் என வழங்கும்—காஞ்சிப் புராணம், திருமணப் படலம் காண்க.

## 73. பலி ஏற்பவருடன் குடிவாழ்க்கை எப்படி ?

அரைப்பால் உடுப்பன கோவணச் சின்னங்கள், ஐயமுணல்,
வரைப்பாவை யைக்கொண்ட தெக்குடி வாழ்க்கைக் கெனவினவும்
உரைப்பா வலரப்பர் கேள்விக்கு யாதோ உரை உரைத்தார்
விரைப்பானற் கண்ணிநீ எங்ஙன் பொறுத்தாய் விஞஅதையே.

(உ) அப்பர் ஒரு பாட்டில் பெருமானை நோக்கிப் "பெருமானே ! நீ அரையில் உடுப்பது கோவணம் ; நீ உண்பது பிச்சை எடுத்த உணவு. இங்ஙனம் இருக்க, மலைமகளை எத்தகைய குடி வாழ்க்கைக்காக நீ மணந்தாய்" என வினவுகின்றாரே ! அந்த வினாவுக்குப் பெருமான் என்ன விடை தந்தார் ? நீ எப்படி அந்தக் கேள்வியைப் பொறுமையுடன் கேட்டிருந்தாய், தேவி !

(கு) அப்பர் பாட்டு :—

"அரைப்பால் உடுப்பன கோவணச் சின்னங்கள், ஐய முணல்,
வரைப் பாவை யைக் கொண்ட தெக்குடி வாழ்க்கைக்கு ?
வானிரைக்கும்,
இரைப்பா ! படுதலை ஏந்துகை யா ! மறை தேடுமெந்தாய் !
உரைப்பார் உரைப்பன வேசெய்தி யாலெங்கள் உத்தமனே !"
—IV-113-7.

அரை-இடுப்பு. வரைப்பாவை-இமயராஜன் மகள்; பார்வதி. விரை-வாசனை. பானல்-கருங்குவளை.

74. கணவன் பலி ஏற்ப 32 அறம் எப்படிச் செய்தனை ?

ஓடேறு கையனாய், ஊரூர் பலிக்கே உழல்பவனாய்
மாடேறு செல்வம் தவிரப் பிறசெல்வ வாழ்விலனாய்க்
காடேறி நிற்பவன் பத்தினீ ! நீயன்று காசினியோர்
ஈடேற முப்பத் திரண்டறம் எவ்வாறி யற்றினையே.

(உ) (பிரமனது) தலையோட்டை ஏந்திய கையன், ஊரூராகப் பலிவேண்டித் திரிபவன், மாட்டை வாகனமாகக் கொண்டவன், இவை தவிர வேறு செல்வ வாழ்வு இல்லாதவன், காட்டிற் குடியேறியுள்ளவன் (ஆகிய சிவனது) பத்தினியே ! முன்பு இப்பூவுலகோர் ஈடேற 32 அறம் உன்னால் எவ்வாறு செய்ய முடிந்தது ? (தெரியவில்லையே !)

(கு) காசினி-உலகம் 32 அறம்-செய்யுள் 59-இன் குறிப்புரையைப் பார்க்க.

## 75. திருவடியை அருளுக

வேல் கொடுத் தாயொரு பிள்ளைக்குக், காழி வியனகரிற்.
பால்கொடுத் தாயொரு பிள்ளைக்குப், பாரினில் வாழ்பவர்க்கு
மால்கொடுத் தாட்டும் மருகற்கொ ரைந்து மலர்வகையிற்
கோல்கொடுத் தாயுன் றன் கால்கொடுத் தாளெனைக் கோமளமே.

(உ) தேவீ ! நீ ஒரு பிள்ளைக்கு வேலாயுதம் கொடுத்தாய் ; சீகாழி என்னும் தலத்தில் ஒரு பிள்ளைக்குப் பால் கொடுத்தாய் ; உலகில் உள்ளோர்க்குக் (காம) மயக்கத்தைத் தந்து ஆட்டுவிக்கின்ற உன் மருகனும் மன்மதனுக்கு ஐந்து வகையான மலர்ப்பாணங்களைத் தந்துள்ளாய்; எனக்கு உன் காலைக் கொடுத்து என்னை நீ ஆண்டருளுக.

(கு) 1. சூர சம்மாரத்துக்காக முருகனுக்கு வேற்படையைத் தேவி தந்துதவிஞள்.

" சூரனொ டெதிர் போர்கண்(டு), எம்புதல்வா வாழி வாழி எனும்படி வீருன வேல்தர, என்று முளானே மனோகர வயலூரா "—திருப்புகழ், 66.

2. சீகாழியில் சம்பந்தருக்கு ஞானப்பால் தந்து உதவினாள் தேவி.

" நுகர் வித்தகமாகும் என்று (உமை) மொழியிற் பொழிபாலை உண்டிடு......பாலன் "—திருப்புகழ் 110.

3. (தேவியின்) மருகன் :—தேவியின் தமையனை திருமாலின் மகனும் மன்மதன்: கோல்-பாணம். அம்பு-ஐவகை மலர் அம்புகள்.

ஐந்து மலர்ப் பாணங்கள் :—

1. தாமரை (காம) நினைப்பை யூட்டும்2.. மாம்பூ - பசலைநிறம் தரும். 3. அசோகு - உணர்வை நீக்கும். 4. முல்லை - படுக்கச் செய்யும். 5. நீலோற்பலம் - கொல்லும்.

தேவியிடமும் பஞ்ச புட்ப பாணங்கள் உண்டு. " பஞ்ச பாண பயிரவியே ",—அபிராமி அந்தாதி, 76.

## 76. சிவனுடன் என்னுள் உறைந்தருள்

உன்றன் நடுவுள் பரமன் உறைவன், உறைதரும், அ
வன்றன் நடுவுள் உமைநீ உறைவாய் ; மனதிரங்கி
என்றன் நடுவுள் இருவீரும் என்றும் இருப்பதற்கு
மன்றன் மணம்கமழ் வைணவி யேநீ வழங்கருளே.

(உ) வைணவித் தேவியே ! உன் இதய நடுவில் சிவனார் வீற்றிருக்கின்றார். அவர் இதய நடுவில் உமையே ! நீ வீற்றிருக்கின்றாய் ; மனமிரங்கி நீங்கள் இருவீரும் என் இதயநடுவில் என்றும் வீற்றிருந்தருள வேண்டுகின்றேன்.

(கு) இப்பாடல் " உடையாள் உன்றன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் " — எனவரும் திருவாசகக் (21-1) கருத்தைத் தழுவுகின்றது.

1. மன்றல் - வாசனை. மன்றல் மணம் - ஒரு பொருள் இரட்டைச் சொல்: மன்றன்-சிவன். மன்றன் மணம்-சிவ மணம் எனினுமாம்.

### 77. அர்த்தநாரீசுரர் பிறிதொரு பாதி என்னுயிற்று ?

ஒருபாதி யைச்சிவன் மேனியிற் சேர்த்திட்ட உத்தமி ! மற்
ருெருபாதி தன்னைநீ ஏதுசெய் தாய் ? மீதி உற்ற உங்கள்
இருபாதி யாற்சேர் உமாசிவன் எங்குளன் என் றியம்பாய்
கிருபா நிதியே ! திருமுல்லை வாயில்வாழ் கிஞ்சுகமே !

(உ) (உனது உடலில்) ஒரு பாதியைச் சிவனுடைய மேனியிற் சேர்த்தவளே ! உன்னுடைய மிகுதி நின்ற பாதி உடலை நீ என்ன செய்தாய்? சிவனுடைய உடலில் மிகுந்த நின்ற பாதியுடன், உங்கள் இருபாதியாலும் பிறிதொரு உமா சிவன் (அர்த்த நாரீசுரர்) உண்டோ ? அந்த அர்த்த நாரீசுரர் எங்கு உள்ளார்? சொல்லியருளுக. திருமுல்லை வாயில் வாழும் கிளியே !

(கு) அர்த்த நாரீசுரர் வரலாறு - பாடல் 63-ன் குறிப்புரையிற் காண்க.

### 78. தியானிக்க

அழுக்கு மெய் கொண்டுளேன், நின்னடி ஏத்தா அறிவிலிநான்
வழுக்கி விழும் போதும் ஐயோ எனவே என் வாயுரைக்கும்
இழுக்கடைந் துள்ளேன் வயிணவித் தாயே ? இரங்கியருள்
செழுக்கம லத்திரள் அன்னநின் சேவடிச் சிந்தனையே.

(உ) நான் அழுக்குமெய் கொண்டவன்; உன் திருவடியை ஏத்தாத முட்டாள்; வழுக்கி விழும்போதுகூட 'ஐயோ' என என் வாயில் வருமே யொழியக் கடவுள் நாமமே வராத வாயையுடைய குறையுள்ளவன் நான் ; தாயே ! உன் தாமரைத் திருவடியைத் தியானிக்கும் சிந்தனையைத் தந்தருளுக.

(கு) " செழுங்கமலத் திரளன நின் சேவடி "
—திருவாசகம், 24-1.

### 79. திருமூலர் வாக்கின் பொருள் யாது?

**அண்ணல் இருப்பார் உனதக் கரத்துளே, அம்மை நீயும்**
**எண்ணி இருப்பாய் அவரக் கரத்துளே என்று சொன்ன**
**திண்ணிய ஞானத் திருமூலர் வாக்கின் சிறப்பதனைக்**
**கண்ணிநின் றேனதன் மெய்ப்பொருள் ஈதென்று காட்டுதியே.**

(உ) தேவீ 'சிவனார் உனக்குரிய மந்திர எழுத்துக்குள் விளங்குவார்; நீ அவருக்குரிய மந்திர எழுத்துக்குள் விளங்குவாய்;' என்று திட ஞானியாகிய திருமூலர் சொல்லியுள்ளார்; அவர் வாக்கின் பெருமையை ஆய்ந்துநிற்கும் எனக்கு அதன் மெய்ப்பொருள் இன்னதென்று காட்டியருளுக!

(கு) "அண்ணல்இருப்ப(து)அவள்அக்கரத்துளே
பெண்ணினல் லாளும் பிரான் அக்கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணியவாளர் பொருளறி வார்களே

—திருமந்திரம், 931. அக்கரம் - அக்ஷரம் - மந்திர எழுத்து. கண்ணி - ஆய்ந்து நினைத்து.

### 80. தேவி அங்குச பாச கரத்தி

**அங்குசம் ஏந்தின என்ஆண வத்தை அடக்குதற்கே**
**பிங்கலை நின்பாசம் என்ஆண வத்தைப் பிணிப்பதற்கே**
**இங்கிதன் உண்மை அறிந்தே உனைநிதம் ஏத்துகின்றேன்**
**கொங்கவிழ் பூவுறை வோரைநின் கண்களாக் கொண்டவளே.**

(உ) மணம் வீசும் தாமரை மலரில் வீற்றிருப்பவர்களாகிய இலக்குமி, சரஸ்வதி என்ற இருவரையும் உனது கண்களாகக் கொண்ட தேவியே! எனது ஆணவத்தை (நான் எனும் அகந்தையாம் மத

யானையை) அடக்குதற்கு வேண்டி நீ (அங்குசம்) தோட்டி என்னும் ஆயுதத்தை ஏந்தி உள்ளாய்! அந்த ஆணவம் என்னும் மதயானையைக் கட்டி நிறுத்தவே பாசக்கயிற்றையும் ஏந்தியுள்ளாய்; இந்த உண்மை தெரிந்தே உன்னை நான் நித்தம் துதித்து வணங்குகின்றேன்.

(கு) இலக்குமியும் சரஸ்வதியும் தேவியின் கண்கள்—(தேவி அனுபூதி - பாடல் 15-ன் குறிப்புரையைப் பார்க்க)

செந்தாமரையில் இலக்குமியும், வெண்டாமரையில் சரஸ்வதியும் வீற்றிருப்பர்; பூ - தாமரை. "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே"—நால்வர் நான்மணி மாலை-40. பொறி - இலக்குமி. ஆணவம் மதயானைக்கு ஒப்பிடப்பட்டது. அந்த யானையை அடக்க அங்குசமும், பிணித்தற்கு (கட்டுதற்கு) ஒரு பாசமும் வேண்டும்.

"ஆணவ வெங்கரி பிணித் தடக்கி"—தணிகைப் புராணம், கடவுள் வாழ்த்து 3.

## பிள்ளைத்தமிழ்ப்பகுதி [81-90]

### 81. காப்புப் பருவம்

சந்தனக் காப்பினன் மேனி அழகும், தளிரனைய
அந்தகைக் காப்பின் அழகும் பொலிகின்ற அம்மணியே!
உந்துங் கருணையில் எவ்வுயிர்க் காப்பும் உனதெனில் நான்
எந்தநற் காப்பினைக் காப்புனக் கென்பேன் எழிலுமையே!

(உ) சந்தனக் காப்பணிந்த மேனி அழகும், திருக்கரத்தில் அணியப்பட்டுள்ள பொற்காப்பின் அழகும் பொலிந்து விளங்கும் தேவீ! எல்லா உயிர்களின் காப்

பும் உனது கருணை விலாசத்துள் அடங்கியிருக்க, எந்தக்காப்பு, யாருடையகாப்பு - உனக்குக் காப்பாகும் என்று நான் உரைக்கவல்லேன்; (எவ்வுயிரையும் காக்கும் தேவிக்குக்காப்பு இதுதான் என்று கூற முடியாது என்றபடி).

(கு) கைக்காப்பு - கைவளை. - காப்புப் பருவம் - இன்ன கடவுள் இந்தக் குழந்தையைக் காக்கவேண்டும் என வேண்டுதல் - காப்புப்பருவத்தது. இது 2-அல்லது 3-ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 82. செங்கீரைப் பருவம்

இங்கீரம் இல்லாத நெஞ்சம் படைத்த எளியனுக்குச்
சங்கீத ஞானம் இலையுனைப் பாடிச் சதா துதிக்க
அங்கீரம் அன்ன அமுத மொழியளே! ஆரணங்கே!
செங்கீரை யாடி அருளென வேண்டுவன் சிற்பரையே!

(உ) பால் போல இனிய மொழிகளையுடைய தேவியே! ஈரம் (கருணை) இல்லாத நெஞ்சினனாகிய எனக்குச் சங்கீத ஞானம் இல்லை - உன்னைப்பாடி எப்போதும் துதிப்பதற்கு; ஆதலால் இசையுடன் பாடி வேண்டாது சாதாரணப் பேச்சுமுறையில்) தேவி! நீ செங்கீரையாடியருள் என வேண்டுவேன்.

(கு) ஈரம் - கருணை. அங்கீரம் - அம் - அழகிய. கீரம் - பால்.

2. செங்கீரை ஆடுதல்: கீர் - சொல்: குழந்தை மொழிபயிலத் தொடங்கும் பருவம். ஒருகாலை முடக்கி, ஒருகாலை நீட்டி, இரு கரங்களையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்த்தி முகத்தை அசைத்து ஆடுதல் செங்கீரையாடுதல். இது 5-ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 83. தாலப் பருவம்

அலகில் கருணைக் குறிப்பால் உளத்தெழும் அன்புடனே
உலகை எஞ் ஞான்றும் விழிப்பொடு காக்கும் உழைப்பருமை
இலகும் உனக்குத் துயில்வரத் தால்பாடல் எங்ஙனம் நான்
விலகிநின் றே "உமா! தாலேலோ" என்று விளம்புவனே.

(உ) தேவி! அளவுக்கு அடங்காத கருணையே அடிப்படையாக எழுந்த அன்புடன் உலகை எப்போதும் விழிப்புடன் காக்கும் உழைப்பினையுடைய உனக்குத் துயில் வரும்படி நான் எப்படித் 'தாலேலோ' பாடுவேன்? (அது முடியாத காரியம்); ஆதலால் ஒருபுறம் விலகி நின்றே "உமாதேவி - தாலேலோ" என்று எனக்குள்ளே பிதற்றிக் கொண்டிருப்பேன்.

(கு) அலகு - அளவு. 3 — தாலப்பருவம்: குழந்தையைத் துயிலச்செய்வோர் "தாலேலோ" எனப்பாடுதல். தாலாட்டு - தால் எனக்குறுகி நிற்கின்றது. இது 8-ஆம் மாதத்தில் இயம்பப்படுவது.

## 84. சப்பாணிப் பருவம்

எப்பாடு பட்டும் இசைஞானம் என்றும் எனக்கிலை நான்
தப்பான ராகதா ளத்துடன் பாடித் தவிப்புறுவேன்
இப்பாரில் நீதான் குரு; ராக தாள இலக்கணத்தைச்
சப்பாணி கொட்டி அதனால் விளக்குக சாம்பவியே.

(உ) சாம்பவி! நான் என்ன பாடுபட்டும் இசை ஞானத்தைப் பெறமுடியவில்லை. அதனால் தப்பான ராகதாளத்துடன் நான் பாடித்தவிக்கிறேன். நீ எனக்குக் குருவாக விளங்கிச் சப்பாணி கொட்டுதலிலிருந்தே எனக்கு ராக தாளம் விளங்கும்படி அருள் புரிவாயாக.

(கு) 4. சப்பாணி கொட்டுதல்: சப்பாணி கொட்டும்படி குழந்தையை வேண்டுதல். கையோடு கையைச் சேர்த்துத் தட்டுதல். சப்தம் பாணி - சப்தம் உண்டாகும்படி தட்டுதல். இது 9-ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 85. முத்தப் பருவம்

கடல்முத்தும் வேண்டேன் கழைமுத்தும் வேண்டேன் கரிதருமவ்
வடல்முத்தும் வேண்டேன், மலைமுத்தும் வேண்டேன் அரவுமிழும்
திடமுத்தும் வேண்டேன் பரசிவையே! நான் தினம்திருத்தி
படமுத்தம் நீதரல் ஒன்றையே வேண்டுவன் பாரினிலே.

(உ) பரசிவையே! எனக்குக் கடலில் உண்டாகும் முத்தும் வேண்டாம்; மூங்கிலில் உண்டாகும் முத்தும் வேண்டாம்; யானை மத்தகத்தில் உண்டாகும் முத்தும் வேண்டாம்; மலையிற் கிடக்கும் முத்தும் வேண்டாம்; பாம்பு உமிழும் முத்தும் வேண்டாம்; நான் நித்தம் திருப்திப்படும்படி உன் வாய்முத்தம் ஒன்றையே விரும்புவன் இவ்வுலகிடையே.

(கு) முத்து பிறக்கும் இடம் இருபது என்பர்:

"தந்தி வராக மருப்பிப்பி பூகம் தழைகதலி, நந்து சலஞ்சலம் மீன்தலை கொக்கு நளினமின்னார், கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின்பல் கட்செவிகார், இந்து உடும்பு கராமுத்தம் ஈனும் இருபதுமே" - ரத்தினச் சுருக்கம்.

அடல் முத்து - வலிமை வாய்ந்த முத்து. திட முத்து - திடமுள்ள முத்து. திருத்திபட - திருப்தி அடையும்படி.

''கழைமுத்து மாலை''-எனத்தொடங்கும் திருப்புகழ் (764)ப் பாடலையும் பார்க்க.

5 - முத்தப் பருவம்: தாயும் பிறரும் "முத்தம் தா" எனக் குழந்தையை வேண்டுதல். இது 11 - ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 86. வருகைப் பருவம்

**தே**வி வருக, விமலை வருக, திரிபுரையென்
ஆவி வருக, அமலை வருக, அடியருளம்
மேவி வருக, நிமலை வருக, விரைவுடன் நீ
தாவி வருக, தமியேன் அழைக்கில் தயாபரையே.

(உ) இச்செய்யுளின் பொருள் வெளிப்படை.

(கு) திரிபுரை - செய்யுள்கள் 30, 52 பாடல்களின் குறிப்புரைகளைப் பார்க்க.

6 - வருகைப் பருவம்: தளர்நடையிட்டுவரும் குழந்தையை வா - என அழைப்பது இப்பருவம். இது 12 - ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 87. அம்புலிப் பருவம்

**தே**டி அலைவர் இவள்தனைக் காணஅத் தேவரெலாம்
பாடி வணங்குவர் பாவலர் நாவலர், உன்னுடனே
ஆடி மகிழ அழைக்கின் றனளிவள் அம்புலியே !
ஓடி வருக விளையாட இந்த உமையுடனே.

(உ) ஏ! அம்புலியே (நிலவே)! இத்தேவியின் காட்சியைப் பெறவேண்டியே தேவரெல்லாம் தேடி அலைகின்றார்கள்; சிறந்த பாவலர்களும் நாவலர்களும் இவளைப் பாடிப்பேசி வணங்குகின்றார்கள். (இத்தகைய பெருமை வாய்ந்த தேவி) உன்னுடன் ஆடி மகிழ

உன்னை அழைக்கிருள். ஆதலால், இந்த "உமா" என்னும் குழந்தையுடன் விளையாட நீ ஓடி வருவாயாக.

(கு) அம்புலி - நிலா. 7 - அம்புலிப் பருவம்: நிலவை நோக்கி இந்தக் குழந்தையுடன் விளையாட வா என்றழைப்பது இப்பருவம். இது 18-ஆம் மாதத்திற் கூறப்படும்.

## 88. அம்மானைப் பருவம்

**அ**ம்மா ! திருவுடன் நேற்றுக் கழல்விளை யாடினை நீ
அம்மால் மனையுடன் முன்நாள்பந் தாடினை ஆதலின்,நீ
சும்மா இருக்கப் போறேன் அவ் விலக்குமிச் சுந்தரியோ
டம்மா வென் அம்மாநீ அம்மானை ஆட்டமின் றுடுகவே.

(உ) அம்மா ! தோழி லக்ஷ்மியுடன் நீ நேற்று கழல் விளையாடினை; அவளுடன் அதற்கு முன்நாள் பந்து விளையாடினை; இன்று நீ சும்மா இருக்கக் கூடாது.; ஆதலால் தோழி லக்ஷ்மியுடன் இன்று நீ அம்மானை ஆட்டம் ஆடியருளுக.

(கு) 8 - அம்மானைப் பருவம்: இரண்டாண்டுகட்கு மேல் நிகழ்வது இப்பருவம்.

## 89. நீராடற் பருவம்

**கா**மம் தலையெடா வண்ணம் தடுத்துக் கனிவுடனே
சாமம் தொறுமுமை யே! உனைப் பாடித் தழுதழுத்துன்
நாமம் பிதற்றிக் கதறுமந் நாட்டத்தர் கண்ணருவி
யாமந்த ஆனந்த மஞ்சன சாலை நீர் ஆடுகவே.

(உ) காமத்தைத் தடுத்து அடக்கி அன்புடனே ஜாமம் தோறும், தேவியே! உன்னைப்பாடி, நா குழற உன் நாமங்களைப் பிதற்றிக் கதறும் நோக்கத்தை

யுடைய அன்பர்களின் ஆநந்தக் கண்ணீர் என்கிற (மஞ்சன சாலே) நீரிலே நீ நீராடி விளையாடுக.

(கு) சாமம் - ஜாமம் - ஏழரை நாழிகை (3-மணி) கொண்ட காலம். தழுதழுத்தல் - நாத்தடுமாறிப் பேசுதல். நாட்டம் - நோக்கம் - விருப்பம்.

“அன்பர் வார்ந்த கண்ணருவி மஞ்சன சாலே”— திரு இசைப்பா, 15-2.

**9 - நீராடற் பருவம் :—** இது 3 ஆண்டுகட்கு மேல் நிகழ்வது.

## 90. பொன்னூசற் பருவம்

**சா**மந்த் வாழ்வின் தளையிற் படாத தவத்தினர் தாம்
போமந்தத் தூய நெறிபடர் வோர்தொழும் பூங்குயிலே !
ஓமந்த மாப்பொருள் நீ எனக் கண்டே உவக்கும் உள
மாமந்தப் பொன்னெடும் ஊசல் அமர்ந்துநீ ஆடுகவே:

(உ) அழிந்து போகும் வாழ்வு என்னும் கட்டில் அகப்படாத தவத்தோர் (போம்) செல்கின்ற அந்தப் பரிசுத்த வழியிற் செல்வோர் தொழுகின்ற தேவீ ! ஓம் என்னும் பிரணவத்தின் பொருள் நீயே ! எனக் கண்டு மகிழ்கின்றவர்களின் “உள்ளம்” என்கின்ற அகன்ற பொன் ஊசலில் (ஊஞ்சலில்) நீ வீற்றிருந்து ஆடி அருளுக.

(கு) **10 - பொன் ஊசலாடுதல் :** இது நான்கு ஆண்டுகட்குமேல் நிகழ்வது. சாம் அந்த வாழ்வு - அழிவுறும் வாழ்வு, வாழ்வு நிலையற்றது. தளை - கட்டு. அடியார் உள்ளம் - தேவிக்கு ஊ(ஞ்) சல் ஆடும் பலகை.

“பாடி ஆடிப் பரவுவார் உள்ளத்து ஆடி” — சம் பந்தர், 1-28-7.

## ஆனந்தலஹரி

### 91. ஓலம்

அம்பிகை ஓலம் அசஞ்சலே ஓலமெம் ஆரணங்கே !
நம்பின வர்க்கருள் நாயகி ஓலமெம் நாரணியே !
வம்பு படைத்த தனத்தினை ஓலமெம் மாதுமையே !
சம்பு மகிழ்ந்திடு சங்கரி ஓலமெம் சாம்பவியே !

(உ) அம்பிகையே ! சஞ்சலமில்லாதவளே ! தேவி ! நம்பினவர்க்கருளும் நாயகீ ! நாரணீ ! கச்சணிந்த தனத்தினளே ! உமாதேவியே ! சிவபிரான் மகிழும் சங்கரீ !சாம்பவீ ! ஓலம், ஓலம், ஓலம்.

(கு) அசஞ்சலை - சஞ்சலம் அற்றவள். நாரணி - துர்க்கை. வம்பு - கச்சு ; ரவிக்கை. ஓலம் - அபயம் வேண்டும் குறிப்புமொழி.

### 92. அபயம்

தேவிக் கபயம்! என் ஆவிக் கபயம் ! அச் சித்தரெலாம்
பாவித் தடிபணி பாவைக் கபயம் ; அப் பத்தருளம்
மேவித் திகழும் விமலைக் கபயம், விளங்குநலக்
காவித் திருமலை யானைய்க் கபயம் கழறுவனே.

(உ) தேவிக்கு, என் ஆவிக்கு, சித்தர்கள் அடி பணியும் பாவைக்கு, பத்தர்கள் உள்ளத்தில் மேவி விளங்கும் பரிசுத்தநாயகிக்கு, விளங்கும் பெருமை கொண்ட காவிமலையான் (திருத்தணிகைமலைக் குமர வேளின்) தாய்க்கு அபயம், அபயம், அபயம் என்று கூறுவேன்.

(கு) பாவித்து - தியானித்து. விமலை - பரிசுத்தமா யிருப்பவள். காவித்திருமலையான் ஆய்க்கு அபயம்

காவித் திருமலை - திருத்தணி. [காப்புச் செய்யுளின் குறிப்புரை பார்க்க.] ஆய் - தாய். கழறுவன் - சொல்வேன். அபயம் - அடைக்கலம்.

## 93. சரணம்

சரணம் நிமலை, சரணம் கமலை, சரணுனக்கே
சரணம் அமலை, சரணம் விமலை, சரணுனக்கே
சரணம் பவதி, சரணம் யுவதி, சரணுனக்கே
சரணம் அமையே, சரணம் உமையே, சரணுனக்கே.

(உ) நிமலையே! கமலையே! அமலையே! விமலையே! பவதீ! யுவதீ! அ(ம்)மையே! உமையே! சரணம், சரணம், சரணம்.

(கு) நிமலை, விமலை - பரிசுத்தமுள்ளவள். கமலை - லக்ஷ்மி. அமலை - மலம் நீங்கினவள். பவதி - பார்வதி. யுவதி - என்றும் இளையவள். அமை - அம்மை; தாய்.

## 94. அடைக்கலம்

அடைக்கலம் நீலீ, அடைக்கலம் சூலீ, அடைக்கலமே
அடைக்கலம் வீரீ, அடைக்கலம் சூரீ, அடைக்கலமே
அடைக்கலம் கன்னீ, அடைக்கலம் பொன்னீ, அடைக்கலமே
அடைக்கலம் தேவீ, அடைக்கலம் ஆவீ, அடைக்கலமே.

(உ) நீலி! சூலி! வீரி! சூரி! கன்னி! பொன்னி! தேவி! ஆவி! நீயே எனக்கு அடைக்கலப் பொருள். (உனக்கே நான் அடைக்கலம் என்றபடி).

(கு) நீலி - நீலநிற முடையவள். சூலி - சூலத்தை ஏந்தினவள். வீரி, சூரி - வீரம், சூரம் உடையவள். கன்னி - இளமை அழியாதவள். பொன்னி - லக்ஷ்மி. ஆவி - உயிர்.

## 95. போற்றி

மங்கலை போற்றி மகேசுரி போற்றி மதிவதனப்
பிங்கலை போற்றி பத் மாசனி போற்றி பெரும்புகழ்சேர்
சங்கரி போற்றிசு மங்கலி போற்றி சதாசிவத்தின்
பங்குறை பூரணி நாரணி போற்றி பராபரையே.

(உ) மங்கலை! மகேசுரி! பிங்கலை! பத்மாஸனீ! சங்கரி! சுமங்கலி! பூரணி! நாரணி! உனைப் பலமுறை போற்றுகின்றேன்.

(கு) மங்கலை, சுமங்கலி - என்றும் சுமங்கலியாக இருப்பவள். பிங்கலை - பொன்னிறம் படைத்தவள். பத்மாசனி - தாமரையில் வீற்றிருப்பவள் - செய்யுள்-26-குறிப்புரை பார்க்க. அம்பிகை திருமாலிடத்திலிருந்து காத்தல் தொழிலை நடத்துவதால் "நாராயணி" என்று பெயர் [செய்யுள் 32-ன் குறிப்புரையைப் பார்க்க]. சங்கரி - இன்பம் உண்டாக்குபவள்.

## 96. நமோநம

சூரி நமோநம சூலி நமோநம தொண்டருப
காரி நமோநம கௌரி நமோநம கற்பருளும்
நாரி நமோநம நீலி நமோநம நற்கருணை
வாரி நமோநம வீரி நமோநம வைணவியே!

(உ) சூரீ, சூலீ, உபகாரீ, கௌரீ, நாரீ, நீலீ, கருணை வாரி (கடல்), வீரீ - உன்னை நமஸ்கரிக்கின்றேன்; நமஸ்கரிக்கின்றேன்.

(கு) சூரி, சூலி, வீரி, நீலி - செய்யுள் 94-இன் குறிப்பைப் பார்க்க. கௌரி - நாரி=பார்வதி. "நாரி பாகம் நயந்து"—சம்பந்தர் 53-3. கருணைவாரி - கருணைக் கடல். (வாரி - கடல்).

## 97. ஜேஜெய

ஜேஜெய காகினி ஜேஜெய ஹாகினி சிற்சுகமே !
ஜேஜெய சாகினி ஜேஜெய மோகினி சிற்பரையே !
ஜேஜெய மங்கலே ஜேஜெய பிங்கலே சின்மயமே !
ஜேஜெய சூலினி ஜேஜெய மாலினி தேன்மொழியே !

(உ) தேன் போலும் மொழிகளையுடைய தேவி ! காகினி ! ஹாகினி ! சாகினி ! மோகினி ! மங்கலே ! பிங்கலே ! சூலினி ! மாலினி ! உனக்கு ஜேஜெய ! வெற்றி ! வெற்றி !

(கு) சுவாதிஷ்டானத்தில் ஆறிதழ்த் தாமரையில் வீற்றிருக்கும் திருக்கோலம் காகினி. காகினி-பொன்னிற முடையவள். ஹாகினி - ஆக்ஞை என்னும் ஆதாரத்தில் ஈரிதழ்த் தாமரையில் ஆறுமுகத்தோடு எழுந்தருளி யிருக்கும் அம்பிகை, வெண்ணிறமுடையவள். மூலா தாரத்தில் நான்கிதழ்த் தாமரையில் ஐந்து முகத்தோடு வீற்றிருக்கும் திருக்கோலம். சாகினி ; சாகினி-கரியநிற முடையவள். மோகினி - ''அந்தரி பார்வதி மோகினி'' — திருப்புகழ்-812. பிங்கலே, மங்கலே - செய்யுள் 95-இன் குறிப்பைப் பார்க்க. சூலினி -திரிசூலத்தைத் தரித்தவள், மாலினி - மாலையை அணிந்தவள். 'மாலின்யை'' — (லலிதா - 455).

## 98. மங்களம்

மங்களம் நாரணி மங்களம் பூரணி மாலினியே !
மங்களம் காரணி மங்களம் ஆரணி மாமணியே !
மங்களம் சாமளே மங்களம் கோமளே மாதுமையே !
மங்களம் சுந்தரீ மங்களம் அந்தரீ வைணவியே !

(உ) வைணவித் தேவியே! நாரணி! பூரணி! காரணி! ஆரணி! சாமளை! கோமளை! சுந்தரி! அந்தரி! உனக்கு மங்களம்; மங்களம்.

(கு) நாரணி - பாடல் 95-இன் குறிப்புரை பார்க்க. சுந்தரி - அழகி; அபிராமி. அந்தரி - பராகாச வடிவை யுடையவள். சாமளை - (சாமள) ஒருவித பச்சை நிறத்தையுடையவள். கோமளை - அழகி. ஆரணி - வேதமுதல்வி. காரணி - எதற்கும் காரணமா யிருப்ப வள். "செனனி சங்கரி ஆரணி நாரணி விமலி எண் குண பூரணி காரணி"—திருப்புகழ் 876.

## 99. வாழி

யாழினும் மிக்க இனிய மொழிகொள் எழிலரசீ !
ஏழிசைச் செல்வீ ! சகல கலைக்கும் இருப்பிடமே !
காழியில் வந்த கவுணியன் போற்றுமெங் கற்பரசீ !
வாழிநீ வாழி விமலைநீ வாழி வயிணவியே.

(உ) யாழினும் மிகஇனிய மொழிகொள் அரசீ! ஏழிசை வல்லவளே! சகல கலைகளுக்கும் இருப்பிட மானவளே! சீகாழியில் அவதரித்த கவுணிய கோத் திரத்துச் சம்பந்தமூர்த்தி போற்றித் துதிக்கும் கற்பரசீ! நீ வாழி! வாழி!

(கு) வேதாரண்யத்துத் தேவியின் பெயர் "யாழைப் பழித்த மொழி அம்மை" "யாழைப் பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்"—சுந்தரர், 7-71-1 சம்பந்தர் கவுணிய கோத்திரம் - செய்யுள் 31 பார்க்க. அவர் போற்றினதைச் செய்யுள்-69 குறிப்புரையிற் பார்க்க.

## 100. வாழி

வாழி நின் நாமம் மறவாது நாளும் வழுத்துபவர்
வாழி அலங்கார நூலிதை ஓதி மகிழ்பவர்கள்
வாழி திருமுல்லை வாயிலில் நீவாழ் திருத்தளிதான்
வாழி நினதடி யார் குழு எல்லாம் வயிணவியே.

(உ) பொருள் வெளிப்படை.

(கு) தளி - கோயில்.

*(தேவி அலங்காரம் முற்றும்)

---

*இந்நூலுள் பாடல்கள் 1-12 உயிர் வருக்க மாலை வகையில் "அ" முதல் "ஔ" வரை வருதல் காண்க.

# தேவி அலங்காரம்

## விஷயக் குறிப்பகராதி

[எண்கள் - பாடலின் எண்]

I

தலங்கள்


கஞ்சி, (காஞ்சீபுரம்) 24, 41, 55, 59 72.
காசி - 24
திரு அண்ணுமலை - 56, 63.
திருவாரூர் - 37
திரு ஆனைக்கா - 16, 56
திருக் கழுக்குன்றம் - 56.
திருத்தணி (காவி) கிரி-காப்பு, 22, 30, 62.
திருநெல்வேலி (நெல்லை) - 39, 55
திருவெண்காடு - 45
திருவேற்காடு - 22
தில்லை (சிதம்பரம்) - 3, 55
நாகை - 24
மதுரை - 24, 55


II

தேவியைப் பற்றிய விஷயங்கள்


அகிலமும் தோற்றுவித்து ஒடுக்குவள் - 26
அங்குசபாச கரத்தி - 80
அர்த்தநாரீசுரர் - சிவன் - பிறிதொரு பாதி - 63, 77
அறம் வளர்த்தது - 59, 74
ஆருதாரத்தின் முடிவில் விளங்குதல் - 44
இடது பாகம் பெறத்தவம் செய்தது - 63
ஓம் பொருள் தேவி - 11, 90
கடப்பமலர் விருப்பம் - 13, 60
கண்கள் - இலக்குமி - சரஸ்வதி - 80
சந்தனக் காப்பு - 36, 81
சுந்தரமூர்த்திக்கு மின்னற் கொடியாய் வழி காட்டியது - 38
தவம் செய்ததும், பூசித்த தவ வலிமையும் - 19, 41
பூசித்து, சிவனைத் தழுவினது - 41, 72
தாளத்துக்கு ஓசைதந்தது -31
திரிபுரை - பொருள் - 30,52
திருப்பணி செய்வோருக்கு உதவுவது - 57
திருமால் பூசித்துச் சக்கரம் பெற்றது - 23.
திருமாலின் தங்கை - 19. 23, 29, 31.
திருமேனிப் பாம்பின் தவம் - 34
நடுவீற்றிருத்தல் - 76

சிவனார் அக்ஷரத்தின் நடுவில் இருப்பது - 79
சிவனார் நடுவில் - 76
நித்ய கல்யாணி - 72
பாசாங்குசம் கரத்தில் - 80
பாண்டி நாட்டை ஆண்டது - 14
பாம்பாபரணம் - 15, 16.
பால் கொடுத்தது சம்பந்தருக்கு - 75
மகிடாசுரனை அட்டது - 16
வேல் கொடுத்தது (முருகவேளுக்கு) - 75

III

தேவிதிருநாமங்கள் (தலங்கள்)

அண்ணாமலை - உண்ணாமுலை - 56
ஆனைக்கா - அகிலாண்டநாயகி - 16, 56
கஞ்சி - காமாட்சி - 24, 55
கழுக் குன்றம் - திரிபுரசுந்தரி - 56
காசி - விசாலாட்சி - 24
தில்லைச் சிவகாமி - 55
நாகை - நீலாயதாட்சி - 24
நெல்லை - வடிவுடைத் தேவி, (காந்திமதி)39, 55
மதுரை - மீனாட்சி 14, 24, 55

IV

தேவதைகள்

இலக்குமி - 40, 80, 88.
சசி - 40
சரஸ்வதி - 40, 80

V

பெரியோரும் பிறரும்

அப்பர் - 25, 53, 73
அபிராமிப்பட்டர் - 11, 64
அமர்நீதி நாயனார் - 41
அருணகிரிநாதர் - 68
ஆதிசங்கரர் - 71
ஆதிசேடன் - 29
காளமேகன் - 65
காளிதாசர் - 70
குமரகுருபரர் - 67
சம்பந்தர் - 31, 66, 69, 75 99
சுந்தரர் - 38
தக்கன் - 66
திருமூலர் - 79
பிருங்கி முனிவர் - 63
மன்மதன் - 75
மாணிக்கவாசகர் - 43

VI

முக்கிய விஷயங்கள்

அறம் (32) 59, 74
ஆனந்த லஹரிப் பாடல்கள் - 91-100

ஏற்றின் நடை - 45
கந்தரலங்காரச் சொல்லாட்சி - 9, 29, 30. 62
காயமே கோயில் - 43
கோள்கள் (கிரகங்கள்)-69.
சௌந்தர்ய லஹரி - 71
திருப்பணி செய்தவர் - 57
திருமந்திரச் சொல் பொருளாட்சி - 79
திருமால் சக்கரம் பெறக் கண்மலரிட்டுப் பூசித்தது - 23
திருவாசகச் சொற்பொருளாட்சி - 76, 78
பங்கயன் ஏட்டிற் படாவகை - 58
பள்ளம் பாய் நீர் - 27, 41
பாகோ பார்ம் - 1, 2
பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் - 81-90
லஹரிப் பாடல்கள் - 91 - 100
வீழின் 'ஐயோ' எனல் - 78



# தேவிப் பத்து

தணிகைமணி, ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை யவர்களது மனைவி, திருமதி சிவா அம்மையார் பாடி ஷையாரால் பார்வையிடப்பட்டது.

## முதற் பத்து

### காப்பு

அணைந்து சொப்பனத் தேஅருள் ஆசிசொல்
துணைவி யாமளை வைணவித் தூயட்கே
இணையில் பாடல் இயம்ப அருள்புரி
தணிகை மேவுமெம் ஆபத் சகாயரே.

(உ) காப்பு: கனவிலே தோன்றி எனக்கு அருள் ஆசிகூறின வைணவி தேவியின்மீது நல்ல பாடல்களைப் பாடத் திருத்தணிகையில் வீற்றிருக்கும் ஆபத் சகாய விநாயக மூர்த்தியே! நீ அருள் புரிவாயாக!

### வேண்டுகோள்

கல்லினுட் டேரை வாழக் காத்தருள் புரியும் உன்றன்
சொல்லரும் கருணை கண்டே சுந்தரீ எனது தூய
நல்லசீர்ப் புகழைச் சொல்ல நாடினேன் தாயே! என்சொல்
நெல்லினுட் பதர் நிகர்க்கும் நிலைமைய தெனினும் ஏற்பாய்.

(உ) கல்லினுள்ளே உள்ள தேரை வாழும்படியாகக் காத்து அருள்புரியும் உனது கருணையைக் கண்டே, தேவீ! உனது நல்ல புகழைச் சொல்ல நான் விரும்பினேன். எனது பாடல் நெற்பதர் போலக் கீழாந் தன்மையதெனினும் ஏற்றருளுக.

## நூல்

### 1. அருள் வேண்டல்

அருவிநீர்க் கங்கை மதியுடன் சூடி அருள்வழங்கும்
குருபரன் தன்னிடம் கூடிடும் தேவீ ! குருகுருவாம்
முருகனை ஈன்ற முழுமுதற் செல்வியே ! முல்லைவனம்
வருபெருந் தேவீ ! அடியேற் கருளுதி வைணவியே !

(உ) கங்கையையும், திங்களையும் சூடி அருள் வழங்கும் சிவனது தேவியே ! குருமூர்த்தியாம் சிவனுக்கும் குருவாக விளங்கின முருகவேளின் தாயே ! திருமுல்லைவாயிலில் எழுந்தருளியுள்ள வைணவித் தேவி அடியேனுக்கு அருள்புரிவாயாக.

### 2. வினையற

காலைக் கதிர்வரு வேளையி லேவந்து காட்சிதந்த
வாலை வயிரவி வைணவி மாலினி ! வஞ்ச நெஞ்சம்
ஏலெற்கு நல்லறி வூட்டியென் பாச இருவினைகள்
ஓலிட் டெனைவிட் டடிபெயர்த் தோட உவந்தருளே.

(உ) அதிகாலையில் அடியேனுக்குக் காட்சிதந்த வைணவித் தாயே ! வஞ்சநெஞ்சம் கொண்ட எனக்கு நல்லறிவு தந்து எனது வினைகள் அற்று ஒழிய அருள் புரிக.

### 3. துதி

மரகதத் தாயின் மனமே மயிலா மகிழ்ந்ததையோர்
துரகத மாக்கொள் துரையினற் றுயே ! சுபரறுவர்
பரகதி காணப் பரங்குன் றதனிற் பதமுதவும்
குரகதச் சூராரி கையிற் படைதந்த கோமளமே !

(உ) ('ஆண்டவன் பிச்சை' என்னும் பக்த சிரோமணியாகிய) மரகதம்மா எனப் பெயர் கொண்ட தாயின் மனமே - தனது மயில்வாகனம் போல - வீற்றிருக்கும் இடமாகக் கொண்ட துரை - முருகவேளின் தாயே! புண்ணியர்களான ஆறு அன்பர்கள் பரகதி பெறும்படி, திருப்பரங்குன்றத்தில் உதவின முருக வேளுக்கு வேற்படையைத் தந்த தேவியே!

(கு) 1. மரகதம்மா என்பவர் மகாபக்த சிரோமணி; அந்தணர் குலத்து அருட்கவி.

2. பராசர முனிவரின் புத்திரர்கள் அறுவர் சாபத்தாற் சரவணப் பொய்கையில் மீன்களாகக் கிடந்தனர். முருகவேளுக்கு உமையம்மை தந்த பால் அப்பொய்கையிற் சிதறினதை உண்டு சாபம் தீரப் பெற்றனர். முருகவேள் இவர்களுக்குத் திருப்பரங்குன்றத்தில் ஞானோபதேசம் ; செய்தனர் - [கந்தபுராணம் I-13-33; I-25-24; V-1-23.]

3. சூரனுக்குக் குதிரைமுகம் என்று தக்கயாகப் பரணி 162, 231 உரை கூறுகின்றது.

"திருமுருகாற்றுப்படை" (57) - "இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை" - "குதிரை முகமும் மக்கள் உடலுங் கொண்ட சூரபன்மா". சூரனைச் சம்மாரம் செய்யத் தேவிவேற்படை கொடுத்தாள் முருகவேளுக்கு. தேவி அலங்காரம் - செய்யுள் 75-இன் குறிப்புரையைப் பார்க்க.

: துரகதம்=குரகதம்=குதிரை, சூராரி - சூரனுக்குப் பகைவராம் முருகவேள்.

### 4. துதி

முகிலி: தென்னும் இருட்குழல் ஏந்தும் முழுமுதலே !
நகிலிணை கொண்டிடும் நற்பெருந் தேவீ ! நல அமுதே !
அகிலுறு நற்புகை இட்டு வணங்கும் அடியவர்க்கா
மகிதலம் வந்துறு மாதுமை யேஎங்கள் வைணவியே !

(உ) கருமேகம் என்னும்படியான கரிய கூந்தலை உடைய தேவியே! தனபாரங்களைக் கொண்ட பெருந் தேவியே! அகிற்புகையிட்டு வணங்கும் அடியவர் பொருட்டு இப்பூதலத்தே வந்து வீற்றிருக்கும் உமா தேவியே! வைணவியே!

### 5. கனவில் வந்து ஆண்ட அருள்

நெஞ்சம் அடக்கி நினைபவர் யார்க்கு(ம்)நீ நீள்விசும்பைத்
தஞ்சத் தருளுவை என்பது சத்தியம் சத்தியமே
கஞ்சம் புரையுநின் தாளிணை நோவக் கனவில் வந்தே
அஞ்ச லென் றுண்டனை தாயே ! என் னேஉன் அருட்குணமே.

(உ) மனத்தை ஒருவழியாக அடக்கி நினைக்கும் அன்பர்களுக்கு அவர்தம் சரணாகதிக்குப் பரிசாக விண் ஆட்சியை அருளுவாய் தேவி நீ என்பது சத்தியம். உன் திருவடி நோவ என் கனவில் வந்து "அஞ்சல்" எனக்கூறி என்னை ஆண்டருளினாய்! தேவீ! என்னே உனது கருணை!

### 6. என்னைக் கைவிடாதே

உன்றன் மலரடி போற்றாத என்னை ஒருபொருளா
நன்று மதித்தென் கனவினி லேவந்த நல்விருந்தே !
மன்றற் பொழில்சூழ் திருமுல்லை வாயில்வாழ் வைணவியே !
அன் றுபோல் என் றும் எனைவிட் டகலா தமர்ந்தருளே.

(உ) திருமுல்லை வாயிலில் வாழும் வைணவித் தாயே! உன் திருவடியைப் போற்றுதவளாகிய என்னை ஒரு பொருளாக நீ மதித்து என் கனவிலே வந்தனையே! அன்று வந்ததுபோல என்றைக்கும் நீ என்னைவிட்டு அகலாது இருந்து அருள்புரிவாயாக.

### 7. தரிசனப் பேற்றால் பட்ட மரம் தளிர்த்தது

பட்ட மரமன்ன என்னெஞ்சம் நின்கோலம் பார்த்தவுடன்
சட்டென்று நன்கு தழைத்ததே இஃதென்ன சாதுரியம்!
விட்ட குறையுண்டு போலும் இனியான் விடேன்உனை, அப்
பட்டர் பிரான்பார்த்த சாரதி யார்தொழு பார்ப்பதியே.

(உ) பட்டுப்போன மரம்போல இருந்த என் மனம், தாயே! உனது திருக் கோலத்தைப் பார்த்தவுடன் சட்டென்று நன்கு தழைத்துத் தளிர்த்தது. இது என்ன ஆச்சரியம்! விட்டகுறை என்பார்களே! அந்தப் பாக்கியம் போலும் இது! இனி உன்னை யான் விடமாட்டேன். புனிதமூர்த்தியாம் ஸ்ரீபார்த்தசாரதியார் தொழுகின்ற பார்வதித் தேவியே!

### 8. கவலை ஒழிய

பவளக் கொடியிற் பழுத்த செவ்வாயுடைப் பார்ப்பதியே!
துவளப் படுமென்றன் நெஞ்சமும் கொண்டாய், துளசியென்று
நுவலப் படும்பெயர் கொண்டவுன் பொன்னடி நோற்கு மென்னைக்
கவலைப் படும்படி செய்வையோ வைணவிக் கற்பகமே.

(உ) பவளக் கொடிபோலச் சிவந்த வாயை யுடைய பார்ப்பதியே! வாடிக்கிடந்த என் நெஞ்சிற் குடி கொண்டாய்! 'துளசி' என்னும் உனது திருநாமத் துடனே எனக்கு அருள் புரிந்த உன் பொன்னடியையே தியானிக்கும் என்னைக் கவலைப்படும்படி செய்வாயோ தேவி! வைணவிக் கற்பகமே!

(கு) தேவி இந் நூலாசிரியையின் கனவில் தோன்றித் தன் பெயர் "துளசி" என்று கூறினது வரலாறு. (2-ஆம் பத்து 4-ஆம் செய்யுளைப் பார்க்க)

"பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும்"-அபிராமி அந்தாதி - 38.

## 9. தேவியின் கருணை

கண்ணுதல் பாதமே கண்ணுற வைத்த கருணையென்னே !
நண்ணுதற் கில்லதோர் நாயிற் கடைப்பட்ட நாயினன்முன்
பெண்ணிவள் என்ற பரிவுடன் நீ எனைப் பேணி நின்ருய்
எண்ணுதல் இன்றி எளிமையாய் வந்தெனை ஏன்றுகொண்டே.

(உ) தேவி! சிவபிரானது திருவடிச் சிந்தனையை எனக்குத் தந்த உனது கருணையை என்னென்று கூறுவேன்? கிட்டே அணுகுதற்கும் யோக்கியம் இல்லாத நாயினும் கடைப்பட்ட என்னை இவள் பெண் என்ற பரிவால் (அன்பால்) நீ எளியையாய் வந்து வேறு யோசனையின்றி ஏன்று கொண்டு விரும்புகின்ருய்!

(கு) கண்ணுதல் - நுதற்கண்ணன். பரசிவன்; கண்ணுற - தியானிக்க. பரிவு - அன்பு.

## 10. கனவிற் காட்சி

திருமுல்லை வாயில்வாழ் வைணவித் தேவியைத் தென்தணிகை
ஒரு நல்ல சேயைக் கனவினில் நான்காண உற்றபேற்றை
வெருவுள்ள யானோஎன் நாவினுல் இன்று விளம்ப வல்லேன்
வருநல்ல அன்பரை ஆள்தேவி என்னையும் வாழ்த்தினளே.

(உ) திருமுல்லை வாயில் வைணவித் தேவியையும் - தேவியின் சேய் - தணிகைக் குமரனையும் நான் கனவில்கண்ட பேற்றினை அஞ்சும் உள்ளத்தனாகிய நான் சொல்ல வல்லனோ! தம்மை வந்து தொழும் அன்பரை ஆட்கொள்ளும் தேவி என்னையும் வாழ்த்தினள்; என்ன புண்ணியம் இது!

(முதற்பத்து உரையாதிய முற்றும்)

# தேவிப் பத்து

## இரண்டாம் பத்து

### 1. தக்ஷயாக தண்டனைகள்

**வே**தனும் மாலுற நின்றனன் வேள்வியில் வேடைகொண்ட
ஆதவர் கண்பல் இழந்தனர், அந்தோ அருகுநின்ற
காதகன் இந்திரன் பங்கம் அடைந்து கலக்கமுற்றான்
போதகத் தேவிநின் ஆணை அதன்படி பொற்பிழந்தே.

(உ) ஸ்ரீஞான உபதேச மூர்த்தியாம் தேவீ! உன் ஆணைப்படி (தண்டிக்கப்பட்ட) பிரமன் மயங்கி நின்றான்; வேள்விக்கு ஆசையுடன் வந்த சூரியர் கண்ணையும், பல்லையும் இழந்தனர்; பக்கத்தேநின்ற கொடியவன் இந்திரன் அவமானப் பட்டுக் கலங்கினன்.

(கு) தக்ஷ யாகத்தில் - பிரமன் குட்டுண்டு வீழ்ந் தான். ஒரு சூரியன் கண் இழந்தான், ஒரு சூரியன் பல் இழந்தான். குயில் உருவம் எடுத்த இந்திரன் வாளால் அறுபட்டு வீழ்ந்தான். கந்தபுராணம் - யாகசங்காரப் படலம், 6-20, 21; 22, 25, 26, 28, 29.

காதகன் - கொடியவன். போதகம் - உபதேசம். ஆதவர் - சூரியர்கள்.

### 2. தேவியின் தன்மை

**ஒ**ளியாகி எங்கும் உயிர்க்குயி ராகி உணர்வதுமாய்த்
தெளிவாகி உள்ளும் அடியவர் காண்கின்ற செல்வமுமாய்
அளிசாரு நெஞ்சில் திரு ஆடல் கொண்ட அமுதமுமாய்
மிளிர்வாய் திருமுல்லை வாயிலில் வாழ்கின்ற வித்தகியே.

(உ) திருமுல்லை வாயிலில் வாழும் ஞானசொரு பியே! ஒளியாகவும், உயிர்க்குயிராகவும், உணர்வாக வும், தெளிவுடன் தியானிக்கும் அடியவர் காண்கின்ற செல்வமாகவும், அன்பு ததும்பும் உள்ளத்தினர் நெஞ்

சில் திருவிளையாடல் செய்யும் அமுதமாகவும் நீ விளங்குகின்றாய் !

(கு) அளி - அன்பு. மிளிர்வாய் - விளங்குவாய்.

### 3. உருக

உன்னை நினைந்தே உருகி உருகி உணர்வுபெற
என்னைநீ ஆதரித் தாட்கொள்வ தென்றென ஏங்குகின்றேன்
மின்னை முன் னேவென்ற நுண்ணிடைத் தாயே ! விளக்கொளியே !
புன்னை வளர்பொழில் முல்லை வனத்துப் பொலன்கொடியே.

(உ) புன்னைமரப் பொழில் சூழும் திருமுல்லை வனத்துப் பொற்கொடியே! உன்னை நினைந்தே உருகி உணர்வுபெற என்று நீ என்னை ஆட்கொள்வாய் என ஏங்குகின்றேன். மின்னைவென்ற இடையை உடைய தாயே!

(கு) ''மின்னை முன்னேவென்ற நுண்ணிடை''— கம்ப ராமாயணம். (மாரீசன்வதை - 76).

### 4. தேவியின் திருவருள்

என்னையும் ஓர்பொருள் என்னக் கருதிநீ என் கனவில்
இன்னகை பூண்டு துளசிஎன் நாமம் என உரைத்தாய்
பின்னையும் வந்துன் திருவடி தந்தென் பிறவியெனும்
இன்னலை நீக்க இரங்குதி யார்க்கும் இனியவளே !

(உ) என்னை ஒருபொருளாகக் கருதி என்கனவிற் புன்னகையுடன் வந்து ''என் பெயர் துளசி'' என்று உரைத்தாய்! யார்க்கும் இனியவளாம் தேவி! நீ மறுமுறை வந்து உனது திருவடியைத் தந்து என் பிறவித் துக்கத்தை நீக்கி அருளுக.

(கு) தேவி - தன் பெயர் 'துளசி' என்றதை முதற் பத்தில் 8-ஆம் செய்யுளிற் பார்க்க. இன்னல் - துன்பம்.

## 5. ஆண்டருளுக

ஒன்றை நினைந்தே உருகும் படிக்கோ ருணர்வுதந்தே
என்றெனை ஏன்று கொண் டாண்டருள் வாய் நீ இயம்பியருள்
பன்றிக் கிரங்கின பண்பன் மகிழ்கின்ற பார்ப்பதியே!
அன்றமா வாசையைப் பௌர்ணமி யாச்செய்த ஆரணங்கே!

(உ) ஒப்பற்ற ஒரு பொருளாகிய உன்னை நினைந்தே உருகும்படியான உணர்வைத் தந்து என்றைக்கு என்னை நீ ஏன்று ஆண்டருளுவாய்? சொல்லியருள். பன்றிக்கு இரங்கிய கருணையனும் சிவபிரான் மகிழும் தேவியே! அன்று அமாவாசையைப் பௌர்ணமியாகத் திகழச் செய்த அம்பிகையே!

(கு) 1. பாண்டியனோடு சண்டை செய்து ஒரு பன்றி அரசும், அதன் பெட்டையும் இறந்துபட, அப் பன்றிகளின் குட்டிகள் பன்னிரண்டும் முலைப்பால் இலாது வாடின; பசியால் வருத்தமுற்றன; அதைக் கண்ட மதுரைச் சோமசுந்தரப் பெருமானார் அக்குட்டி களுக்கு இரங்கித் தாய்ப் பன்றியின் வடிவுடன் போய் முலைப்பால் கொடுத்து அவைகளுக்கு ஞானத்தை யும், கல்வியையும் தந்து, பன்றி முகக் குமரர்க ளாக்கிப் பாண்டியனுக்கு மந்திரிமார்களாக்கினர் என்பது வரலாறு.—திருவிளையாடற் புராணம்— பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த திருவிளையாடல், மந்திரிக ளாக்கிய திருவிளையாடல்.

(2) அமாவாசையைப் பௌர்ணமி ஆக்கினது.— தேவி அலங்காரம் செய்யுள் 11-இன் குறிப்பைப் பார்க்க.

## 6. நல்வினைக்கு ஆளாக்குக

இருவினைக் காளாய் இருந்திடும் என்றன் இழுக்கனைத்தும்
ஒருவிநின் பொன்னடிக் காளாம் மனதை உவந்தருள்வாய்
செருவினிற் சென்று மகிடா சுரனைமுன் செற்றவளே!
மருவளர் முல்லை வனத்தமர் எங்கள் வயிணவியே!

(உ) முல்லை வனத்துத் தேவியே! மகிடாசுரனை அடக்கினவளே! இருவினைக்கு ஆளாய் இருக்கின்ற நான் என் குறைகள் நீங்கி உன் பொன்னடிக்கு ஆளாகும்படி அருளுக.

(கு) இருவினை - நல்வினை, தீவினை. ஒருவி - நீங்கி. இழுக்கு - குறைபாடுகள். செரு - போர். மரு - நறு மணம். மகிடாசுரன் - தேவி அலங்காரம், செய்யுள் 16-இன் குறிப்பைப் பார்க்க.

## 7. உபதேசம் பெற

முக்குண ஆட்சியிற் பட்டு மயங்குவேன் மும்மலத்திற்
சிக்குண் டவளாய்ப் பயனிலி யாகித் திரிதருவேன்
இக்குநின் செம்மொழி யாலெனக் கோர்சொல் இயம்புதிநீ
அக்குடன் ஆரம் அணியும் பரன்மகிழ் ஆரணங்கே.

(உ) முக்குணங்களின் வசப்பட்டு மயங்குகின்றேன். மும்மலங்களிற் சிக்குண்டு வீணே திரிகின்றேன். சிவபிரான் மகிழும் தேவியே! கரும்பன்ன உன்மொழி கொண்டு ஓர் (உபதேசச்) சொல்லைச் சொல்லியருளுக.

(கு) முக்குணம் - ராஜசம், தாமதம், சாத்விகம். மும்மலம் - ஆணவம், மாயை, கன்மம். இக்கு - கரும்பு. அக்கு - எலும்பு. ஆரம் - மாலை.

### 8. ஒடுக்க நிலை பெற

கரணங்கள் நான்கும் கழன்றிட, உன்றன் கழலருளால்
திரணங்க ளாயவை யாக நினைந்தருள் செய்திடுநீ
அரணங்கள் மூன்றும் பொடிப்பொடி யாக அழித்தவளே
மரணங்கொள் கேட்டை ஒழித்திட வல்ல வயிணவியே !

(உ) திரிபுரங்களை எரித்தவளே! மரணத்தை ஒழிக்கவல்ல வைணவியே! என் கரணங்கள் ஒடுங்க அருள்புரிதி!

(கு) 1. கரணங்கள் நான்கு - மனம், புத்தி, அகங்காரம், சித்தம். கரணங்கள் அழியின் சும்மா இருக்கும் நிலை கிட்டும்.

"கரணமு மரணமு மலமொடு..வினைகெட நினை காலாந்தரி"—தேவேந்திர சங்க வகுப்பு.

2. திரணம் - துரும்பு. அரணம் - மதில்.

3. தேவி - திரிபுரத்தை அழித்தது—'புரம்நொடியினில் எரி செய்த அபிராமி"—திருப்புகழ் 304. தேவி மரணத்தையும் அழிப்பாள்—"நாயகிதன் அடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே"—அபிராமி அந்தாதி, 51.

### 9. ஐம்புலன்களை வெல்ல

ஐம்புலச் சேட்டையை எவ்வாறு வெல்வேன் அழகுவல்லீ !
கொம்பனை யாளே ! நினதடி ஏத்திக் குழைவதற்கே
செம்மனம் ஈவாய் புவனங்கள் எங்கும் செறிந்தவளே !
வம்புலாம் முல்லை வனத்தினில் மேவும் வயிணவியே !

(உ) முல்லைவனத்துத் தேவீ! உலகெங்கும் நிறைந்தவளே! ஐம்புலன்களின் சேஷ்டையை நான் எவ்வாறு

வெல்வேன்! உன் திருவடியைத் துதித்து உருகும் படியான மனத்தைத் தந்தருளுக!

(கு) ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். வம்பு - வாசனை.

### 10. கண் பார்த்தருள

ஆரு தரங்களின் மீதே விளங்கும் அமுது! பெரும்
பேருக வேவரம் வேண்டுவன் இங்கென்றன் பீழை எல்லாம்
வேருக, என்றன் பிறவிக் கிடமாம் வினைகளெல்லாம்
நீருக, நீ எனைக் கண்பார்த் தருளுதி நின்மலையே.

(உ) ஆறு ஆதாரங்களின் மீது விளங்கும் அமுதே! என் துக்கம் எல்லாம் நீங்கவும், பிறவிக்கு இடமான வினைகள் தூள்படவும் கண்பார்த்தருளுக- என்னும் வரத்தை வேண்டுகின்றேன்.

(கு) ஆறு ஆதாரம் - அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன.—தேவி அலங்காரம் 44-பார்க்க.

(இரண்டாம் பத்து உரையாதிய முற்றும்)

———

# தேவிப் பத்து

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

## மூன்றும் பத்து

### 1. திருவடியைப் பெற

திருமகள் வலக்க ணுக்கொள் தேவிநின் பாதங் காணப்
பெருகிய காத லால்நின் பெருமைசேர் கோலங் கண்டேன்
இருவினைப் பிறவி வேண்டேன் என்றைக்கும் அடிமையானேன்
இருமலர்ப் பாதம் ஈவாய் என்கணில் உள்ள தாயே !

(உ) திருமகளை வலக்கண்ணுகக் கொண்ட தேவியே! உன் திருவடியைக் காணும் ஆசையால் உன் திருவோலக்க தரிசனம் எனக்குக் கிடைத்தது; நான் பிறவியை வேண்டேன்; நான் என்றும் உனக்கு அடிமை; உன் திருவடி நிழலை எனக்குத் தந்தருள்; என் கண்களுள் விளங்கும் தாயே !

(கு) திருமகள் தேவியின் கண்: தேவி அலங்காரம் பாடல் 80, தேவி அநுபூதி செய்யுள்-15-இன் குறிப் புரையிற் பார்க்க. என்கணில் உள்ள தாயே "என் கணில் வளருஞ் சிவகாமி"—திருப்புகழ் - 608.

### 2. தேவி காஞ்சியில் தவம் செய்தது

இளமயில் போன்ற நங்காய்! இதயத்திற் சூதே இல்லாய் !
களநிறக் கரிய கண்டக் கடவுளை அணைய வேண்டி
உளமதில் வேட்கை யாகி உண்மையாம் தவமுங் கொண்டு
தளமதிற் காஞ்சி சார்ந்து தழைந்தனை தொண்டைநாட்டில்.

(உ) இளமயிலன்ன தேவி! வஞ்சனையிலாதவளே! நீலகண்டப் பெருமானை அணைய விரும்பிக் காஞ்சியில் மெய்த்தவம் கொண்டு விளங்கினை.

(கு) தேவி காஞ்சியில் தவஞ் செய்தது: தேவி அலங்காரம் பாடல் 41-இன் குறிப்புரையைப் பார்க்க. களா - களாப்பழம்.

### 3. நெஞ்சம் உருக

புலையனம் ஒழித்து நித்தம் பூக்கொடே ஏத்தி வாழும்
நிலைதரும் புத்தி கொண்ட நேயருக் கருளும் அம்மே!
கலையெலாம் வல்ல எங்கள் கந்தனைப் பெற்ற தாயே!
உலையுறு மெழுக தென்ன உருகுநெஞ் சதனை ஈவாய்.

(உ) மனத்தூய்மையுடன் மலர்கொண்டு உன்னைப் பூசிக்கும் அன்பர்களுக்கு அருளும் அம்மையே! கந்த வேளின் தாயே! பத்தியால் நெஞ்சம் உருகும் நிலைத்த புத்தியைத் தந்தருளுக!

(கு) கந்தவேள் சகலகலா வல்லவர்: "கல்விகரை கண்ட புலவோனே" "சகலகலாதரன்" — திருப்புகழ் 320, 1050. உலையுறு மெழுகதென்ன உருகுநெஞ்சு: "உலைப்படு மெழுகதென்ன உருகி" — கந்தபுராணம், 6 - 24 - 73.

### 4. சுந்தரர் வரலாறு

**கண்ணிழந் தரற்றி 'என்றன் படுதுயர் களையாய்' என்று**
**விண்ணவர் போற்ற நின்ற விறன்மிகு தொண்டர் தாமும்**
**உண்ணிறைந் தெழுந்த பாவால் உரைத்ததோர் முல்லைவாயிற்**
**கண்மையில் 'பாகோ பார்மி'ல் அமர்ந்தனை அம்மே நீதான்.**

**(உ) தமது கண்பார்வை இழந்த நிலையில் "அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே" என்று சிவபிரானிடம் முறையிட்ட அவர் தோழனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பாடப்பெற்ற திருமுல்லை வாயிற்கு அண்மையில் உள்ள "பாகோ பார்மில்**

அமைந்துள்ள திருக்கோயிலில் நீ விரும்பி அமர்ந்துள் ளாய்.

(கு) தொண்டர் - சுந்தரமூர்த்தி நாயனுர். சத்தியம் தவறினதால் தமது கண்பார்வை இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் "திருவு மெய்ப் பொருளும்" எனத் தொடங்கும் பாடல் பெற்ற தலம் (வட) திருமுல்லை வாயில். கண்ணிழந்த வரலாறு:—தேவி அலங்காரச் செய்யுள் 38-இன் குறிப்புரையிற் காண்க. 'பாகோ பார்ம்'—Bago Farm.

### 5. திருவடியைப் பெற

அன்பினுற் பாண்ட வர்க்கன் றருள்புரி சகாய ஞகித்
தன்னியன் பார்த்த னுக்குச் சாரதி யானேன் தங்காய்!
மன்பதை காக்கத் முல்லை வாயிலில் அமர்ந்து வாழும்
என்பொனே எந்தாய் உன்றன் இணையடி இனிதே ஈவாய்.

(உ) பாண்டவர்க்குச் சகாயமாய்ப் பார்த்தனுக்கு (அருச்சுனனுக்குச்) சாரதியான திருமாலின் தங்கையே! உலகோரைக் காக்கத் திருமுல்லை வாயிலில் வீற்றிருக் கும் தாயே! உன் திருவடியைத் தந்தருளுக!

### 6. ஆண்டு அருளியது

பற்றறு மனத்த ராகிப், பார்வதி! நின்னை நாடி
உற்றுனைப் பிரியேன் என்றே இரவொடு பகலும் ஓதி
அற்றநெஞ் சுடைய பக்தர்க் கருள்செயும் அன்னை யேநீ
அற்புதம் காட்டி என்னை ஆண்டநின் கிருபை என்னே.

(உ) பற்றற்ற மனத்தராய்த் தேவியே! உன்னை விரும்பி உன்னைப் பிரியேன் என்று இரவும் பகலும் ஓதும் பக்தருக்கு அருள் புரியுந் தாயே! நீ ஓர்

அற்புதத் தோற்றத்தைக் காட்டி என்னை ஆண்ட கிருபையை என்னென்று வியப்பேன்!

(கு) அற்புதங்காட்டி ஆண்டதை அடுத்தபாடலிற் காண்க.

### 7. மனத்திற் கோயில் கொண்டது

பரிவிலாப் பேதை என்னைப் பரிவினால் ஆண்டு கொண்டாய்
தெரியநீ கனவில் தோன்றிச் சிரித்தநின் முகத்தைக் காட்டி,
அரியதோர் பாடல் கேட்ட அற்புதம் என்னே என்னே
எரியினில் மெழுகு போன்ற என்மனங் கோயில் கொண்டாய்.

(உ) அன்பிலியாகிய என்னை நீ அன்புடன் ஆண்டு கொண்டாய்! சிரித்த முகத்துடன் என்னுடைய கனவில் தோன்றிப் "பாடல் பாடுக" என்று கேட்ட அற்புத நிகழ்ச்சியை என்னென்றுரைப்பேன்! தீயிலிட்ட மெழுகு போல உருகுகின்ற என் மனத்தில் கோயில் கொண்டனை.

(கு) தேவி இந்தப் பதிக ஆசிரியையின் கனவில் ஓர் அற்புதக்கோலத்தோடு தோன்றி, "நான் கௌசிககோத்திரத்தினள்; என் பெயர் துளசி; என்மீது பாடுக" எனக் கேட்டனள் என்பது நிகழ்ச்சி. பின்வரும் 'கனவிளக்கப் பாடல்'-2 பார்க்க.

### 8. கண்ணோக்கம் பெற

பத்துடைப் பத்தர்க் குற்ற பத்திய தில்லை ஆனால்
வித்தகம் பேச வல்லேன் வினைஇலி நின்னைக் கண்டு
சுத்தநல் லகத்திற் கொண்டு தோத்திரம் செய்ய கில்லேன்
எத்திறம் உய்வேன் உன்றன் இணைவிழி நோக்கம் ஈவாய்.

(உ) பத்து இலக்கணங்களையும் உடைய பத்தர்களின் பக்தி என்னிடத்து ஒன்றேனும் இல்லை. ஆனால்

சாமர்த்தியப் பேச்சுக்களைப் பேசுவேன்; உன்னைக் கண்டு சுத்தமனத்தொடு துதியேன்; நான் உய்வது எவ்வாறு? நீதான் கடைக் கணித்தருளவேண்டும்.

(கு) பத்துடைப் பக்தர்—பத்தர்களின் பத்து இலக்கணங்களாவன:

1. கண்டம் தழுதழுத்தல் 2. நாஅசைதல். 3. இதழ் துடித்தல். 4. நடுக்கம் உறல். 5. மயிர்பொடித்தல். 6. அங்கம் வெதும்பி வியர்த்தல். 7. தள்ளாடி விழுதல். 8. கண்ணீர் பிலிற்றல். 9. கலுழ்ந்து இரங்கல். 10. ஆர்வத்தால் பரவசப் படுதல்.

"பத்துடையீர் ஈசன் பழ அடியீர்"—திருவாசகம்-திருவெம்பாவை 3.

**வித்தகம் பேசுதல்:** (சாமர்த்தியப் பேச்சு பேசுதல்) "வித்தகம் பேசவேண்டாம் பணிசெயவேண்டும்"—பெரியபுராணம்; தடுத்தாட். - 41.

### 9. அடியார்களே தேவிக்குப் பரிவாரப் படை

என்புடைச் சடையர்பெற்ற இளவலாம் முருகன் தன்னை
அன்புடை மகனுக் கொண்ட வைணவி அம்மே! அம்மே!
பொன்படை நம்பி போற்றும் பொற்புடைக் கற்புத் தாயே!
நன்படை அடியார்க் கொண்டாய் நலத்தொடு நின்னைப்போற்ற.

(உ) முருக வேளின் தாயே! சிவபிரானிடம் அடிக்கடி பொன்வேண்டிப் பெற்ற நம்பியாரூரர் (சுந்தரர்) போற்றின கற்புத்தாயே! நின்னைப் போற்றுதற்கு அடியார்களையே பரிவாரமாக் கொண்டவளே!

(கு) **தேவியின் பரிவாரம் அடியார்கள்:** "இறையோன் பரிவாரமெனும் பதமேவலையே"—கந்தரநுபூதி - 37. பொன்படை நம்பி - வைணவி ஆலயத்தை நிருமித்துப்

பாடுதற்கும் அன்பர் ஸ்ரீ S. பார்த்தசாரதி அவர்களை யும் குறிக்கும்.

## 10. நிரம்பப் பாட

நெறியிதே என்று தேறி நினைபவ ருள்ளத் துள்ளே
குறியென நின்றே என்றும் கருணையருள் சுரக்கும் தாயே!
அறிவினில் அறிவாய் வந்திங் கமர்ந்தருள் அம்மே! உன்னைக்
குறிக்கும் பாடல் கொள்ளை கொள்ளையாய்ப் பாடச் செய்வாய்.

(பொ) நன்னெறியில் நின்று உன்னைத் தியானிக்கும் அன்பர்களின் உள்ளத்தில் நிலைத்து நின்று அருள் பாலிக்கும் தாயே! அறிவின் அறிவாய் அமரும் அம்மையே! உன்னைக் குறிக்கும் பாடல்கள் கொள்ளை கொள்ளையாய் யான் பாடும்படி அருள் புரிவாயாக.

(கு) அறிவின் அறிவே! — "அறிவுக்கறிவாகி" — கந்தர்கலிவெண்பா. உள்ளத்துள்ளே தறி என:— "தொழுமாறு வல்லார் நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே" — அப்பர் - 6 - 61. பாடல் கொள்ளை கொள்ளையாய்ப் பாட: "(நிகர் சந்தத்) தமிழ் சொரிந்து பாடவும் அருள் தாராய்" — திருப்புகழ் - 860.

(மூன்றாம் பத்து உரையாதிய முற்றும்.)

# தனிப் பா

## (திருமதி சிவா அம்மையார் பாடியது)

### கட்டளைக் கலித்துறை

ஒரு[1]நம்பி யாகுநின் பாலமர் நாதனன் றுய்யக்கொண்ட
திரு[2]நம்பி யாற்றிருப் பாடலைப் பெற்ற திருவுங்கொண்ட
ஒருமுல்லை வாயுள்[3] உயிர்ப்பினை உன்றனக் காக்கிவிட்ட
பெரு[4]நம்பி பால்மகிழ் வைணவீ ! [5]பித்தியைப் பேணுவையே.

குறிப்பு :—1. *நம்பி - சிவபிரான்.* 2. *நம்பி - நம்பிஆரூரர் ;* 3. *உயிர்ப்பு - மூச்சு ; ஆவி.* 4. *பெருநம்பி - திரு. பார்த்தசாரதி அவர்கள்.* 5. *பித்தி - பித்துக்கொண்டவள்.*

---

# கனா விளக்கப் பாடல்கள்

## ஸ்ரீமதி சிவா அம்மையார் 3-3-56-ல் கண்ட கனவை விளக்க ஸ்ரீதணிகைமணி வ. சு. செ. பிள்ளை அவர்கள் பாடியவை.

மூன்றும் பத்து பாடல் 6-7 பார்க்க.

1. **ப**த்தருளம் பிரியாத பவதீ என்றும்
   பண்மலிந்த மொழியுரை வைஷ் ணவியே என்றும்
   நித்தநெறி நியமமுடன் பூஜை செய்யும்
   நிமலர் தவப் பார்த்தசா ரதிப்பேர்ச் செல்வர்
   உத்தமர்தம் மனக்கோயில் போதா தென்றே
   ஒப்பிலவர் மனையகத்தும் கோயில் கொண்டாய் !
   உத்தமிஎன் கனவிடையே உகந்து வந்த
   உன்கருணைக் கோரெல்லை உண்டோ கூறாய் ?

2. **தி**ருமாலின் அடியர்வழி காட்டிச் செல்லச்
   சிறியேன்செல் வழியெதிரே பத்திக் கோலம்
   தருமாதர் பலர்சூழத் தெய்வத் தோற்றம்
   தருநீஎன் றனைநோக்கிப் பாடல் ஒன்று

வருமோசொல் எனக்கேட்டுத் 'துளசி' என்பேர்
மாண்பாரும் 'கௌசிககோத் திரத்தேன் நான்' [என்
றொருவார்த்தை உரைத்தடன்றன் பாதப் போதை
ஒருபோதும் மறவேன் நான் போற்றி செய்வேன்.

3. சிவமாடத்தே விளங்குமெங்கள் தேவீ போற்றி
திருமாலின் மார்பகத்துச் செல்வீ போற்றி
தவமறையோன் நாவிலுறை தாயே போற்றி
தவச்செல்வர் தாம்நினைக்கும் வாழ்வே போற்றி
பவமறுக்கும் பண்புடைய பவதீ போற்றி
பாடும்படி யார்சொல்பரா சத்தீ போற்றி
நவகோணச் சக்கரத்து ஞானீ போற்றி
நாயேனை ஆட்கொண்டாய் போற்றி போற்றி.

முதல் தொகுதி முற்றும்

சுபம்

# இதர வெளியீடுகள்

1

## தேவியும் அருணகிரியாரும்

லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி தேவியார், தேவியின் மற்ற அம்ச தேவதைகள் ஆதியோரைப்பற்றி அருணகிரிநாதர் அருளிய பல நூல்களினின்றும் விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் கட்டுரையுடனும் தொகுக்கப்பட்டது.

(வைஷ்ணவி ஆலய இலவச வெளியீடு)

---

2

## திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை

(ஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா அவர்கள் தொகுத்தது)

பாராயணத் திருமுறைப் பாக்கள் தவிர, 72 பாடல்கள், 51-அநுபூதி, இரு பெரியோர்களின் சரிதச் சுருக்கங்கள், அன்னூர்மீதியற்றிய துதிப் பாடல்கள், ஸ்வாமிகளது புராணம் ஆகிய 6 அநுபந்தங்களுடன் கூடியது.

16 ஆர்ட் படங்களுடன் 228 பக்கங்கள் கொண்டது

| | | |
|---|---|---|
| அட்டைக் கட்டடம் | விலை ரூ. | 2-00 |
| சாதாரணக் கட்டடம் | ,, ரூ. | 1-50 |

---

3

டிஸ்டிரிக்ட் முனிசீப் வ. த. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| சிவஸ்தல மஞ்சரி | ... | 6 | 00 |
| திருப்புகழ் மூலம் மூன்று பாகங்கள் | ... | 12 | 00 |
| பாகம் 1 ஆறுபடை வீடுகள் | ... | 3 | 00 |
| பாகம் 2 ஸ்தலங்கள் | ... | 5 | 00 |
| பாகம் 3 பொதுப் பாடல்களும், அருணகிரி நாதர் அருளிச்செய்த ஏனைய நூல்களும் | ... | 4 | 00 |
| அருணகிரி நாதர் வரலாறும் நூலாராய்ச்சியும் (காலிகோ) | ... | 3 | 50 |
| ,, (சாதாரண பைண்டு) | ... | 3 | 00 |

கிடைக்குமிடம்:

**வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.**

292, லிங்க செட்டித் தெரு, சென்னை-1.

# முருகவேள் பன்னிரு திருமுறை

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாதிய நூல்கள்
மூலம் பொழிப்புரை, குறிப்புரை விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

அருணகிரிநாதர் அருளிய அழியாப் புகழ்பெற்ற திருப்புகழா திய நூல்கள் "அகில கலைகளையும், அருந்தத்துவங்களையும், அபரிமித வித்தைகளையும்" தம்முள் அடக்கியவை.

பழந்தமிழ்ச் சங்க நூல்கள், யோக ஞான நூல்கள், பல பிரபந்த நூல்கள், மந்திர நூல்கள், பல்வேறு புராணங்கள் ஆதாரங்களுடன் கூடிய பல அரிய சரித்திர வரலாறுகள், தத்துவ, வேத, மந்திர, யந்திர, ஆகம, விளக்கங்கள் இவை பல பல குறிப்புரைகளாக இந்நூலை அலங்கரிக்கின்றன. இன்றியமையாத பல மேற்கோள்கள் ஒவ்வொரு பக்கத்திலும், தமிழ் இலக்கியத்துக்கு அணி செய்யும் 96 வகைப் பிரபந்தங்களின் விளக்கங்களும், அவைகளுள் ஒன்றுன திரு எழுகூற்றிருக்கை என்னும் சித்ரகவி (ரதபந்தப்) படத்துடனும், பலபடப் பொருள் காணும் பாகுபாடுகள் பலவும் விளக்கப்பட்டுள்ளன. நூல் நிலையங்கள், தேவஸ்தானங்கள், மடாலயங்கள், கலாசாலை, அன்பர் இல்லங்கள் இவைகளில் நிரந்தரமாக வைத்து, பரம்பரைக்குப் பயன்படும் பூசிக்கத் தகும் பொக்கிஷம். "இப்பொக்கிஷம் இருக்கும் வீடெல்லாம் மங்களம் பொங்கும், அதைப்போன்றதொரு ரக்ஷை வேறெதுவுமில்லை" என ஆனந்த விகடனும், "Explain allusions...give quotations from ancient classics and supply relevant notes to appreciate the subtleties of thought......At least half a dozen points have been cleared up in *each page*. The get up is *good*...price *low*...publication intended not only for the devotee but also for the litterateur deserves encouragement from religious, educational institutions and universities" என Hindu பத்திரிகையும், மற்றும் மிக உயர்ந்த முறையில் பலப் பல பத்திரிகைகளும் மதிப்புரைகள் வழங்கி ஆதரவளித்துள்ளனர்.

தேவார ஒளிநெறி முதலிய நூல்களை வெளியிட்டுத் தமிழ் மறைக்கும் சமய வளர்ச்சிக்கும் பரம்பரையாக நிலைக்கக்கூடிய அரும் பெருஞ் சேவை ஆற்றிவரும்

உரையாசிரியர் : **ராவ்பகதூர்**

**தணிகைமணி, வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.**

Retd. Personal Asst. to the Inspector General of Regn.

| | பாடல் | பக்கங்கள் | விலை ரூ. | ந.பை. |
|---|---|---|---|---|
| 1. முதல் மூன்று படைவீடுகள் | 200 | 456 | 5 | 50 |
| 2. ஏனைய மூன்று படைவீடுகள் | 250 | 636 | 7 | 50 |
| 3. பஞ்ச பூதத் தலங்கள் | 210 | 555 | 6 | 00 |
| 4. ஏனைய தலங்கள் | 340 | 900 | 9 | 50 |
| 5. பொதுப் பாடல்கள் (திரு எழுகூற்றிருக்கை இரதபந்தப் படத்துடன்) | 315 | 800 | 8 | 50 |
| 6. கந்தரலங்காரம், அந்தாதி, திருவகுப்பு, அநுபூதி, வேல், மயில், சேவல் விருத்தங்கள், 11-12 திருமுறைகள் (பழந் தமிழ் நூல்கள் 44-ல் நின்றும் துதிப் பாக்கள், 41 அடியார்கள் வரலாறு முதலியன) அடங்கியது. | | 1000 | 10 | 50 |

பதிப்பாளர் : **மீனாக்ஷி கல்யாணசுந்தரம்,**

2, இரண்டாவது தெரு, வடக்குக் கோபாலபுரம், சென்னை - 6.

---

**5**

# அருணகிரி நாதர் தோத்திர மஞ்சரி

அருணகிரியார் மீது ஆன்றோர் பலர் இயற்றிய துதிப்பாக்கள். அநுபந்தங்களுடன்.

கிடைக்கு மிடம் : : விலை 75 காசு.

**S. V. சுப்ரமண்யம்**

141, லிங்கசெட்டித் தெரு, சென்னை-1.

---

# வள்ளிமலை வள்ளல்

**(R. கல்யாணசுந்தரம் இயற்றியது.)**

அண்மையில் நம்மிடை உலவிவந்து 1950-ஆம் ஆண்டில் மகாசமாதி அடைந்த **திருப்புகழடியார்ச் திருவடிச் சென்னியார்** என்னும் **வள்ளிமலைத் திருப்புகழ்ச் சச்சிதானந்த சுவாமிகள்** 'திவ்ய சரிதம் வெளிவந்து விட்டது. நாற்பது வயது வரை எழுத்து வாசனையில்லாமல் முரட்டு நாஸ்திகராக இருந்த இம்மஹான், இறை திருவருளால் "அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்...இமைப்பொழுதில்" கைவரப் பெற்றவர். இவரது அற்புத வாழ்க்கை சுவைமிக்க பலபல இனிய வரலாறுகள் கொண்டது.

மதிப்பிற்குரிய டாக்டர் **M. R. குருசுவாமி முதலியார்** உணர்ச்சி மிக்க முன்னுரையில், சுவாமிகளை **யோகி** எனவும், **ஞானி** எனவும், **சித்தர்** எனவும் பலபடக் கூறி, **பக்தர்** என்றும் விளக்குகிறார். ராவ்பகதூர் தணிகை மணி **வ. சு. செங்கல்வராயப் பிள்ளை** சுவாமிகளது சரித்திரத்தை, நால்வரது வாழ்க்கைச் சம்பவங்களுக்கே ஒப்பிடுகின்றார். வாகீச கலாநிதி **கி. வா. ஜகந்நாத அய்யர்** சுவாமிகள் அருணகிரிநாதரது அவதாரமே எனவும் பாராட்டுகின்றார். ரிஷீகேசம் சுவாமி **சிவானந்தா** அவர்கள் சுவாமிகளை முருகரது அவதாரமே எனவும் போற்றுகின்றார், இந்நூலைப் பல படங்கள் அலங்கரிக்கின்றன.

திருவருள் மஹிமையின் விளக்கமே இந்நூல். திருச்செங்கோடு, திரு அருணை, வள்ளிமலை, பழநி, கதிர்காமம் இன்னும் பற்பல தலங்களின் வரலாற்றுச் சுருக்கமும், சேஷாத்ரி சுவாமிகள், பகவான் ரமண மஹரிஷி, மஹான் ஈசுவரசுவாமிகள் இவர்களது வரலாறுகளும் அடங்கியுள்ளன. திருப்புகழ் மேற்கோள் பலவும், முத்தமிழின் அருமை பெருமையும் இந்நூலில் கண்டு களிக்கலாம்.

இது படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் பயக்கும்; பக்திப் பயிரைப் பண்புடன் வளர்க்கும்.

**பக்கம் 272 + 24.** **விலை ரூ. 2—8—0 (2-50 nP.)**

பிரசுரம்:

**இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்.**

14, சுங்குராம செட்டித் தெரு, :: சென்னை - 1.